# தினச்செய்தி

Registered as a Newspaper

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 | ஏப்.04–10, 2016 | செய்தி – 27


## சம்பந்தருக்கும், விக்கியருக்கும் தெரியாத விடயத்தை

# இஞ்சருங்கோ!

## நீங்களாவது தெரிந்து கொள்ளுங்கோ!




எழுதிய அரசியல் யாப்பு ஒன்று மட்டும் தான் ஒரு நாட்டிற்கு இருக்கும். ஆனால், ஒரு தேசம் இரண்டு இனம் போல இரண்டு அரசியல் யாப்புக்கள் நடைமுறையில் உள்ள நாட்டை உங்களுக்குத் தெரியுமா?

அவை இரண்டுமே சட்டப்படியானவை. ஒன்று அமுலில் உள்ளது, மற்றது தூங்கு கின்றது. புதினமாக இருக்கின்றதா? இது தான் யதார்த்தம்.

ஆனால் புதிய அரசியல் யாப்பு ஒன்றை வரையத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சீ.வி. விக்கினேஸ்வரன் தனது சொந்தக் கட்சியை விட்டு விட்டுத், "தமிழ் மக்கள் பேரவை" என்ற ஒன்றை உருவாக்கியது தெரியும் தானே? அவர் புதிய சட்ட வரைவையும் தயாரித்தார். சமர்பித்தார். உண்மையைப் புரியாமல் நடந்து கொண்டார் என்றால் மிகையாகாது.

02 இல்

பிரபாகரனின் பேட்டி

08 இல்



தமிழ்நாட்டில் ஆறுமுனைப் போட்டி

04 இல்

உண்மைகளை உரத்துக் கூறும் உரிமைக் குரல்

தினச்செய்தி என்றும் உங்களுடன்

T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# குமார் குணரட்னமும் இரட்டைப் பிரஜாவுரிமையும்

முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினர் குமார் குணரட்னத்தின் நீதிமன்ற வழக்கு விசாரணைத் தீர்ப்பு இரட்டைப் பிரஜாவுரிமை கோருபவர்கள் விடயத்தில் ஒர் புதிய திருப்பம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை மனிதாபிமான அடிப்படையில் செய்ய அரசு முன்வரவில்லை என்பது குணரட்னவின் தீர்ப்பு மூலம் தெளிவாகத் தெரிய வருகின்றது.

குமார் குணரட்னத்திற்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதித்து சென்ற 31 ஆம் திகதி கேகாலை நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ் உத்தரவை வழங்கினார்.

குமார் குணரட்னம் குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருந்த குற்றச்சாட்டு நிரூபணமானதைத் தொடர்ந்து ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனையும், ரூபா ஐம்பதாயிரம் குற்றப் பணமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

குமார் குணரட்னம் ஒரு தமிழர். அவர் ஜனதா விமுக்தி பெரமுனவின் முக்கிய உறுப்பினராக இருந்தார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையால் உயிருக்கு ஆபத்து எனத் தெரிவித்து, ஆர்.எம்.தயாள் என்ற பெயரில் அவுஸ்திரேலியா சென்று, அங்கு குமார் குணரட்னம் நோயெல் எனப் பெயர் மாற்றம் செய்து அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றார்.

கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அவுஸ்திரேலியக் கடவுச் சீட்டு மூலம் இலங்கை வந்திருந்தார்.

இலங்கையில் அவர் தங்கியிருப்பதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத வீசா முடிவடைந்த நிலையில், அனுமதியின்றித் தங்கயிருந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.

கைதாகிய நாள் முதல் பதினாறு தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார்.

இவர் சார்பில், அசித்த சிறிவர்த்தன, நுவன் போப்பகே, ருக்மல் பண்டார, ஆனந்த குமாரசிங்க, அஜித் குமார, கெனடிய கெடிகார ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

சிறைத்தண்டனை வழங்கப்பட்ட பின்னர், அவரைச் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட போது, குணரட்னத்தின் தாயார் அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டார்.

குமார் குணரட்னம் தான் இலங்கையர் என்றும், தனக்கு மீண்டும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். தமிழன் என்ற ஒரே காரணத்திற்காகப் பிரஜாவுரிமையை மீண்டும் வழங்க மறுக்கிறார்கள் எனக் குற்றம் சுமத்தினார்.

தற்சமயம் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு மீண்டும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப் பல புதிய நடைமுறைகளை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

முன்னைய காலத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை முப்பத்து மூவாயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அரசு வழங்கியிருந்தது.

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்களிற்கும், நாட்டிலே பிரஜைகளாக இருந்தவர்களுக்குரிய சகல உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டன. அவர்கள் தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கும் உரிமையும், வழங்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களிற்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருந்தது.

அவர் 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த அரசாங்கம் இரட்டைப் பிரஜாவுரிமை பெறுபவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிபந்தனையை விதித்துள்ளது

ஆனால் இலங்கை அரசாங்கங்கள் முன்னதும், தற்போதையதுமான ஒரு விடயத்தைக் கணக்கில் எடுக்கத் தவறி விட்டன.

நாட்டில் சுமுகமான சூழலை அந்தக் காலத்திலிருந்த அரசாங்கம் உருவாக்கத் தவறியதால்தான், நாட்டில் குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் தம் உயிரைப் பாதுகாப்பதற்கு வெளிநாடுகளிற்குச் சென்று வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அன்றைய ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் நாட்டு மக்களுக்கு சுமுகமான சுழலை உருவாக்கத் தவறிவிட்டன.

அவ்வாறான தவறினால் தான் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதை ஆட்சிக் கட்டிலில் உள்ளவர்கள் கருத்தில் கொள்ளத் தவறி விட்டார்கள். தற்சமயம் நாட்டில் சுமுகமான நிலை உருவாகி வருகின்றது.

இன்று வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடியவர்கள் மீண்டும் தமது சொந்த நாட்டிற்கு வர முயற்சிக்கிறார்கள். அவ்வாறு வருபவர்களிற்கு பல கட்டுப்பாடுகளும், நிர்ப்பந்தங்களும் விதிக்கப்படுகின்றது. அவர்களிற்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதில் அரசு கறாராக உள்ளது.

இதனால் தான் குணரட்னம் போன்றவர்கள் இன்று மறியல்சாலைக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று கூறினால் மிகையாகாது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# சம்பந்தருக்கும் விக்கியருக்கும் ...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனும் புதிய யாப்பிற்குத் தங்களது வரைவைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

சமஷ்டியா? ஒற்றையாட்சியா? என்ற கேள்விக்குப் பதில் தர இவ்விருவரும் திட்டமிட்டுள்ளார்கள்.

ஆனால் உண்மை நிலை என்ன என்பதை யாரும் புரிந்து கொள்ள முன்வரவில்லை.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம், குடியரசு அரசியல் சட்டத்தை 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி பிரகடனப்படுத்தியது.

அதேபோல, 1978 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா உருவாக்கிய புதிய அரசியற் சட்டம் அமுலுக்கு வந்த போது, அந்தச் சட்டத்தின் அத்தியாயம் 23 இன் 171 ஆவது ஷரத்தில் "நீக்கம்" என்ற தலைப்பில்,

"171. ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளன்று, வகுத்தமைக்கப்பட்டுச் சட்டமாக்கப்பட்ட அரசியலமைப்பு இத்தால் நீக்கப்படுகின்றது." – என அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதே நேரம், 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அமுலுக்கு வந்த குடியரசுச் சட்டத்திற்கு முன்னர் இந்த நாட்டில் 1946–1947 ஆம் ஆண்டுகளுக்கான அரசியற் சட்டம் (CEYLON CONSTITUTION AND INDEPENDENCE ORDERS IN COUNCIL 1946 AND 1947) இந்த அரசியற் சட்டம் சோல்பரிப் பிரபு தலைமையிலான குழுவினால் உருவாக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திர நாடாக, (டொமினியன்) அந்தஸ்துப் பெற்ற நாடாக மாறுவதற்கு இந்த அரசியற் சட்டம் தான் காரணமாகும்.

இந்த அரசியற் சட்டம் நாடு சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் இன்று வரை அமுலில் உள்ளது.

மேலே குறிப்பிட்டது போல, 1978 ஆம் ஆண்டு அரசியற் சட்டத்தில் 23 ஆவது அதிகாரத்தில் 171 ஆவது ஷரத்தில் "நீக்கத்தை", 1972 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசியற் சட்டம் செய்யத் தவறிவிட்டது.

1972 ஆம் ஆண்டு குடியரசுச் சட்டம் அமுலுக்கு வந்த போது, 1946 – 1947 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர யாப்பு நீக்கப்படவில்லை. அது இன்னும் அமுலில் உள்ளது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் இரா. சம்பந்தன் ஏன் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை?

தமிழ் மக்களுக்குப் பதில் தர வேண்டிய கடமையும், பொறுப்பும் அவருக்கு உண்டு. அன்றைய தருணத்தில் இலங்கை அரசியல் யாப்பின் 29 ஆவது ஷரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

29 – (1)இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களின் படி, நாடாளுமன்றம் அமைதியையும், சமாதானத்தையும், தீவில் நல்ல அரசையும் உருவாக்க சட்டம் நிறைவேற்றும் அதிகாரம் கொண்டது.

(a). ஆனால் எந்த ஒரு சட்டமும், எந்த ஒரு மதச் சடங்குகளையோ, மதத்தையோ பின்பற்றத் தடைசெய்யவோ, கட்டுப்படுத்தவோ முடியாது.

(b). ஏனைய இனத்தவர்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படாத கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்ட ஒரு இனத்தவர்களுக்கு மாத்திரம் வழங்க முடியாது.

(c). எந்த ஒரு தனிநபருக்கோ, இனத்துக்கோ, சமயத்துக்கோ தனியான சலுகைகள் வழங்கக் கூடாது.

(d). எந்த ஒரு சமய அமைப்பின் யாப்பினையும் அந்த அமைப்பின் நிர்வாக சபையின் சம்மதமின்றி மாற்றியமைக்க முடியாது. மேலும் சமய அமைப்பு சட்ட பூர்வமாக அமைக்கப்பட்டிருந்தால், அந்த நிர்வாக அமைப்பின் வேண்டுகோளின்படியே மாற்றம் செய்ய வேண்டும்.

3 – இரண்டாவது உப பிரிவிற்கு மாறாகச் செய்யப்படும் மாற்றங்கள் செல்லுபடியாகாது.

எனவே சிறுபான்மை மக்களின் நலனைப் பேணும் பிரித்தானியாவால் வழங்கப்பட்ட யாப்பில் உள்ள 29 ஆவது ஷரத்து சிறுபான்மை மக்கள் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது.

இந்தச் ஷரத்துக்களை எக்காரணம் கொண்டும் இலங்கை நாடாளுமன்றத்தினால் மாற்றியமைக்க முடியாது. (ENTRENCH CLAUSE)

1972 ஆம் ஆண்டின் குடியரசுச் சட்டத்தை உருவாக்குவதற்கு முழுப் பொறுப்பாக அன்றைய அரசின் அமைச்சரான டாக்டர் கொல்வின் ஆர். டீ.சில்வா இருந்தார்.

1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பு பிரகடனப்படுத்தப்பட்டபோது 1946–1947 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சுதந்திர அரசியற் சட்டத்தை இரத்துச் செய்யவோ, நீக்கவோ அன்றைய அரசினால் முடியவில்லை.

எனவே முழுமை பெறாத ஒரு அரசியற் சட்டத்தை 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி, இலங்கை நாடாளுமன்றம் அரசின் பெரும்பான்மைப் பலத்தைத் துணையாக வைத்துக் கொண்டு நிறைவேற்றியது.

அவ்வாறு நிறைவேற்றிய அந்த சமயம் 1946 – 1947 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்தால் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பும் தொடர்ந்தும் அமுலில் இருந்து வருகின்றது.

அதனை அன்று தொடக்கம் இன்று வரையுமான தமிழ்த் தலைவர்கள் எவருமே நீதிமன்றம் சென்றோ, இன்றேல் வேறு விதத்திலோ அவர்களால் உண்மை நிலையை நிலை நிறுத்த முன்வரவில்லை. முடியவுமில்லை.

## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

Thinacheithi Weekly NewspaperAdvertisement Rate Card

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x 40 | 50000 . 00 | 60000 . 00 |
| Half page | 08x20 | 25000 . 00 | 30000 . 00 |
| Qatar page | 04x20 | 12500 . 00 | 15000 . 00 |
| Per col /cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front strip ad | 10x5 | | 10000 . 00 |
| Front height ad | 4x15 | | 12000 . 00 |
| Per col /cm | 8x8 | | 15000 . 00 |
| **Ear space** | | | |
| Front Page | 8x8 cm | | 25000 . 00 |
| Back page | 8x8 cm | | 20000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**
**Per col/cm 1x1 Black &White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**
**Per col/cm 1x1 Black &White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**
***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# வரைவு வர்த்தக முதலீட்டு ஒப்பந்தங்கள்

## நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பு



(கொழும்பு)

வர்த்தக முதலீடுகள் சம்பந்தமாக வெளிநாடுகளுடன் செய்யப்படும் சகல ஒப்பந்தங்களின் வரைவுகள் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான ஸ்ரீ கொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கம் விரைவில் அமெரிக்கா, இந்தியா, சீனா, சிங்கப்பூர், ஜப்பான், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மற்றும் சார்க் நாடுகளுடன் வர்த்தக முதலீட்டு ஒப்பந்தங்கள் செய்யத் திட்டமிட்டுள்ளது எனக் கூறினார்".

மேலும், இவ்வாறான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்ட பின்னர், முதலில் அந்த வரைவு ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

"நாடாளுமன்றத்தினூடாக வரைவு முதலீட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அக்கறையுள்ள நபர்கள், ஊடகங்கள், தொழில் சார்ந்தவர்கள், வர்த்தகர்களும் அறிந்து கொள்ள முடியும். இதுவே எங்களால் சிந்திக்கக் கூடிய சிறந்த ஜனநாயக வழிமுறையாகும். எனவே இதன் மூலம் நாங்கள் எதையுமே ஒழித்து மறைக்க விரும்பவில்லை. இவ்வாறு செய்வதால் இந்த வரைவு ஒப்பந்தங்கள் சம்பந்தமாக ஆலோசனை, விளக்கம், வியாக்கியானம் வழங்குவதற்கும் ஏதுவாக இருக்கும்" என்று கூறினார்.

மேலும், அவர் பேசுகையில், "இவ்வாறு வர்த்தக முதலீட்டு ஒப்பந்தங்கள் இந்தியாவுடன் பொருளாதார தொழில்நுட்ப கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்" என்று பிரதமர் வலியுறுத்திக் கூறினார்.

எனவேதான் "பொருளாதார முன்னேற்றத்திற்காக வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைவரும் அறியும்படி செய்து, அவை நாடாளுமன்றத்தின் அனுமதியுடனேயே முன்னெடுக்கப்படும். எமது அரசாங்கத்திடம் எந்தவிதமான ஒழிவு மறைவோ இரகசியமோ இல்லை என்பதை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும் பத்து லட்சம் தொழில் வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் இன்னும் சில மாதங்களில் கைச்சாத்திடப்படும்" என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

"கடந்தவார இறுதியில் ஜனாதிபதியும் இந்த ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக ஆராயுமாறும் அதற்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று கூறினார். சீனா, இந்தியா உட்பட அனைத்து நாடுகளினதுமான ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்தில் எனதும், ஏனையோரினதும் கருத்துக்களுடனும், ஆதரவுடனும் முன்னெடுத்துச் செல்லப்படும். இதுவே ஜனநாயகமாகும். இதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறினார்.

# இந்திய மீனவர்களின் கைது தொடரும்



இந்திய நிதியுதவியின் கீழ் முல்லைத்தீவு மீனவர்களுக்கு மீன் பிடி உபகரணங்கள் மற்றும் படகுகள் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்ஹா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர உரையாற்றுகையில், "இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் இந்திய மீனவர்களின் கைது தொடரும்" எதிர்வரும் மே மாதத்தில் இந்தியா சென்று மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கம் இலங்கைக்கான உதவித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மீனவர்களுக்கு படகுகளை வழங்கியுள்ளது. இதற்கு முன்னரும் 175 படகுகள் மன்னார் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வடக்கில் மீனவர்கள் நலன்சார் விடயங்கள் பல முன்னெடுக்கப்பட உள்ளன.

பருத்தித்துறையில் பாரிய துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதே போன்று குருநகர் மற்றும் பேசாலை ஆகிய பகுதிகளிலும் துறைமுகங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் காரை நகர் பகுதியில் படகுகள் திருத்தும் நிலையம் ஒன்றையும் அமைக்கவுள்ளோம்.

எனவே கடற்றொழிக்கு உகந்த சூழலை வடக்கில் கட்டியெழுப்பி வருகின்றோம். இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. சுமுகமான தீர்வை எட்டுவதற்கான பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம். அது வெற்றியடையும் வரை இந்திய மீனவர்களின் கைது நிறுத்தப்பட மாட்டாது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தின் போது மீனவர்கள் பிரச்சினை கவனத்தில் கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் எதிர்வரும் மே நான் இந்தியா செல்லவுள்ளேன் என குறிப்பிட்டார்.

# சுவீடன் விமான நிலையத்தில் வெடிகுண்டுப் பீதி

(ஸ்டாக்ஹோம்)

சுவீடன் நாட்டின் 2 ஆவது பெரிய விமான நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வெடித்ததாக பெரும் பீதி ஏற்பட்டது.

எனினும் வெடிகுண்டுகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இரண்டு மர்மப் பைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



சுவீடனின் லான்ட்வெட்டர் நகரில் உள்ள விமான நிலையம் அந்த நாட்டிலேயே 2 ஆவது பெரிய விமான நிலையமாகும்.

குண்டு வெடித்ததாக எழுந்த அச்சநிலையை அடுத்து விமானநிலையத்தில் இருந்த பயணிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். பாதுகாப்புப் படையினர் வெடிவிபத்து நடந்ததாக கூறப்பட்டு உள்நாட்டு முனையப் பகுதியை மூடி சீல் வைத்தனர். அந்தப் பகுதியில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. அப்போது அங்கு 2 மர்மமான பைகள் இருப்பதைப் பொலிஸார் கண்டுபிடித்து அவற்றை மீட்டனர்.

முன்னதாக இந்த விமான நிலையத்திற்கு வியாழக்கிழமை காலையில் வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது. இதையடுத்து பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பீட்டர் அட்லெர்சன் தெரிவித்தார்.

# கருக்கலைப்பு கடும் போக்கை தளர்த்தினார் டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட முன்வந்துள்ள, டொனால்ட் ட்ரம்ப் கருக்கலைப்புச் சம்பந்தமாக கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்தார்.

அமெரிக்க அரசு கருக்கலைப்பைத் தடைசெய்தால், அதன் பின்னர் எந்த ஒரு பெண்ணாவது தனது கர்ப்பிணித் தன்மையைக் கருக்கலைப்பின் மூலம் முடிவு கட்டுவதற்கு ஆளாக வேண்டிய நிலைவந்தால், அவர்கள் கடும் தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்ற கடும் போக்கை அவர் கொண்டிருந்தார்.

கோடீஸ்வரரான குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் கருக்கலைப்பு சம்பந்தப்பட்ட கடும் போக்கு குடியரசுக் கட்சியினர் மத்தியிலும், ஜனநாயகக் கட்சியினர் மத்தியிலும் கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் உருவாக்கிற்று.

அதையடுத்து, டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய கடும் போக்கைத் தளர்த்திக் கொண்டுள்ளார்.

நியூயோர்க் நகரத்தைச் சேர்ந்த கோடீஸ்வரர் டொனால்ட் ட்ரம்ப், "தான் வோஷிங்டனிலுள்ள செல்வாக்கு மிக்க அரசியல் கும்பலுக்கு மாறுபட்டவன்" என்று தன்னைக் காட்டிக்கொண்டு, குடியரசுக் கட்சி வாக்காளர்கள் மத்தியில் அமோகமாக ஆதரவைத் திரட்டி வருகின்றார்.

அதே நேரம், கருக்கலைப்பிற்கு எதிரானவர் என்று தன்னைக் காட்டிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு உண்டு. பழமை விரும்பும் குடியரசுக் கட்சியினரைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கு அது அவசியமாகின்றது. பெண்களைப் பற்றியும் சிறுபான்மையோர் பற்றியும் அவர் கருத்து வெளியிட்டார். அக்கருத்தால் கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் ஆளாகி வருகின்றார்.



# அரசகேசரியின் பதில்கள்

**கேள்வி :** ஜனாதிபதி மைத்திரியை இலக்கு வைத்து தாக்குதல் நடாத்த யாழில் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் மறவன்புலோ பகுதியில் தற்கொலை அங்கி மற்றும் வெடி பொருட்கள் மீட்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதான செய்திகள் வெளிவந்துள்ளன. இதில் ஏதாவது பின்புலம் இருக்குமா அரச கேசரியாரே?

**பதில் :** முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சு போட வேண்டாம்.

*கதிரவன் சாவகச்சேரி*

**கேள்வி :** புனர்வாழ்வு அளிக்கப் படாதவர்களால் நாட்டிற்கு அச்சுறுத்தல் என்கிறார் கோத்தா?

**பதில் :** யோசிக்க வேண்டிய விடயம்.

*வேணுசன் முல்லைத்தீவு*

**கேள்வி :** சீனாவுடனான பாதுகாப்பு உறவுகள் இவ்வருடம் மேலும் வலுவடையுமென அரசாங்கம் தெரிவித்துள்ளதே?

**பதில் :** பிரதமர் ரணிலின் சீன விசயத்தின் பின்னர் தான் இதைப் பற்றி உறுதிப்படுத்த முடியும்.



*நிதர்சன் மஸ்கெலியா*

**கேள்வி :** தமிழ் மக்களின் நிலையை உயர்த்துவதற்கு கடந்த மூன்று வருடங்களில் விக்னேஸ்வரன் என்ன செய்தார் என ஜாதிக ஹெல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது சரியா?

**பதில் :** நூறுக்கு நூறு வீதம் சரி, பொதுச் சேவையில் உள்ளவர்கள் பற்றி எவரும் கேள்வி எழுப்பலாம் விதி விலக்கு அல்ல.

*அருணன் யாழ்ப்பாணம்*

**கேள்வி :** எதற்கெடுத்தாலும் மஹிந்தவின் அரசையே குறைகூறும் நல்லாட்சி அரசாங்கத்திலும் மஹிதவின் அரசில் உள்ளவர்களே இருக்கின்றனர். அவ்வாறெனில் யாரை குறை கூறுகின்றனர்?

**பதில் :** வேலிக்கு ஓணான் சாட்சி.

*மகேந்திரன் வவுனியா*

**கேள்வி :** வரலாறு காணாத வகையில் இலங்கை ரூபாவின்

**பதில் :** இனிமேல் வெளிநாட்டுக் காசுகளுக்கு நிறைய இலங்கை ரூபாக்கள் கிடைக்கும்.

*கார்த்திகேயன் மானிப்பாய்*

**கேள்வி :** நயினாதீவில் 75அடி புத்தர் சிலை புதிதாக அமைப்பு இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துமா?

**பதில் :** எனக்குத் தெரியாது.

*மலர்விழி புங்குடுதீவு*

**கேள்வி :** மஹிந்தவின் தோல்விக்கு அவரது சகோதரர்களான கோத்தாவும், பசிலும் தான் காரணமென கலாநிதி தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளது குறித்து?

**பதில் :** மஹிந்தவின் தோல்விக்கு சிறுபான்மையின மக்கள் வாக்களிக்கத் தவறியது தான் காரணம்.

*இஸ்மாயில் புத்தளம்*

**கேள்வி :** வடக்கில் பொருத்து வீடுகள் நமது காலநிலைக்கு ஒத்துவருமா?

**பதில் :** ஒத்துவராது என்று வட மாகாண சபையின் தீர்மானம் ஒன்று கூறுகின்றதே.

*வடிவேல் அச்சுவேலி*

**கேள்வி :** கூட்டமைப்பிற்கு மாற்றான அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கும் வகையில் ஆனந்த சங்கரி தலைமையில் கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இது வெற்றி பெறுமா அரசகேசரியாரே?

**பதில் :** சங்கரியார் தலைகீழாக நின்று பார்க்கிறார். இதற்கு மக்கள் ஆதரவளிக்க முன்வரவேண்டுமல்லவா?

*காந்தன் புளியங்குளம்*

---

# ஆறுமுனைப் போட்டியில் பலசாலி யார்?

ஆறுமுனைப் போட்டி என்பது உறுதியாகிவிட்டது. அ.தி.மு.க., தி.மு.க., பா.ம.க., விஜயகாந்த் அணி, பா.ஜ.க., நாம் தமிழர் ஆகிய ஆறு அணிகள் அணிவகுத்து நிற்கின்றன.

கடந்த 25 ஆண்டுகளில் (1991–2016) தமிழகத்தில் நடந்த ஐந்து சட்டப் பேரவைத் தேர்தல்கள் பெரும்பாலும் மும்முனைப் போட்டிகளையே சந்தித்து வந்திருக்கின்றன. 1996 இல் மட்டும் நான்கு முனைப் போட்டி இருந்தது.

பல முனைப் போட்டி இருந்தால், நடுநிலை வாக்குகள் ஓர் அணி அல்லது ஒரு கட்சிக்கு ஆதரவாகவோ எதிராகவோ பதிவாகாமல் அவை பலவாறாகச் சிதறும். அவ்விதம் பலவாறாகப் பிரியும் போது சிறிய அளவு வாக்கு வித்தியாசங்கள் கூட வெற்றி, தோல்விகளைத் தீர்மானித்துவிடும் என்பது யதார்த்தம். அதாவது, எல்லாக் கட்சிகளுக்கும் ஒவ்வொரு வாக்கும் முக்கியம்.

இந்த யதார்த்தம் புரிந்த எல்லாக் கட்சிகளுமே உள்ளூர அச்சத்தையும் உதட்டில் புன்சிரிப்பையும் சுமந்து திரிகின்றன. இதுவரை இப்படி ஒரு வியூகத்தைத் தமிழகத் தேர்தல் களம் சந்தித்ததில்லை என்பதால், இது யாருக்கு சாதகமாக அமையும் என்பது குறித்துக் கணிப்புகளும் ஊகங்களுமே உலாவுகின்றன.

நெடுங்காலம் பின்னோக்கிப் போகாமல், கடந்த 2011 தேர்தல் முடிவுகளை எடுத்துக் கொண்டு, அதிலும் சிறிய வாக்கு வித்தியாசங்கள் எப்படி முடிவுகளைத் தீர்மானித்தன என்று பார்க்கலாம்.



2011 தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவியது. அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க.வின் தலைமையில் ஓர் அணியும், எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வின் தலைமையில் ஓர் அணியும், பா.ஜ.க. தலைமையில் ஓர் அணியும் களத்தில் இறங்கின.

தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது தி.மு.க. அணி, அ.தி.மு.க. அணி ஆகிய இரு பெரும் அணிகளுக்கு இடையிலேதான் போட்டி என வாக்காளர்கள் கருதினார்கள். நடைமுறையில் கடந்த 2011 தேர்தலில் இருமுனைப் போட்டி நிலவியது என்றே கொள்ள வேண்டும். இரு பெரும் திராவிடக் கட்சிகளின் அணிகளும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட போது என்ன நடந்தது? சிறிய வாக்கு வித்தியாசம் எப்படி அரசியல் கட்சிகளின் தலைவிதியைத் தீர்மானித்தன?

இம்முறை, தி.மு.க. கூட்டணியில் ஓரளவு வாக்கு வளம் கொண்ட கட்சிகள் இல்லாததைப் போலவே, அ.தி.மு.க. கூட்டணியிலும் தே.மு.தி.க. மற்றும் மக்களிடம் ஓரளவு செல்வாக்குக் கொண்ட இடதுசாரிகள், புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் இல்லை.

கடந்த முறை, தி.மு.க. ஆட்சியிலிருந்து கொண்டு தேர்தலைச் சந்தித்தது. அப்போது ஆட்சிக்கு எதிரான அதிருப்தி வாக்குகள் அ.தி.மு.க. விற்கு உதவின. இந்த முறை ஆட்சியிலிருந்து கொண்டு அ.தி.மு.க. தேர்தலைச் சந்திப்பதால் ஆட்சிக்கு எதிரான அதிருப்தி வாக்குகளையும் அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பலமுனைப் போட்டி என்பதால் அவை கொத்தாக தி.மு.க.விற்குக் கிடைக்காமல் சிதறுண்டு போக வாய்ப்புண்டு என்பதைக் குறித்து வேண்டுமானால் அது ஆறுதல் கொள்ளலாம்.

அன்றிருந்த காங்கிரஸ் இன்று பிளவுபட்டிருக்கிறது. மிச்சம் உள்ள காங்கிரஸில் கோஷ்டி மோதல்கள் பகிரங்க ரகசியம். இந்த நிலையில், அதன் வெற்றி வாய்ப்புகள் எப்படி அமையும் என்பதைத் தேர்தலில்தான் பார்க்க வேண்டும்

எனினும், கூட்டணியால் அதிக பலன் பெற்ற கட்சி என்று தே.மு.தி.க.வைத்தான் சொல்ல வேண்டும். 2011 தேர்தலில் அது 29 இடங்களில் வென்றது. அதில், 11 இடங்கள் பத்தாயிரத்திற்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வென்ற இடங்கள். அந்தக் கட்சியால், கூட்டணி பலத்தால் பா.ம.க.வின் தலைவர் ஜி.கே. மணியை 2, 500 இற்கும் சற்று அதிகமான வாக்கு வித்தியாசத்தில் (2,594 வாக்குகள்) வீழ்த்த முடிந்தது.

இந்தத் தேர்தலில். ஒவ்வொரு வாக்கும் வரலாறு காணாத வலிமை பெறுகிறது. இதுநாள் வரை கிங் மேக்கராக இருந்த வாக்காளர் இந்த முறை கிங் ஆகிறார்.

நன்றி – தினமணி

# உயர்குறிக்கோள், சமூக பயனுடையவராக நம்மை நாமே உருவாக்க வேண்டும்

## ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. குணநாதனுடனான செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

"வறுமை கல்விக்குத் தடையல்ல" விடாமுயற்சியுடன் கல்வி கற்று உயர் குறிக்கோளை நோக்கி பயணிக்கும் எவரும் வாழ்க்கையில் உயர் நிலையை அடைவது திண்ணம். இது மாற்றமுடியாத விதி. சமுதாயத்தினர் முழு அர்ப்பணிப்போடு கல்வி கற்று உயர் இலட்சியங்களை அடைய வேண்டும். சமூகத்திற்குப் பயன் உடையவர்களாக, சமூகத்தை வழிநடாத்துபவர்களாக, சிறந்த ஆளுமைப் பண்பு கொண்டவர்களாக நம்மை நாமே உருவாக்குவதற்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது பெரு விருப்பாகும்."

மேற்கண்டவாறு ஓய்வு பெற்ற யாழ் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளரும் தீவகக் கல்வி வலய (நிர்வாகம்) பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. இராமநாதன் குணநாதன் குறிப்பிட்டார்.

அண்மையில் தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்த இராமநாதன் குணநாதன் அவர்களுடைய மணிவிழா நிகழ்வில் கலந்து கொண்ட பெருந்தொகையான கல்வியாளர்கள், நிர்வாக அதிகாரிகள், வெளிநாட்டு அன்பர்கள் பெருமளவு நிதி உதவியை வழங்கி "குணநாதம்" என்னும் சிறப்பு மலரை வெளியிட்டமை அவரது சேவைக்குக் கிடைத்த சான்றாகக் கொள்ளப்படுகின்றது.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், சமூகப்பணி, ஆசிரியத்துவம், சிறந்த தலைமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் பரிமாணம் மிக்கவராகத் திகழும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராமநாதன் குணநாதன் அவர்கள் "தினச்செய்தி" பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டி இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது. இவர் "நீர்வைக்குரிசில்" என்னும் பட்டம் வழங்கி ஊர்மக்களால் கௌரவிக்கப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



**கேள்வி : தாங்கள் ஆசிரியப் பணியை தேர்ந்தெடுத்ததன் காரணத்தைக் கூறமுடியுமா?**

**பதில்:** நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலப்பகுதியில் பொருளியல் பாடத்தை சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் பொருளியல் பாடத்தில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக ஓர் கணக்காளராக வரவேண்டும் என்பதற்காக முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தேன். ஆனால் அவ்வேளையில் எனது குடும்ப பொருளாதார நிலை ஒத்துவராததன் காரணமாக உழைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அச்சமயத்தில் கொழும்பிலிருந்த (1982–1944) காலப்பகுதியில் வீரகேசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக கடமையாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே வீரகேசரி ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிக் கொண்டு எனது பல்கலைக்கழக படிப்பையும் பூர்த்தி செய்த பின்னர் கலாநிதி கந்தையா அவர்களுடைய வழிகாட்டுதலினால் ஆசிரியர் வேலைக்கு இணைக்கப்பட்டு கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பொறுப்பேற்று எனது முதல் கடமையை ஆரம்பித்தேன். அங்கு அர்ப்பணிப்போடு கடமையாற்றியதில் அதிபர், ஆசிரியர்கள், சமூகத்தினருடைய நன்மதிப்புகளும் கிடைத்தன. தொடர்ந்து சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அச்சமயத்தில் நீர்வேலியில் திருமண பந்தத்தில் இணைந்ததன் மூலம் எனது ஆசிரியப்பணியை அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அர்ப்பணிப்போடு ஈடுபட முடிந்தது.

**கேள்வி : தங்களுடைய வாழ்க்கை பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:** தென்மராட்சியில் விடத்தற்பளைக் கிராமத்தில் பிறந்த நான் விடத்தற்பளை கமலாசணி மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை உசன் இராமநாதன் கல்லூரியிலும் கற்று விடத்தல்பளையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். விடத்தற்பளையிலிருந்து கல்வி கற்று வெளியேறிய முதல் பட்டதாரி என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

விவசாய குலத்தில் பிறந்த நான் ஆரம்ப காலங்களில் பொருளாதார ரீதியில் கஷ்ட நிலைக்கு உள்ளானேன். கஷ்டங்கள் வாழ்வில் உயர்வதற்கு தடையல்ல என்ற வைராக்கியம் எனக்கு சிறு வயதிலேயே இருந்தது. 01.06.1991 இல் அதிபர் சேவை – 2 இல் தெரிவு செய்யப்பட்டு அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றினேன். அதிபர் சேவைக்கு சேர்வதற்கு வழிகாட்டிய, காலம் சென்ற அதிபர் தங்கராசா அவர்களை நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

சேவை மூப்பின் அடிப்படையில் அதிபர் – 1 இற்கு தெரிவு செய்யப்பட்டு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றினேன். இக் காலப்பகுதியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் படிப்படியாக உயர் நிலையை அடைந்தது என்பதில் மகிழ்வடைகிறேன். இவ்விடயத்தில் ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய ஆசிரியர் சமூகத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், வெளிநாட்டு நிறுவனங்கள், அன்பர்கள் வழங்கிய உதவிகளால் பாடசாலையின் பௌதீக வள மேம்பாடும் வளர்ச்சியடைந்தது என்று நன்றியுடன் கூறிக் கொள்கிறேன்.

இக் காலப்பகுதியில் கொழும்பு தேசிய கல்வி நிறுவகத்தில் (DP-EDU) கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி : தங்களுடைய பொதுத்துறை சார்ந்த ஈடுபாடு பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:** நீர்வேலி கலை, பண்பாட்டுக் கழகத் தலைவராகவும், நீர்வேலி வாழ் லண்டன் நலன்புரிச் சங்க தொடர்பாளராகவும் கடமையாற்றி பாடசாலை சார்ந்த, கல்வி சார்ந்த அமைப்புக்களுக்கு சேவையாற்றி வருகின்றேன். மேலும் சுவிஸ் நற்பணிச்சங்க இணைப்பாளராக கடமையாற்றுகின்றேன். அதுமட்டுமன்றி கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவன (அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது) பொருளாளராகச் செயற்பட்டு வருகின்றேன். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற கல்வி ஆர்வமுடைய பிள்ளைகளுக்கு தவணை ஒன்றிற்கு 1000 ரூபா வீதம் வழங்கி வருகின்றோம். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மாணவர்களுக்கு இவ்வாறாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் வடமராட்சி உட்பட்ட தமிழ்ப் பகுதிகளில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2500 ரூபா ஊதியம் வழங்கி வருகின்றோம். மேலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வழங்கி வருகின்றோம்.

**கேள்வி : நீங்கள் உங்களை ஓர் அதிபர் என்ற வகையில் இன்றைய கல்விமுறை, மாணவர்களின் கல்வி ஈடுபாடு குறித்து யாது கூறுகிறீர்கள்?**

**பதில் :** ஆசிரியர், மாணவர் இடைவினைத் தொடர்பு குறைவாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஒரு மாணவன் பாடசாலை, பிரத்தியேக கல்வி நிலையங்கள் போன்ற இடங்களில் கல்வி கற்பதனால் ஆசிரியருக்கு மதிப்பளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி மேற்கத்தேய வெளிநாட்டுக் கல்வி முறை அப்படியே பின்பற்றப்படுகின்றது. அதுமட்டுமன்றி தரம் – 05 முதல் பல்கலைக்கழகத் தெரிவு வரை போட்டி மனப்பான்மையே மேலோங்குகிறது. தற்போது காணப்படும் சட்டங்களும் கூட மாணவர்களுக்கு சார்பாகவே காணப்படுகின்றன. ஆசிரியப்பணி என்பது சற்று சிரமமான பணியாகவே காணப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் போன்றவை கூட ஆசிரியரின் பணியை கடினமாக்குவது போலவே தென்படுகிறது. ஆசிரியர்கள் சுதந்திரமாக செயற்பட முடியாதவர்களாகவே காணப்படுகிறார்கள். அதேவேளையில் ஒரு சில ஆசிரியர்கள் விடுகின்ற தவறுகள் முழு ஆசிரிய சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்ற கூற்றையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

**கேள்வி : உங்களுடைய பொழுதுபோக்கு பற்றிக் கூற முடியுமா?**

**பதில் :** எனக்கு வாசிப்பில் மிகுந்த ஆர்வம் உண்டு. ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் எனது வரலாறு, சமூக கல்வி, பொருளியல் சார்ந்த பாடங்களை விட நிறைய தமிழ் இலக்கண, இலக்கியங்களான நன்நூல், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களை கற்று எனது தமிழ் துறை சார்ந்த ஆற்றலை விரிவுபடுத்தியுள்ளேன். தமிழ்த் துறையில் என்னை ஊக்குவித்த சிவசரவண ஐயர்(சிற்பி) அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அதுமட்டுமன்றி வரலாற்றுத்துறை பாடம் கற்பித்த ஆசிரியர் வி.கே. நடராசா ஆசிரியரின் வழிகாட்டுதல்கள் எனக்கு சமூகக் கல்வி பாடத்தில் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தின.

**கேள்வி : இறுதியாக நீங்கள் கூறுவது?**

**பதில் :** இன்றைய இளம் சமுதாயமே நாளைய தலைவர்கள் என்பதனை சமூகத்தில் உள்ள யாவரும் புரிந்துகொண்டு அவர்களை வழிநடாத்தல் வேண்டும். சமூகத்தில் தாண்டவமாடும் காடைத்தனங்கள் தமிழருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் கயமைத் தனங்கள் ஒழிக்கப்பட்டு ஆற்றல் உள்ள ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட நற்சமூகத்தை உருவாக்கப் பாடுபடுவது அனைவரதும் கடமையாகும். இத்துறையில் பாடசாலைகள், ஆலயங்கள், நீதித்துறை, பொலிசார் போன்றோரின் அர்ப்பணிப்பான சேவை அவசியமாகும்.

மாணவர் மத்தியில் இளைஞர் மத்தியில் வாசிப்பு ஆர்வம் மிக மிகக் குறைந்து வருகிறது. பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு பயன் உள்ள புத்தகங்கள் பரிசளிக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இலத்திரனியல் சார் ஊடகங்களுக்கு பயன்படும் நேரத்தை விட ஆக்கபூர்வமான புத்தகங்கள் வாசிக்கும் ஆர்வம் வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு நூலகம் அமைக்கப்படவேண்டும். தொலைக்காட்சிகளிலும், நாடகங்களிலும் செலவழிக்கும் நேரத்தை விட பயன் உடைய விடயங்களில் நம் நேரத்தைப் பயன்படுத்துவது அவசியம். சமூகத்தில் அறிஞர்கள், பெரியோர்கள், வயதில் மிகுந்தவர்களை மதிக்கும் மனோபாவம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பழம் பெருமை பேசுவதைவிட உயரிய, பண்பான, கட்டுக் கோப்பான சமுதாயத்திற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை விடுத்து 'தினச்செய்தி' வாசகர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் கூறி விடைபெறுகின்றேன்.

செவ்வி கண்டவர் 'நீர்வையூரான்'

# சொன்னார்கள் சொன்னார்கள்



சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள் மதிக்கப்படவில்லை. பசில், கோத்தபாய ஆகியோர் தன்னிச்சையாகச் செயற்பட்டனர். அதனை மகிந்த கட்டுப்படுத்தவில்லை. இறுதியாக இதற்கான விலையை மகிந்த ராஜபக்ச கெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

போர்க்காலத்தில் மகிந்தவுக்கு பெரும் உதவியாக இருந்த சகோதரர்கள் போருக்குப் பின்னர் பலம் படைத்தவர்களாக மாறினார்கள்.

கோத்தாபய ராஜபக்ச திறமையானவர். ஆனால் அவர் தனது வரையறையை மீறி செயற்பட்டார், அதனை மகிந்த கட்டுப்படுத்தவில்லை.

பசில் ராஜபக்ச அரசியல் ரீதியில் அறிவுள்ளவர். பாரிய திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய திறமையானவர். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ளக அரசியலில் மற்றும் அரச நிர்வாக விடயங்களில் அவரது செயற்பாடுகள் தவறாக இருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பசில் ராஜபக்சவும், கோத்தாபய ராஜபக்சவும், தம்மை முதன்மைப்படுத்தினர். இதற்கான விலையை மகிந்த ராஜபக்ச கொடுக்க வேண்டியேற்பட்டது.

**கலாநிதி தயான் ஜெயதிலக**

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS

தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிவரும் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு, புதிய அரசியலமைப்பின் ஊடாக நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணி போராடும்

“புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென்பதில் மக்கள் விடுதலை முன்னணி தெளிவாக உள்ளது.தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிவரும் அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென்ற விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணி தேவையான தலைமீட்டை மேற்கொள்ளும்.



ஆனால் அது எவ்வாறான தீர்வு என்பது குறித்து, சூழ் நிலையை பொறுத்தே தீர்மானிக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்
**விஜித ஹேரத்**

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS

“யாழ்ப்பாணக் குடாநாட்டில், எந்த பாதுகாப்பு அச்சுறுத்தலும் கிடையாது. தீவிரவாதம் மீண்டும் தலையெடுப்பதற்கு, படையினர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

நாங்கள் வெற்றி பெற்ற இராணுவம். சில அரசியல்வாதிகள் கூறுவது போன்றோ,



சமூக ஊடகங்களில் பரப்புரை செய்யப்படுவது போன்றோ, யாழ். குடாநாட்டின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.

2009 ஆம் ஆண்டில் இருந்து போர் இல்லாத போது, சில காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதில் தவறு இல்லை.

ஆனாலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இருக்கும் எந்தவொரு இராணுவ முகாமையும் நாம் விலக்கிக் கொள்ளவில்லை”

யாழ். கட்டளைத் தளபதி
**மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க**

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS

“தமிழர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் அதிகார பகிர்வு வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு தொடர்பில், இலங்கையிலுள்ள பெரிய கட்சிகள் குழப்பமில்லாமல் தெளிவான முறையில் தமிழ் மக்களை நோக்கி அறிவிக்க வேண்டும். அதன் மூலமே தமிழ் மக்களின் மனங்களை அவர்களால் வெல்ல முடியும்.

இன நல்லிணக்கம் என்பது மக்களது மனதில் உருவாக வேண்டிய, உருவாக்கப்படவேண்டிய ஒரு செயற்பாடாகும். இனங்களுக்கும் மதங்களுக்கும் மத்தியில் சமத்துவம் இருக்குமானால் மட்டுமே சக வாழ்வினை ஏற்படுத்த முடியும்.

இன்று யாராவது இனவாதம் பேசினால், ஏனைய இனத்தவர்களது மொழி, கலாசாரம் மற்றும் மதத்தை அவமானப் படுத்தினால், காணிகளை அபகரித்தால், அவர்களே இந்நாட்டின் பிரிவினைவாதிகள் ஆவர். மீண்டும் ஒரு யுத்தத்தை எதிர்கொள்ள நாம் தயாரில்லை. அதற்கு இடமளிக்கவும் கூடாது. ஆகவே, யுத்தம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களை கண்டறிந்து நிவர்த்திசெய்ய வேண்டும் அதிகாரப்பகிர்வு என்பது வெறுமனே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு மட்டுமல்ல, அது ஒரு ஜனநாயக நடவடிக் கையாகும்.



**அமைச்சர் மனோ கணேசன்**

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS

## விண்வெளியில் இரண்டாவது ஆய்வகம் நிலைநிறுத்த தயாராகிவருகிறது சீனா



வல்லரசு கனவில் மிதந்துவரும் சீனா, இராணுவ பலத்தை அதிகரித்து வருவதுடன் விண்வெளி ஆய்வுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

அவ்வகையில், விண்வெளியை கண்காணிக்க ஏற்கனவே ஒரு ஆய்வு கூடத்தை அங்கு நிலைநிறுத்தியுள்ள சீனா, இந்த ஆண்டில் இரண்டாவதாக ‘டியாங்காங்-2’ என்ற ஆய்வு கூடத்தை விண்வெளியில் அமைப்பதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, விண்வெளி வீரர்களை சுமந்து செல்லும் ‘ஷென்ஸோ-11’ என்ற விண்கலத்தையும் தயாரித்துவரும் சீனா, அந்த விண்கலத்தின் மூலம் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி ‘டியாங்காங்-2’ ஆய்வுகூடத்தில் இருந்தபடி ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

மேலும், தனது பகைநாடான ரஷ்யாவின் மிர் விண்வெளி ஆய்வு மையத்துக்கு போட்டியாக, வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தர ஆய்வு மையத்தை நிறுவவும் சீனா திட்டமிட்டுள்ளது.

வல்லரசுகளின் விண்வெளி ஆய்வு போட்டியால் தரையில் மட்டுமல்லாது விண்ணிலும் அதிர்வுகள் அதிகரித்துச் செல்லப்போவது மட்டும் உறுதி.

## தினச்செய்தி சிறுகதைப் போட்டி

இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சுமார் எழுநூற்று ஐம்பது தொடக்கம் ஆயிரம் சொற்களுக்கு இடையில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

எழுதுபவரின் சொந்தக் கற்பனை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். **சமகால விடயங்களை உள்ளடக்கியதாக சிறுகதை அமைய வேண்டும்.**

இப்போட்டி **ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு சிறுகதை மாத்திரமே அனுப்பலாம். ஒன்றிற்கு மேற்பட்ட சிறுகதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏ4 தாளில் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் எழுதுபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையையும் (பெயர், விலாசம் அடையாள அட்டை இலக்கம், தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம், அத்தோடு பாஸ்போட் சைஸ் புகைப்படம்) இணைத்து அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் சிறுகதைகளுக்குப் பரிசுகள் உண்டு.

**முதல் பரிசு ரூபா 10000**
**இரண்டாவது பரிசு ரூபா 5000**
**மூனறாவது பரிசு ரூபா 2500**

முதல் பத்து சிறுகதைகளும் வரிசைக்கிரமப்படி தினச்செய்தி வாரமலரில் பிரசுரிக்கப்படும். அதையடுத்து தினச்செய்தி சிறுகதைத் தொகுப்பு என்று பத்து சிறுகதைகளையும் சேர்த்து புத்தக வடிவில் வெளியிடப்படும். புத்தக வடிவில் வெளியிட்டு புத்தக அறிமுக விழாவின் போது புத்தகத்தில் சிறுகதை எழுதிய பத்து எழுத்தாளர்களும் விழா மேடையில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்.

தபால் மூலம் சிறுகதை எழுதி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி லேன்,



# நீதித்துறையை அச்சுறுத்த முனையும் ராஜபக்ஷாக்கள்

ராஜபக்சாக்கள் மற்றும் மைத்திரி–ரணில் அரசாங்கத்திற்கு இடையிலான முறுகல் நிலையானது தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் ராஜபக்ஷாக்களின் ஊழல், மோசடிகள் அனைத்தும் வெளிக்கொணரப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்துள்ளதுடன் ராஜபக்ஷாக்கள் அவர்களது வழக்கறிஞர்களுடன் தயாராக இருக்குமாறும் பிரதமர் எச்சரித்துள்ளார்.

ரணில் இந்த எச்சரிக்கையை விடுப்பதற்கு முன்னரும் கூட, தமக்கெதிராக முன்வைக்கப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்ட ஆலோசனைகளைப் பெறுவதில் ராஜபக்ஷாக்கள் நேரத்தைச் செலவிட்டுள்ளனர். தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி விடுவதன் மூலம் நீதிச்சேவை மீதான அச்சத்தை ஏற்படுத்துவது மட்டுமே ராஜபக்ஷாக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரேயொரு வழி என சட்ட ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான ஒரு சட்ட ஆலோசனையின் விளைவாகவே 'ஹைட் பார்க்' பேரணி இடம்பெற்றது.

யோசித கைதுசெய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மஹிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையானது பகற்கனவாக முடிந்து போனது. முதலாவது நாள் யோசித நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட போது, அங்கு ராஜபக்ஷவின் விசுவாசிகளில் ஒரு சிலர் மட்டுமே சமூகம் தந்திருந்தனர். இதன்பின்னர் எப்போதெல்லாம் யோசித நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுகின்ற போதிலெல்லாம், ராஜபக்ஷவின் சொற்ப விசுவாசிகளை மட்டுமே அங்கு காண முடிந்தது. அப்போதுதான் தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டால் இந்த நிலைதான் காணப்படும் என்கின்ற உண்மையை மஹிந்த உணர்ந்து கொண்டதுடன் இவருக்கு பீதி ஏற்பட்டது.

ஆகவே, 'ஹைட் பார்க்' பேரணியானது நீதித்துறைக்கு எச்சரிக்கை சமிக்ஞையை அனுப்புவதை நோக்காகக் கொண்டே மகிந்தவால் திட்டமிடப்பட்டது. தற்போதைய அரசாங்கத்தை விட நீதிச்சேவை மீதே மஹிந்த அதிக அச்சம் கொண்டிருந்தார். மக்களை சிறையில் அடைக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ வேண்டாம் எனவும் இதனால் அவர்கள் துன்பப்படுவார்கள் எனவும் மகிந்த இந்தப் பேரணியில் தெரிவித்திருந்தார். இது நீதிச்சேவை மீதான மறைமுகமான அச்சுறுத்தலாகவே நோக்கப்படுகிறது.

ஹைட் பார்க் பேரணியானது பாரிய நிதிச் செலவில் மஹிந்த விசுவாசிகளால் ஒழுங்குபடுத்தப்பட்டது. மக்களைக் கொண்டு செல்வதற்கான பேருந்துகள் வாடகைக்கு ஒழுங்குபடுத்தப்பட்டது தொடக்கம் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகள் பாரிய செலவு மேற்கொள்ளப்பட்டதைச் சுட்டி நிற்கின்றன.

இதற்கும் மேலாக, இந்தப் பேரணியில் பாரியளவிலான மக்கள் கலந்து கொண்டனர் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக *air-space camera* தொழினுட்பத்தைப் பயன்படுத்திய முதலாவது அரசியல்வாதிகளாக ராஜபக்ஷாக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு பேரணியில் அதிக எண்ணிக்கையான மக்கள் வருகை தந்துள்ளனர் என்பதைக் காண்பிப்பதற்காக இதற்கு முன்னர் எவ்வித அரசியற் கட்சிகளாலோ அல்லது பேரணியை ஒழுங்குபடுத்துபவர்களாலோ இவ்வாறானதொரு ஒளிப்பதிவுத் தொழினுட்பம் பயன்படுத்தப்படவில்லை.

மக்களைத் தவறாக வழிநடத்த விரும்பும் எவரும் மேலதிக தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியும். ஆகவே, தனக்கு ஆதரவாக ஹைட்பார்க் மைதானத்தில் பெருந்தொகையான மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர் என்பதைக் காண்பித்து அதன் மூலம் நீதிச்சேவை மீது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மஹிந்த மேற்கொண்டார். மேலும் இவர் தனது திட்டங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக கோயில்கள் மற்றும் விகாரைகளில் தேங்காய் உடைப்பு வழிபாட்டிலும் ஈடுபட்டார். இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுவதற்காக மட்டுமல்லாது நீதிச்சேவைக்கும் எச்சரிக்கை விடுவதற்காகவே மகிந்த தேங்காய்களை உடைத்து வழிபாட்டை மேற்கொண்டார்.

அரசாங்கத்திற்கு எதிராகத் தேங்காய்களை உடைத்து வழிபாடு செய்ததால் அரசாங்க அமைச்சர்கள் சிலர் இறந்துள்ளதாகவும் பலர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார். மேலும், தனது குடும்பத்தினருக்கு எதிராக தீர்ப்பை வழங்கும் நீதிபதிகள் அதே நிலைமையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் எனவும் மஹிந்த நீதிபதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**யோசித கைதுசெய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மகிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையானது பகற்கனவாக முடிந்துபோனது.**

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

## பேரணிகளை ஒழுங்கு படுத்துதல் :

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பேரணியில் பங்குகொள்வார்கள் என்பதைக் கூறி மக்களை அச்சுறுத்திய முன்னைய அரசாங்கங்களில் முதலாவது தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆவார். அப்போதைய ஜே. ஆர் அரசாங்கத்தால் சிறிமாவின் சிவில் உரிமை பறிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்ற போது அதனை முறியடிப்பதற்காக இவ்வாறானதொரு பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் ஜே. ஆர், சிறிமாவின் தந்திரோபாயத்தை தோல்வியுறச் செய்தார். ஜே. ஆர் ஜெயவர்தன தொடர்பான சுயசரிதை நூலில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

'செப்ரெம்பர் 27இல் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை எதிர்த்து திருமதி பண்டாரநாயக்கவின் ஒழுங்குபடுத்தலில் நாடு தழுவிய பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. தனது ஆதரவாளர்களை கொழும்பில் ஒன்று சேர்த்து பாரிய பேரணிகளை மேற்கொண்டதுடன் தனது அரசியற் பழிவாங்கலுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டுதல் போன்றன சிறிமாவின் பிரதான பணிகளாகக் காணப்பட்டன. எந்தவொரு வன்முறையும் அரசாங்கத்தையும் பாதிக்கும் என்பது இங்கு முக்கியமானதாகும். ஒக்ரோபர் 16 அன்று இடம்பெற்ற மிக முக்கிய விவாதம் ஒன்றில் பங்கெடுப்பதற்கு அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடைவிதிக்கப் பட்டது

ஜே.ஆர். இந்த அச்சுறுத்தல்களை மிகத் தீவிரமாகக் கவனத்திற் கொண்டார். சிறிமாவின் விசுவாசிகளால் ஒன்றுதிரட்டப்பட்ட மக்கள் கூட்டத்தை இலங்கை காவற்துறையினர் கலைக்காது விட்டிருந்தால் ஆகஸ்ட் 08 அன்று மிகப் பாரிய இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும். இவ்வாறானதொரு உயிர்த் தியாகத்துடன், சிறிமாவின் கனவும் நனவாகியிருக்கும். இப்பேரணியின் பின்னரும் கூட, ஜே. ஆர். அரசாங்கத்தின் காலத்தில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் போன்றன அதிகமாக இருந்தன. இதனால் இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங்கைத் தீவு முழுமையும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைக் குழப்புவதற்கான காலஅவகாசத்தை வழங்கினார். இதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீதான மக்களின் கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் அறிய முடிந்தது.

இதுமட்டுமல்லாது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர், அரசியல் விமர்சனங்கள் மற்றும் ஜே. ஆர் மற்றும் பிறேமதாசா, பல்வேறு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் மீதான தாக்குதல்கள், நாடாளுமன்றம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதற்கான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கான சூழலும் உருவாக்கப்பட்டது. ஒக்ரோபர் 16 அன்று சிறிமாவின் பேரணியின் போது மிகப் பெருமளவான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் இதில் ஏற்படக்கூடிய பல்வேறு வன்முறைகளைத் தடுப்பதற்காக ஜே. ஆரால் பாதுகாப்புப் படையினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்குமாறு ஐ.தே.க. ஆதரவாளர்களிடம் கூறப்பட்டது. அத்துடன் இவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவிருந்த முக்கிய வரைவுக்கு வாக்களிப்பதற்கு கொழும்பிற்கு வரவேண்டும் என்பதால் இவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டது. ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் காவற்துறையினரின் பாதுகாப்பிற்கு அப்பால் தமது ஆதரவாளர்களின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதென்பது சற்று வித்தியாசமானதாகும். மக்களை வன்முறைக்குத் தூண்டும் எவரும் கைதுசெய்யப்பட வேண்டும் எனவும் காவற்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் ஜே.ஆர். தனக்கு எதிராக சிறிமாவால் முன்வைக்கப்பட்ட சவாலை முறியடித்தார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் காவற்துறையினரின் மிகத் தீவிர பாதுகாப்பு முன்னெடுப்புக்களால் தன்னால் திட்டமிடப்பட்ட பேரணி தோல்வியுறும் என்பதை சிறிமா உணர்ந்து கொண்டார்.

**மொழியாக்கம் : நித்தியபாரதி**

இதனால் இவர் உடனடியாகப் பேரணியை நிறுத்துமாறு தனது ஆதரவாளர்களுக்கு கூற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்.

ஏனைய அரசியற் கட்சிகளிடமிருந்தும் சிறிமாவிற்கான ஆதரவு பெரிதளவில் கிடைக்கவில்லை. இதில் லங்கா சமாசமாஜக் கட்சியின் நிலைப்பாடு தெளிவற்றதாகக் காணப்பட்டது. இந்தக் கட்சியினர் சிறிமாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 1975 இல் நாடாளுமன்றில் தமது ஒரு வாக்கை மட்டுமே வழங்கியிருந்தனர்.

(தொடர்ச்சி 23 இல்...)

# பிரபாகரனின் பத்திரிகைப் பேட்டிகள்

## வரவரப் பிரபல்யம் அடைந்தன

எப்பவுமே பேட்டி கொடுக்க முன் வழமையாகப் பிரபாகரன் கைக் கடிகாரத்தைக் கழற்றி மேசை மீது வைத்து நேரத்தைப் பார்த்துப் பார்த்துத் தான் பேட்டி வழங்குவார்.

பேட்டிக்கான நேரம் முடிவடைந்து விட்டால் உடனடியாகப் பேட்டி நேரம் முடிவடைந்து விட்டது என எழுந்து சென்று விடுவார்.

அவர் கட்டியிருந்த கைக்கடிகாரம் மறைந்த முன்னாள் போராளி சீலனுடையது ஆகும்.

பிரபாகரன் வழங்கிய பேட்டிகளில், எப்பவுமே தனது இலட்சியமான தமிழ் ஈழத்தினை விட்டுக் கொடுக்கவும், என்ன காரணத்துக்காகவும் சமரசம் செய்யவும் அவர் விரும்பவில்லை எனத் தெரிய வருகின்றது.

அந்தக் காலத்தில் இந்தியா இராணுவ ரீதியில் இலங்கையில் தலையிடும் என்று மேலெழுந்தவரியாகக் கருத்து நிலவி வந்தது

அதுமாத்திரமல்லாது, "இன்றைய அவசரத் தேவை என்னவென்றால், தமிழர்களாகிய நாங்களே எங்கள் யுத்தத்தைச் செய்ய வேண்டுமே தவிர வெளியாட்கள் அல்ல" எனத் தெளிவாகக் கூறி வந்தார்.

இந்தியா இராணுவ ரீதியாக இலங்கையில் தலையிட வேண்டுமா? எனக் கேட்டபோது, "எங்களிடம் தைரியம், நம்பிக்கை, திடசங்கற்பம் இருக்கின்றது. நாங்களே தனித்து நின்று யுத்தம் புரிந்து எங்கள் சுதந்திரத்தைப் பெறுவோம். யுத்தம் புரிந்தே எங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். எனவே இந்தியாவினுடைய ஒத்தாசையோ, அனுதாபமோ தேவையில்லை"

மேலும் இது சம்பந்தமாகக் கூறுகையில், "இந்தியா எங்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும், மதிக்க வேண்டும்" என்று கூறினார்.

அந்தக் காலத்தில், இந்திரா காந்தியினுடைய சோவியத் யூனியன் சார்ந்த வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு ஏற்ப அமெரிக்காவின் தலையீட்டையும் பிரபாகரன் கண்டிக்கத் தவறவில்லை.

அமெரிக்காவின் ஆயுதங்கள் இலங்கையில் குவிக்கப்படுவது தமிழருடைய சுதந்திர இயக்கத்திற்கு மாத்திரமல்ல, இந்தியத் தேசிய பாதுகாப்பிற்கும் சவால் என்றார்.

அமெரிக்கா இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்து தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பது மாத்திரமல்லாது, அவர்களுடைய கிழக்குப் பகுதியில் உள்ள திருகோணமலைக் கடற்படைத் தளத்தை தங்கள் வசம் எடுத்துக் கொள்ளவுமே ஆகும்.

அவ்வாறு ஒன்று நடைபெற்றால், இந்து சமுத்திரப் பிராந்தியம் யுத்தப் பிரதேசமாக மாறும். மேலும் இந்தப் பிராந்தியத்தில் போர் மேகம் சூழ்ந்து பதற்ற நிலை உருவாகும் எனப் பிரபாகரன் குறிப்பிட்டார்.

ஒரு சுதந்திர இராச்சியம் இலங்கையில் உருவாக்கப்பட்டால், அந்த இராச்சியம் சோசலிஸ அமைப்பாகவே இருக்கும்.

சோசலிஸம் எனப் பிரபாகரன் குறிப்பிட்டது, சமூக சமத்துவத்தை வற்புறுத்துவதாகவே கருதப்பட்டது. அங்கே மனித சுதந்திரமும், தனிநபர் உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படும். மற்றும் எல்லாவிதமான சுரண்டல்களும், அடக்குமுறைகளும் ஒழிக்கப்படும். இது ஒரு சுதந்திர அமைப்பைக் கொண்டது. தமிழ் ஈழம் பக்கச் சார்பற்ற ஒரு நாடாக இருக்கும்.எந்த நாட்டுடனும் அணி சேராத நாடாக இருக்கும். இந்தியாவுடன் நட்புறவு, பிராந்தியக் கொள்கைகளையும் மதிக்கும் ஒரு நாடாகவும் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் இரண்டு மாதத்திற்குள் வேறு ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைக் காட்டமாகச் சாடினார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்களின் இந்தியத் துருப்புக்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்தைப் பிரபாகரன் எதிர்த்தார்.

இந்தியப் படைகள் எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு வரக்கூடாது எனத் தெரிவித்தார்.

இருந்தபோதும் இந்தியாவின் உதவி, ஆதரவு, நல்லெண்ணம் அவசியம் என்பதை அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஆனால், "புதுடெல்லி இந்தியத் தலைவர்கள் கால்களில் சாஷ்டாங்கமாக விழுவது ஓர் நல்ல அரசாக இருக்க மாட்டாது" என்றார்.

1984 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பிரபாகரன் முப்பது வயதை அடைந்தார். படிப்படியாக அவர் கொள்கைகளிலும் முதிர்ச்சி தென்படத் தொடங்கியது.

அவருடைய "சண்டே" சஞ்சிகை முதல் பேட்டியை அடுத்துப் பல பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டி எடுக்கத் தமது விருப்பத்தைத் தெரியப்படுத்தினார்கள்.

"சண்டே" சஞ்சிகைப் பேட்டி பத்திரிகை உலகில் பெரும் பரபரப்பை உருவாக்கிற்று.

அந்தப் பேட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி கீழே தரப்படுகின்றது... –

**கேள்வி :** ***உங்கள் வாழ்க்கையில் மிகுந்த விரக்தியைத் தந்த கணம் என்று எதையாவது கூறுவீர்களா?***

**பதில் :** என் வாழ்க்கையில் அப்படி விரக்தி ஏற்பட்ட கணம் என்று எந்த ஒன்றையும் குறித்துச் சொல்ல முடியாது. இலட்சிய நோக்கு கொண்டவர்கள் என்று நான் நினைத்து நம்பிய சில நண்பர்கள் சுயநல சந்தர்ப்பவாதிகளாக மாறிய போது நான் மிகுந்த விரக்திக்குள்ளாவதுண்டு.

போராட்டத்தின் ஒரு அங்கம் தான். குறிப்பிட்ட ஒரு இராணுவ நடவடிக்கை தான் முழுக் கலவரத்திற்கும் காரணம் என்று கருதுவது தவறானதாகும். ஜூலைக் கலவரமானது எம் மக்களை கொன்று குவிக்கும் நோக்கம் மட்டும் கொண்டதல்ல. கொழும்பில் வாழுகின்ற தமிழர்களின் பொருளாதாரத் தளத்தையே அழித்து விடுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்ததை நீங்கள் நிச்சயமாக அவதானித்திருப்பீர்கள். எங்களுடைய கண்ணோட்டத்தில் ஜூலைப் பேரழிவானது ஆளும் கட்சியின் இனவெறிச் சக்திகளால் தமிழர்களுக்கெதிராக நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட இனப் படுகொலைத் திட்டமாகும். ஆரம்பத்தில் இந்த வெறிக்கும்பல் முழுக் குற்றச்சாட்டையும் புலிகள் மேல் சுமத்த முனைந்தது. பிறகு திடீரென்று தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு இனக்கலவரங்களுக்கு இடதுசாரிகளே காரணம் என்று குற்றம் சாட்டியது. உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும், அவர்களின் உடமை நாசத்திற்கும் இன்றைய அரசாங்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

**கேள்வி :** ***ஏன் நீங்கள் இந்தத் தாக்குதலை நடத்தினீர்கள்? இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. நான்கு தமிழ்ப் பெண்மணிகள் கற்பழிக்கப்பட்டதற்கு எதிரான ஒரு பழிவாங்கல் நடவடிக்கை தான் இது என்று சிலர் கூறுகிறார்கள். நான் விசாரித்த வரையில் உங்களின் இரா ணுவப் பிரிவுத் தலைவரும் நெருங்கிய நண்பருமான சார்லஸ் அன்ரனியின் மரணத்தில் வெற்றிப் பெருமிதம் கொண்டிருந்த சிங்கள இராணுவத்திற்குப் பாடம் படிப்பிப்பதற்காகத்தான் இத் தாக்குதல் நடந்தது என்று***



***தோன்றுகிறது. அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் ஆற்றல் மிகுந்த தலைவர்களில் ஒருவரை இழந்து விட்ட பிறகும்கூட சிங்கள இராணுவத்தை எதிர்கொள்ளக் கூடிய வலிமை கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நிரூபிக்க முயன்றிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். இந்தக் கருத்து சரியா? அல்லது இதை விடவும் கூடுதல் காரணங்கள் உண்டா?***

**பதில் :** சார்லஸ் அன்ரனி பற்றியும் இத்தாக்குதல்கள் பற்றியும் நீங்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. இத்தாக்குதல் ஓரளவுக்கு பதிலடி தான். சிங்கள இராணுவத்திற்கு தண்டனைதான். இருப்பினும் எங்களைப் பொறுத்தவரை சார்ல்ஸ் போன்ற உன்னதப் புரட்சிவாதியின் விடுதலை வீரனின் உயிருக்குப் பதின்மூன்று இராணுவத்தினரின் உயிர்கள் ஒருபோதும் ஈடாகாது. வேறொரு வகையில் எதிரியை நோக்கித் தொடுக்கப்பட்டிருக்கும் எமது கெரில்லாப் போர் முறையின் ஒரு பகுதி தான் இத்தாக்குதலாகும்.

**கேள்வி :** ***வட்டமேசை மாநாடு எந்தவித நிரந்தரமான தீர்வையாவது உருவாக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?***

**பதில் :** தமிழர்களின் பிரச்சினைகளுக்கு வட்ட மேசை மாநாடு எந்தவித நிரந்தர தீர்வையும் தராது என்பது என் கருத்து. கடந்த கால அரசியல் அனுபவத்தின் அடிப்படையிலேயே இம்முடிவிற்கு வந்திருக்கிறோம். இச் சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண எந்தவித நேர்மையான முயற்சியும் மேற் கொண்டதில்லை. இப்போதைய பேச்சுவார்த்தைகளுக்கும் இந்தக் கதி தான் நேரும். முக்கியமான சகல சிங்களக் கட்சிகளும் பௌத்த அமைப்புகளும் தமிழர்களுக்குப் பிரதேச சுயாட்சியை எந்த வடிவத்திலும் எந்த அளவிலும் தரத் தயாராக இல்லை. சிறு சலுகைகள் வழங்கப்படுவதைக் கூட அவர்கள் எதிர்க்கிறார்கள். இம் மாநாட்டிலிருந்து உருப்படியாக எதுவும் கிடைக்காது.

**கேள்வி :** ***தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்தை பின்னுக்குத் தள்ளுகிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? ஏன்? அவர்களைத் துரோகிகள் என நினைக்கிறீர்களா?***

**அரசகேசரி**

**பதில் :** தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலானது விடுதலைப் போராட்டத்தை நிச்சயமாகப் பின்னுக்கு தள்ளத்தான் செய்கிறது. இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல திட்டவட்டமான நடவடிக்கைகள் எதனையும் அவர்கள் ஒருபோதும் எடுத்ததில்லை. மாறாக அவர்கள் பொய்யான நம்பிக்கைகளைத் தருகிறார்கள்.

(தொடர்ச்சி 17 இல்....)

# லங்கா ராணி

கழுவுவதற்கு வந்தவர்கள் எல்லாவற்றையும் தூக்கிக் கடலில் போட்டு முடித்துவிட்டு அந்த இடங்களைக் கழுவவேண்டுமென்று சரவணனிடம் வந்து கூறினார்கள்.

சரவணன் அங்கு சென்று படகுக் குழாயைப் பொருத்தி விட்டு சிப்பந்தியிடம் கூறி நீரை முடுக்கி விட்டான். குழாயைப் பிடித்துக் கழுவிக் காட்டி விட்டு மீண்டும் இளைஞர்கள் இருந்த இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். நேரம் ஐந்து மணியாகி விட்டது. தொண்டர்கள், வேறு பலரும் விடைபெற்றுச் சென்றனர்.

வெள்ளைச்சாமி தொடர்ந்து கேள்வி கேட்டான். "சமதர்மவாதிகளைத் தமிழர்களைத் தமிழர்களே எதிர்க்கலாமா? என்று கேட்டு மடக்கப் பார்க்கிறார்களே அதற்கு என்ன சொல்வது?"

"சமதர்மவாதிகள் அவ்வாறு யாரையும் அழிக்க விரும்புபவர்கள் அல்ல. இப்படி எத்தனை புராணங்களை கிளப்பி விடுவார்கள். சமதர்ம சமுதாயத்தை எழவிடாமல் தங்கள் சுயநலன்களையும் சுரண்டல் சுதந்திரங்களையும் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் என்னவெல்லாம் சொல்வார்கள். இதே பேர்வழிகள் சமயவாதிகளுடன் கூடிக்கொண்டு கடவுள் பூச்சாண்டி காட்டுவார்கள். சமதர்ம நாடுகளில் எல்லாமே கூடாது என்று கூறுவார்கள். விடுதலை கோரி நிற்கும் இனத்தைத் தட்டில் வைத்துக்கொண்டு போய்ப் பாதகாணிக்கையாக வைத்துவிட்டுக் கைகளைக் கும்பிட்டு வணங்கி நிற்பார்கள். தங்கள் சுயநலங்களுக்குக் கருணை வேண்டி விதண்டாவாதங்களில் ஈடுபடுவார்கள். மக்கள் எழுச்சிக்கு எதிராக இவர்களுடைய சூழ்ச்சிகள் பயங்கரமானதாக இருக்கும். 'தமிழினம் தமிழினம்' 'விடுதலை விடுதலை' என்று கூறித் தாங்களும் படைதிரட்டுவார்கள். இவர்களை என்ன செய்யச் சொல்லிக் கூறுகிறாய்?

சமுதாயத்தின் சாரத்தை உறிஞ்சி அதற்கு நஞ்சு ஊட்டிக்கெடுத்துக் கொண்டு கிடந்தவர்கள் மக்கள் எழுச்சியால் வடிகட்டப்பட்டு அந்தப் பன்னாடையின் மேல் கிடப்பார்கள். வண்டுகள், பூச்சிகள், தத்தன்கள், இலையான்கள் இவர்களை என்ன செய்யச் சொல்லிக் கூறுகிறாய்? தங்கள் நிலைகளைப் புரிந்துகொண்டு திருந்திக் கொள்வார்கள் என்று நினைக்கிறாயா? மாட்டார்கள். அதே மயக்கத்தில் கிடப்பார்கள். இவர்களை என்ன செய்வது? இவர்களால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்றால் காப்பாற்றிக் கொள்ளட்டும்.

வெள்ளைச்சாமி தமிழ் மக்கள் தங்கள் விடுதலை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்று நிச்சயம் புரிந்து கொள்வார்கள் ஏதாவது ஒன்றை மாத்திரம் முன் வைத்து உண்மையான பிரச்சினைகளை மறைத்து விட்டுப் போராடுவது விடுதலை அல்ல. 'தமிழ்மொழி தமிழ்மொழி' என்கிறோம். அடிப்படையில் என்ன உள்ளது என்பதை மறந்து போகக் கூடாது. சிங்கள மக்கள் தமிழ் மக்களை இவ்வாறு அடக்கி ஆள்பவர்களாக மாற்றப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் மத்தியில் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் அதற்கு காரணமானவர்களையும் அவர்கள் இனம் கண்டு கொள்ளாதவாறு திசை திருப்பி விடுவதற்காகவே என்பதை நீ மறக்கக்கூடாது.

மொழி மாத்திரம் எதையும் தராது. அது மக்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பே. இதனால் மொழியை நான் இரண்டாம் நிலைக்குத் தள்ளுகிறேன் என்று நினைக்கக்கூடாது. பல விடயங்களில் இதுவும் ஒன்று என்றுதான் கூறுகிறேன். அடிப்படையானது மக்களின் எழுச்சி. இதற்கான எண்ணங்கள், இந்த எண்ணங்களின் செயற்பாட்டிற்கு மொழி. மொழி பறிபோனால் வேற்று மொழியால் அழிக்கப்பட்டால் தான் அது பிரதானமாகிறது. மொழியே சமுதாய இயக்கத்திற்குப் பிரதானமானது. சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளுக்குக் காரணமானது என்று கொள்ளமுடியாது. மொழியை வைத்து விடுதலை கோருபவர்களுக்கு அவ்வாறான விடுதலை ஏற்பட்டால் அதற்கு அப்பால் செல்வதற்கான பாதை தெளிவாகத் தெரியவில்லை. இவர்கள் பலவீனமடைந்து விடுவார்கள். இதை இவர்கள் எவ்வளவு முன்னேறிச் செல்கிறார்களோ அவ்வளவுக்கு உணர்ந்து கொள்கிறார்கள். இதனால் அவர்கள் பலமாக இருந்த அதே கோட்டிற்கு மீண்டும் திரும்பி வந்து விடுவார்கள். பழைய சூழ்நிலைகள் உருவாக மீண்டும் போராட்டம் போராட்டம் என்று தொடங்குவர். இவர்கள் இவ்வாறு முன்னுக்குப் போவதும் பின்னுக்கு வருவதும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். நாங்கள் மொழிவுரிமைக் காகப் போராடும் தீரர்கள் என்று உலகிலே பெயரெடுத்து இருந்தாலும் எங்கும் எதையும் உருப்படியாகச் சாதித்ததாக இல்லையே வெள்ளைச்சாமி. இங்குள்ள சூழ்நிலைகளில் தனி மொழிக்காக மாத்திரம் போராடுவது முடிவில்லாத போராட்ட பாதையேயொழிய இனத்தின் வெற்றிக்கான பாதையல்ல. இங்கு மொழி அழிவு. இனத்தின் அழிவு. அதன் மீது ஏவிவிடப்பட்டுள்ள ஆதிக்கவெறி அவற்றின் போக்கை எடுத்துக் காட்டுவதால் மொழியை வைத்தே அரசியல் வளர்ந்து விட்டது. இனத்தின் விடுதலையே இங்கு முன்னிற்கவேண்டும்.

சீர்திருத்தவாதிகள் வருவார்கள். சாதியை ஒழிப்போம் என்பார்கள். மூடநம்பிக்கையை ஒழிப்போம் என்பார்கள்.




சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படைக் காரணங்களை ஆராயாமல் அவற்றின் புறவெளிப்பாடுகளைத் தாக்குவதால் உருமாற்றம் தான் ஏற்படும். உட்சாரம் மாறுவதில்லை. சீர்திருத்தவாதிகள் கோட்டைவிட்ட கதைகள் இந்த நாட்டில் ஏராளம். சீர்திருத்தவாதிகள் சுரண்டல் வாதிகளின் சூழ்ச்சிகளுக்கு இலகுவில் பலியாகிவிடுகிறார்கள். சமுதாயத்தில் உள்ள பிரிவினைகள், சாதி சமய வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள், வறுமை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது. சுரண்டும் சுதந்திரமும் யாருடைய வறுமைக்கும் யாரும் பொறுப்பில்லை என்ற நிலையும்தான். ஒவ்வொருவரும் தன்னைத்தானே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதால்தான் இவ்வாறான குறுகிய வட்டங்களுள் புகுந்து கொள்ளவேண்டியிருக்கிறது. காலப்போக்கில் அவற்றின் மத்தியில் ஏற்பட்ட போட்டியும் மோதலும் இவ்வாறான ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திவிட்டன.

ஆகவே எங்களுடைய விடுதலை மொழியை அழிக்கிறார்கள் என்று கூறித் தனிநாடு அமைத்துக் கொண்டு மற்றவற்றைச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்பதல்ல. எல்லா விலங்குகளையும் உடைத்தெறிந்து கொண்டு சமதர்ம சமுதாயமாக எழுவதுதான் எங்கள் இனத்தின் உண்மையான விடுதலைக்கு வழிவகுக்கும். வெள்ளைச்சாமி உன்னுடைய சமூகம் இலட்சியமற்று காலம் கடந்துபோன கட்டுக்கோப்புகளால் கட்டுண்டு கொள்ளைக்காரர்கள் ஏமாற்று எத்தர்களின் வேட்டைக் காடாகக் கிடந்து அழிந்தது போதும். இதற்கு முடிவுகட்ட வேண்டிய காலம் வந்து விட்டது. அன்பும் அறமும் நிறைவுபெற்ற அந்தப் புதிய தமிழனுடைய சமுதாயம் இங்கு வேண்டும். திட்டங்களை எங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்குப் படிப்படியாக நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் இதற்கான உழைக்கும் மக்களின் ஆட்சியை, அரசை, அதிகாரத்தை ஒரேயடியாக நிறுவி விடவேண்டும். எங்களுடைய போராட்டம் இந்த அடிப்படையில் தான் அமைய வேண்டும். இதற்குத் தீரமுடன் இறங்கிச் செயற்படவேண்டும். தொடங்க வேண்டியது தான். எதற்கும் நீ முதலில் பண்ணைக்கு வா" என்றுகூறி வெள்ளைச் சாமியைப் பார்த்தான்.

கழிவிடங்களைக் கழுவி விட்டவர்கள் அங்கு வந்து சரவணனிடம் எல்லாம் முடிந்துவிட்டதாகக் கூறினர். அவர்கள் சரவணனிடமிருந்து எதையோ எதிர் பார்ப்பவர்கள் போல் நின்றனர். சரவணன் அவர்களிடம் "என்ன வேணும்" என்று கேட்டான்.

"இல்லை தம்பி, அதுல கொஞ்சம் கயிறு கிடக்குது" என்று இழுத்தனர்.

சரவணன் அவர்களோடு சென்றான். அவர்கள் ஒரு கயிறுக் கத்தையைக் காட்டினார்கள். விலை உயர்ந்த கயிறு. அதன் ஊடாகக் கம்பி வைத்துச் செய்யப்பட்டிருந்ததால் அது நல்ல பலமாக இருந்தது. சரவணனும் புரிந்து கொண்டான். சுற்று முற்றும் பார்த்தான். கண்களைக் காட்டி விட்டான். அவர்களும் அதைச் சாக்கில் வைத்துச் சுற்றி மறைத்து ஆரவாரமாகத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு சென்றனர். சரவணன் அவர்களைக் கொண்டு போய்ப் படிகளில் விட்டான்.

பொழுதுபட்டிருந்தது. கடைசியாக வரிசையில் நின்றவர்கள் கரைசேர்வதற்குத் தயாரானார்கள். அதற்கான வத்தையும் அணைத்து விடப்பட்டிருந்தது. இளைஞர்கள் வேகமாகச் செயற்பட்டனர். அதிகமான பொருட்களைக் கொண்டு வந்தவர்களே கடைசியாக நின்று கொண்டிருந்தனர். தங்கள் பொருட்களையும் சுமந்துகொண்டு வரிசையில் நகர முடியாததனால் அவற்றை ஆங்காங்கே குவித்து வைத்து விட்டு நின்றுகொண்டிருந்தனர். பெல்பொட்டம் அணிந்தமங்கையின் குடும்பத்தினரும் தங்கள் பெட்டி பொட்டலங்கள், கூடைகள், கிளிக் கூடு முதலியவற்றைத் தொண்டர்களின் உதவியுடன் மேலே கொண்டு வந்தனர். இவற்றை ஒரு பக்கத்தில் சிறிய மலைபோல் அடுக்கி வைத்து விட்டு அங்கு நின்றுகொண்டிருந்தனர். தொண்டர்களும் அவர்களைக் கடைசியாக இறங்குமாறு கேட்டிருந்தனர். கிளிக்கூடு மேலே வைக்கப்பட்டிருந்தது.

வரிசை நகரத்தொடங்கியது. பெரிய பெட்டிகளும் இருந்தன. இவற்றைத் தொண்டர்கள் இருவராகப் பிடித்துப் படிகளால் இறக்கினர். வத்தையின் பின்பகுதியில் எல்லாவற்றையும் ஒன்றாக அடுக்கினர். வத்தையில் நின்றவர்களும் உதவி செய்தார்கள்.

பெல்பொட்டம் அணிந்த மங்கையின் குடும்பத்தினருடன் தொண்டர்கள் நெருக்கமாகப் பழகத்தொடங்கியிருந்தனர். தொண்டர்களில் ஒருவன் அந்த நாய்க்குட்டியை வாங்கிக்கொள்ள முனையவே அதுவும் வள் வள் என்று குரைக்கத் தொடங்கியிருந்தது. மேலும் சில தொண்டர்கள் கூடி அந்தச் சடைநாயை மேலும் குரைக்க வைத்தனர். தொண்டர்களும் தங்கள் பணிமுடிவுக்கு வந்து கொண்டிருந்ததனால் விளையாட்டாகவே அங்குமிங்குமாக வேடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கடைசியாக நேரம் வந்ததும் ஒருவன் கிளிக்கூட்டை எட்டித் தூக்கினான் பொட்டலங்களைச் சிலர் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டனர். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைத் தூக்கிக் கொண்டு இறங்கினர். மங்கையின் தாயார் எல்லாம் சரியாகப் போகிறதா என்பதை வாசலில் நின்று கொண்டு எண்ணி விட்டாள். நாய்க்குட்டியையும் ஒருவன் வாங்கி விட்டிருந்தான். வத்தையில் ஏறிக்கொண்டவர்கள் சாமான்களை வத்தையின் பின் பகுதியில் வைத்துவிட்டு உட்கார்ந்து கொண்டனர். சில தொண்டர்கள் முன் அணியப் பகுதியில் நின்றுகொண்டிருந்தனர். கடைசியாகக் குடும்பத்தினரும் ஏற வத்தை புறப்படுவதற்குத் தயாரானது. சடைநாயை வைத்திருந்த தொண்டன் அதை மங்கையிடம் திருப்பிக் கொடுக்க அவளும் அதை அணைத்துப் பிடித்தாள். தொண்டனும் தனது கைகளை விடுவித்துக் கொண்டான். நாய் தொடர்ந்து வள் வள் என்று குரைத்துக் கொண்டிருந்தது. வத்தையில் உதவிக்கு நின்றவன் இதை வினோதமாகப் பார்த்துவிட்டுக் கூறினான்.

"இப்படியாக நாய்க்குட்டிகள் எங்கட நாய்களுக்குப் பழக்கமில்ல. கட்டுல போட்டுக் கவனமாக வளர்க்க வேணும்"

அருளர்

(தொடர்ச்சி 19 இல்......)

# தமிழினியின் கூர்வாள்

விஸ்வா




புற்றுநோயால் பாதிக்கப்பட்டு காலமான, விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியின் 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்ற நூல் சர்ச்சைகளையும், விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. முகநூல், மற்றும் ஊடகங்கள் பலவற்றிலும் இது குறித்து இப்போது பேசப்படுகின்றது.

இந்த நூல் கிளிநொச்சியில் அண்மையில் வெளியிடப்பட்டது. கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த எவரும் கலந்து கொள்ளவில்லை. நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னரிலிருந்தே நூல் குறித்து பலர் விமர்சிக்கத் தொடங்கி விட்டனர்.

தமிழினி இறந்ததன் பின்னர் இந்த நூல் வெளிவந்துள்ளதால் தமிழினியால் சொல்லப்படாத விடயங்கள் இதில் புகுத்தப்பட்டுள்ளது எனவும் அதே வேளையில், இந்த நூலை இந்த தருணத்தில் வெளியிடுவதற்கான நோக்கம், பின்னணிகள் உள்ளதாகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

'காலச்சுவடு' வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூலில் தமிழினியின் கருத்துக்களுடன் இடைச்செருகலாக அவர் சொல்லாத விடயங்களும் இடம்பெறுள்ளதாக முகநூலிலும், ஊடகங்களிலும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நூலின் பின் அட்டையில் தமிழக எழுத்தாளர் பிரேமா ரேவதி எழுதிய குறிப்பு, தமிழினி கூறியதாக வெளிவந்துள்ளது. இதனைத் தவறு என தமிழினியின் கணவர் ஜெயகுமார் ஏற்றுக் கொண்டுள்ளார். பின்னர் வரும் பதிப்புக்களில் அது திருத்தப்படும் என்றும் அவர் கூறிமிருக்கின்றார்.

'ஒரு கூர்வாளின் நிழலில்' என்ற தலைப்பையும் எழுத்தாளர் பிரேமா ரேவதியே வைத்திருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற காலத்தில் வன்னிக்கு வருகை தந்த பிரேமா ரேவதி தமிழினியை சந்தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளார். போர் முடிவுற்று தமிழினி கைதான பின்னர், காலச்சுவடு சஞ்சிகையில் 'அன்புள்ள தமிழினி' என்ற தலைப்பில் நீண்ட மடல் ஒன்றை அவர் வரைந்திருந்தார்.

உங்களையும் உங்களைப் போன்ற இளைஞர்களையும் முடிவற்ற துயரப் பாதைக்கு இட்டுச் சென்று அவமானகரமான அடிமைகளாக வாழும்படி கை விட்டுச் சென்றுவிட்ட உங்கள் தலைவரின் மீது கடும் கோபமும், வெறுப்பும் வருகின்றது. ஆனால், ஒடுக்குமுறை உள்ள வரைக்கும் போராட்டம் இருக்கும். நம்முடைய தவறுகளுக்கும் கையாலாகாத்தனங்களுக்கும் வரலாறுதான் தீர்ப்பெழுதும் அல்லவா தமிழினி?' என்று அந்த மடலை நிறைவு செய்திருக்கின்றார்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க, 'ஒரு கூர்வாளின் நிழலில்' என்ற இந்த நூல் தொடர்பான சர்ச்சைகளுக்கு என்ன காரணம் என்று பார்ப்போம். தமிழினி இந்த நூலை தனது அனுபவங்களின் தொகுப்பாகவே எழுதியுள்ளார். பல சந்தர்ப்பங்களில் இயக்கத்தின் நடவடிக்கைகளை கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

கிழக்கில் மாவிலாறு பகுதியில் யுத்தம் ஆரம்பமானதும், அதற்கு வழிவகுத்த சம்பவம் தொடர்பிலும் அனைவருக்கும் தெரியும். அது பற்றி தமிழினி இவ்வாறு தனது கருத்தை பதிவு செய்துள்ளார் :

'தலைவரால் திருகோணமலைப் படையணிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ஆட்லறிகளைப் பயன்படுத்தி வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியும் என திருகோணமலையின் தளபதியாக இருந்த சொர்ணம் கருதினார்.

அவரது திட்டத்திற்கு தலைவருடைய அனுசரணையும் இருந்தது. இயக்கம் எதிர்பார்த்தபடியே இறுதி யுத்தம் திருகோணமலை மாவிலாற்றங்கரையில் மூண்டது. 2006 ஆகஸ்ட் 15 இல் மாவிலாறு பகுதி முழுமையாக இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதுடன், மூதூர், சம்பூர், கட்டைப்பறிச்சான், தோப்பூர் எனப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை நோக்கி யுத்தம் விரிவடையத் தொடங்கியது.

புலிகள் இயக்கம் எதிர்பார்த்தமைக்கு மாறாக திருகோணமலைத் தோல்விகள் அமைந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தின் மீது இருந்த அதீத நம்பிக்கை மாவிலாற்றில் பலத்த அடிவாங்கத் தொடங்கியது'

பிரபாகரனின் திட்டமும் எதிர்பார்ப்பும் தோல்வியடைந்தமை குறித்து தமிழினி இவ்வாறு குறிப்பிட்டுள்ளதை பிரபாகரனை இன்றும் நேசிப்பதாக கூறுபவர்கள் கடும் கோபத்துடன் நோக்குகின்றனர். தமிழினியின் இவ்வாறான கூற்றுக்கள் அவர்களை கூர்வாளினால் குத்துவதாக துடிக்கின்றனர்.

மாவிலாறு தடுப்புக் கதவு விடுதலைப் புலிகளால் மூடப்பட்டதும் அதனைத் திறப்பதற்கு சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணை வழங்கிய சர்வதேச தரப்பினரும் முயன்றதும், விடுதலைப்புலிகள் அதனை நிராகரித்ததும், பின்னர் அதனை சாட்டாக வைத்து மஹிந்த அரசாங்கம் படை நடவடிக்கை மேற்கொண்டதும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மைகளே.

போர் வெற்றிவிழா ஒன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ கூறிய கருத்தொன்றையும் இங்கு நினைவு படுத்தலாம்.

"விடுதலைப்புலிகளை முற்றாக அழிப்பதற்கான போரைத் தொடங்குவதற்கு மாவிலாறு புவியியல் ரீதியாக சாதகமான பகுதியாக இருந்தது. அதற்கான வாய்ப்பினை விடுதலைப்புலிகளே ஏற்படுத்தி தந்தனர்" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

நூலின் ஒரு இடத்தில், தங்கள் தலைவரை சந்தித்த அனுபவத்தை தமிழினி குறிப்பிடுகின்றார்.

'ஒரு நாள் நானும், தளபதிகள் விதுஷாவும், துர்க்காவும் தலைவரை சந்திப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தோம். அது சமாதானம் தொடங்கிய ஆரம்ப காலகட்டம். அந்த சந்திப்பில் தலைவர் பல விடயங்கள் பற்றியும் எம்மோடு பேசிக் கொண்டிருந்தார். அதில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார் :

"மட்டக்களப்பு, அம்பாறை போராளிகள் போராட்டத்தில் எவ்வளவோ கஷ்டங்களைப் பட்டிருக்கிறாங்கள். அவங்கட குடும்பங்களுக்கும் அந்த மக்களுக்கும் நிறைய வேலைகள் செய்ய வேணும். நிதித்துறை மூலமா ஓரளவு பண உதவியையும் செய்து, கருணாவுக்கும் சொல்லியிருக்கிறன் அந்தச் சனத்திற்கு நிறைய உதவிகள் செய்யச் சொல்லி. அவன் செய்யிறான். இவங்கள்.. பொட்டு ஆக்கள் என்னட்ட வந்து அங்க அது பிழை, இது பிழை எண்டு சொல்லிக் கொண்டு நிக்கிறாங்கள், தளபதிமாருக்குள்ள முதலில ஒற்றுமை இருக்க வேணும்" என்று குறிப்பிட்டார்.

பிரபாகரன் தனக்கு நெருக்கமானவர்களிடம் குறிப்பாக, தனது நம்பிக்கைக்குரிய போராளிகளிடம் இவ்வாறு வெளிப்படையாக பேசுவது வழக்கம். இவ்வாறு அவர் கூறிய விடயங்களை சில போராளிகள் பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையா துரோகி என்ற பட்டத்துடன் விடுதலைப்புலிகளால் 'மரண தண்டனை' வழங்கப்பட்டமை தெரிந்ததே. பின்னர், ஒரு சந்தர்ப்பத்தில் அன்ரன் பாலசிங்கத்திடம் பிரபாகரன் இது பற்றி குறிப்பிடுகையில், மாத்தையா பற்றி பொட்டு தந்த குற்றச்சாட்டு அறிக்கையில் ஐம்பது வீதம் கூட சரியாக இல்லை என்று கூறினாராம். இதனை அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் கூறியதாக அவருடன் நெருக்கமானவரான எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இறுதிப் போரின் போது, புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் கூறியதாக தமிழினி பதிவு செய்துள்ள குறிப்பு இது :

"ஒரு அதிசயம் நடந்தாலே தவிர இயக்கம் வெல்வது என்பது இனிச் சாத்தியமில்லை.. இயக்கத்தின் ஆவணங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை முற்றாக அழித்து விடுங்கள். மக்கள் இராணுவத்திடம் செல்லத் தொடங்கி விட்டார்கள், இறுதிக் கட்டத்தில் போராளிகளும் அவர்களோடு சேர்ந்து செல்ல வேண்டி வரும் போது, 'இதிலே புலி இருந்தால் எழும்பி வா' என்று கூப்பிடுவான். அப்போது நான் புலி என எழுந்து போகும் போது சுட்டுக் கொல்லுவான், இதுதான் நடக்கப்போகுது.

யுத்தத்தில ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துவதற்கு தலைமை முழு முயற்சிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறது, ஆனாலும் திரும்பவும் ஒரு விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள், அதிசயமொன்று நடந்தாலே தவிர நாங்கள் வெல்லுறது சாத்தியமில்லை, நான் உங்களை குழப்புவதற்காக இப்படி சொல்லவில்லை. உண்மையான நிலைப்பாட்டைச் சொல்லுகிறேன், முக்கியமாக உங்களை இன்றைக்கு கூப்பிட்ட விடயம் உங்களிடமிருக்கும் ஆவணங்களை அழித்துவிடுங்கள் என்பதை கூறுவதற்காகத்தான்"

இதனை குறிப்பிட்டுள்ள தமிழினி, "காயப்பட்டிருந்த போராளிகளைப் பற்றியோ அல்லது இயக்கத்தையே நம்பி பராமரிப்பு இல்லங்களில் இருந்தவர்களைப் பற்றியோ கூட ஒரு வார்த்தை கூறப்படவில்லை. பெண் போராளிகள் எதிர்நோக்கக் கூடிய இரட்டிப்பு ஆபத்து பற்றியோ எதுவுமே பேசப்படவில்லை. ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவும் தோன்றாத மனநிலையில், அனைவரும் கலைந்து சென்றோம். விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களுக்கு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற இறுதியான ஒன்றுகூடல் அதுவாகத்தான் இருந்தது" என்றும் கூறியுள்ளார்.

"பொட்டம்மான் கதைக்கிற கதைகளை நினைச்சா விசர்தான் பிடிக்கும். எனக்கெண்டால் அவரில் இருந்த கொஞ்சநஞ்ச மரியாதையும் போட்டுது. நிலைமைகள் விளங்காமல் கதைச்சுக் கொண்டு நிற்கிறார்" என்று விதுஷா கூறியதையும் தமிழினி குறிப்பிட்டுள்ளார்.

"எல்லாரும் என்னுடைய கையிலதான் எல்லாம் இருக்குது எண்டு நினைச்சுக் கொண்டிருக்கினம். என்னட்ட ஒண்டுமில்லை என்ர கை வெறுங்கை" என்று தலைவர் தனது கையை விரித்துக் காட்டியதாக ஈழப்பிரியன் தனது கைகளை விரித்துக் காட்டினார். அண்ணையே இப்பிடிச் சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும்? என மனவருத்தத்துடன் கூறிவிட்டுச் சென்ற அடுத்த சில நாட்களில், ஈழப் பிரியன் என்ற இளம் போராளி மகாபாரதத்தில் வரும் அபிமன்யுவின் தீரத்துடன் கிளிநொச்சியில் தன்னைச் சுற்றி வளைத்த இராணுவத்துடன் மோதி வீரமரணத்தைத் தழுவினான் என்றும் தமிழினி குறிப்பிட்டுள்ளார்.

(தொடர்ச்சி 23 இல்......)

# உண்மை வெளிவருகிறது

பகுதி - 6

தமிழ் ஈழ விடுதலைப்புலிப் போராளிகளுக்கு ஆய்வுப் பகுப்பாய்வுப் பிரிவி (RAW, இந்திய உளவுப்படை)னால் இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பது பற்றி ஏனைய கூற்றுக்களும் உள்ளன.

தமிழ் ஈழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க டெல்லி இணங்கியதும், செயற்றிட்டத்தை நடைமுறையாகச் செயற்படுத்துவதற்குப் பிரபாகரன் இந்தியாவுக்குத் திரும்பி வரவேண்டியது அவசியமாக இருந்தது. அந்த நேரத்தில் பிரபாகரன் வன்னியில் பயிற்சி முகாம் ஒன்றை நடாத்தி வந்தார்.

தமிழ் ஈழ விடுதலை அமைப்பு TELO போன்ற குழுக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பயிற்சி வசதிகள் மீது பிரபாகரன் சீற்றம் கொண்டிருந்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஒடுங்கிக் கிடந்த தமிழ்ப் போராளிக் குழுக்களை உசுப்பேற்றி வருவது குறித்து பிரபாகரன் குழம்பிப் போயுமிருந்தார்.

ஆய்வுப் பகுப்பாய்வுப் பிரிவு (RAW)அதிகாரிகள் பாண்டிச்சேரியில் கூட்டம் ஒன்றில் பிரபாகரனைச் சந்தித்தார்கள்.

அப்போது பிரபாகரனின் சீற்றத்தைத் தணிக்கும் முகமாக அவர்கள் பிரபாகரனுக்கான பரிசுப்பொருளாக வழங்குவதற்கு ஒரு 7.62 ஜேர்மன் லுகர் கைத்துப்பாக்கி ஒன்றையும் தம்முடன் கொண்டு வந்தார்கள்.

தானியங்கி மற்றும் அரை குறைத் தானியங்கி ஆயுதங்கள், தானகவே ரவைகளை ஏற்றும் சுழல் துப்பாக்கிகள், 84 மி.மீ. ரொக்கட் ஏவுகணைகள், பாரிய சுடுகலன்கள் பாவனை மற்றும் நிலக்கண்ணிவெடிகளைப் புதைப்பது, தேசப்படம் வாசித்தல், கெரில்லா யுத்தம், மலையேறுதல், அழிப்பு நடவடிக்கைகள், பீரங்கிப் படை வண்டி எதிர்ப்பு யுத்தம் ஆகியனவற்றில் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு பயிற்சிச் செயற்திட்டமும் மூன்று முதல் நான்கு மாதங்களே பிடித்தன. அவை சிலசமயங்கள் ஆறு மாதங்கள் வரை சென்றன.

அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்குத் தனித்தனியாகவும் பயிற்சி வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சுழியோடுதல் மற்றும் கடலடியில் நாசகார செயற்பாடுகள் ஆகியவற்றில் விசேட பயிற்சி அளிக்கப்பட்டது.




வேவுத் தகவல் சேகரிப்புக்கு குறிப்பிட்ட சில தமிழ்ப் போராளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

பயிற்சிக்குப் பின்னர், பலதரப்பட்ட குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான ஒழுங்கை ஆய்வுப் பகுப்பாய்வுப் பிரிவு (RAW) செய்தது.

எந்த விதமான பயிற்சியிலும் சம்பந்தப்படவில்லை எனவும் இந்தியாவில் தமிழ்க் குழுக்களை ஆயுததாரிகளாக்கவில்லை என்றும் அல்லது எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் சம்பந்தப்படவில்லை எனவும் முடிந்த அளவுக்கு 1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்தியா தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வந்தது.

1983 ஆம் ஆண்டு, தமிழ் ஆயுதக் குழுக்கள் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் பிரதானமாகச் சென்னை மற்றும் மதுரையில் அலுவலகங்களைத் திறக்க ஆரம்பித்தன.

தமிழ் ஆயுதக் குழுக்களின் முகாம்கள் சென்னை, செங்கல்பட்டு, திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவற்றில் தலைதூக்கின.

தமிழ் ஆயுதக் குழுக்களின் பயிற்சிச் செயற்றிட்டத்தை இந்தியா மிக நன்றாகவே இரகசியமாக வைத்துக் கொண்டது.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் அ. அமிர்தலிங்கத்துக்குக் கூட ஆயுதப் பயிற்சி பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

இந்திய பயிற்சிச் செயற்றிட்டம் பற்றி அவருக்கு ஏப்ரல் மாதம் 1984 ஆம் ஆண்டளவிலேயே தெரிய வந்தது.

இந்தியா தனது அதிகாரத்தை விஸ்தரிப்பதில் அதற்கு உதவுவதற்காக, அமெரிக்காவின் மத்திய உளவு முகவர் அமைப்புக்கு (CIA) சமமானதாகக் கருதப்படும் இந்தியாவின் முதலாவது வெளிநாட்டு உளவு முகவர் அமைப்பான (RAW) வை அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி முன்கூட்டியே 1968 ஆம் ஆண்டு உருவாக்கினார்.

இந்த ஒற்றர் அமைப்பு பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வையின் கீழ் வந்தது.

பங்களாதேஷாக உருவாகிய கிழக்குப் பாகிஸ்தானில் இந்தப் புதிய முகவர் அமைப்பு உருமறைத்த இரகசியமான நடவடிக்கைகளில் முன்னணி மற்றும் சுறுசுறுப்பான பங்கை வகித்தது.

இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தின்போது இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டின் காரணத்தினால் தான் இந்த நாட்டில் தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைமீடுகள் எழுச்சி பெற்றன என்பதையும் படிப்படியாகத் தமிழ் பயங்கரவாதம் தலை தூக்கியது என்பதையும் இங்கு சரியாகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மறுத்ததால், அவர்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் சமுகமளிக்கவில்லை என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் உட்பட அதிக எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவில் புகலிடம் கோரினார்கள்.

20ஆம் திகதி அக்டோபர் 1983 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இருந்த மூன்று கால அவகாசத்தின் கடைசி நாளாகும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யத் தவறிவிட்டார்கள். இதன் விளைவாக, அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் இருந்த ஆசனங்கள் காலியாகின.

அவர்கள் இலங்கையின் தேசிய அரசப் பேரவையில் தத்தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும், பிரதிநிதித்துவத்தையும் இழந்தார்கள்.

1989 ஆம் ஆண்டு 23 ஆம் திகதி ஜூலை மாதம் நடு இரவு, பிரபாகரன், கிட்டு, ஐயர், புலேந்திரன், செல்லக்கிளி, சந்தோஷம் மற்றும் அப்பையா உள்ளடங்களாக மொத்தம் 25 பேர் அடங்கிய தமிழ் ஈழ விடுதலை இயக்கக் குழு ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த திருநெல்வேலிச் சந்தியில் தொலைபேசித் திணைக்களத்தினால் தோண்டப்பட்டிருந்த குழி ஒன்றில் அதிசக்திவாய்ந்த நிலக்கண்ணிகளைப் புதைத்து வைத்து, இராணுவ வாகனங்கள் அதனூடாகக் கடந்து செல்வதை எதிர்பார்த்து வீதியின் இருமருங்கிலும் பதுங்கியிருந்தது.

அன்றைய தினம் செல்லக்கிளி மற்றும் ஏனைய சிலர் பற்றி இராணுவத்திற்குத் தகவல் ஊட்டப்பட்டது.

இரவுநேர ரோந்துக்கு வெளியே செல்லக்கூடாது என்ற உத்தரவை இராணுவம் அலட்சியப்படுத்தி, செல்லக்கிளியைத் தேடி இரண்டு வாகன இராணுவத் தொடரணி ஒன்று வெளியே சென்றது....

(தொடரும்.....)




## சமந்தாவின் முடிவு

கத்தி படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு விஜய், சமந்தா கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. தெறி படத்தில் விஜயின் காதல் மனைவியாக சமந்தா நடித்துள்ளார். இப்படம் ஏப்ரல் 14 இல் உலகெங்கும் வெளியாகவுள்ளது. இந்நிலையில் தெறி அனுபவம் குறித்துப் பேசிய சமந்தா காதல் கதைகளில் இருந்து மாறுபட்டு குடும்பப் பெண்ணாக நடித்திருப்பது மனதிற்கு நிறைவாகவுள்ளது. இனி இதுபோன்ற வித்தியாசமான கதாபாத்திரங்களில் தேடிப்பிடித்து நடிப்பதையே விரும்புகிறேன்.

## கதை தான் முக்கியம்

நான் நடிக்கும் படத்தில் எந்த ஹீரோ என்னுடன் நடிக்கிறார் என்று பார்ப்பது இல்லை. கதை எப்படி இருக்கிறது என்றுதான் பார்ப்பேன் கதை நன்றாக அமைந்துவிட்டால் எந்த ஹீரோ என்றாலும் நான் நடிக்கத் தயங்கமாட்டேன் எனக்கூறுகிறார் ஹன்சிகா. கதையில் பாத்திரம் எனக்கு பொருத்தமாக நன்றாக இருந்தால் நிச்சயம் நடிப்பேன். நான் நடிக்கும் படங்கள் அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்று தான் விரும்புகிறேன். தோல்வி அடையும் போது என்னுடைய மனம் பாதிக்கும் வருந்துவேன். நானும் பெண் தானே.

எனது படங்கள் வெற்றி பெறும் போது மகிழ்ச்சி அடைவேன். நான் நடிக்கும் படங்கள் அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் கதை கேட்டு எனக்கு பொருத்தமான பாத்திரங்களில் நடிக்கிறேன் என்றார்.



## இப்போதாவது தெரிந்ததே

நான் மீண்டும் நீச்சல் உடையில் நடிக்கப் போவதாக தகவல் பரவி உள்ளது. அப்படி நடிக்க வேண்டும் என்று என்னிடம் யாரும் கேட்கவில்லை. நானும் அதை விரும்பவில்லை. ஆரம்பத்தில் அது போன்ற கவர்ச்சி உடையில் நடித்தேன். இனி நீச்சல் உடையில் நடிக்க மாட்டேன் என்கிறார் நயன்தாரா. உடலை காட்டும் உடை அணிந்து கவர்ச்சி காட்டுவதை விட, கண்களால் தான் கவர்ச்சியை வெளிப்படுத்த முடியும் என்பதை இப்போது தெரிந்து கொண்டேன். உடைகளின் அளவைக் குறைத்து கவர்ச்சி காட்டினாலும் கண்களில் அதை பிரதிபலிக்கும்போது தான் இந்த கவர்ச்சியில் ஈர்ப்பு இருக்கும். எனவே நான் மீண்டும் நீச்சல் உடைக்கு மாறுவேன் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. அதில் எனக்கு உடன்பாடும் இல்லை என்றார்.



மறைந்த எடிட்டர் கிஷோரின் குடும்பத்தினர் தற்போது மிகவும் க
இருப்பதாக கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து சிவகார்த்திகேயன், ர
பாலா, வெற்றிமாறன் ஆகியோர் தான் தற்போது வரை அவரின்
குடும்பத்திற்கு உதவி செய்து வருகிறார்களாம். இந்நிலையில் கி
தந்தை கூறுகையில் 'இந்த விருதை எல்லாம் வைத்து என்ன செ
மகன் விருதை தாண்டி ஏதும் பெறவில்லை. மேலும், தனுஷெல்
போன் கூட செய்து ஆறுதல் கூறவில்லை' என கண்ணீருடன் கூ

## ஆறுதல் கூற மறந்
## தனுஷ்





## வாலிப ராஜா



## எரிச்சல்தான் வரும்



ஸ்ருதிஹாசன் ஏதாவது சர்ச்சையான கருத்துக்களை கூறுவார். சில மாதங்களுக்கு முன் கூட, இவர் திருமண விஷயத்தில் ஒரு சர்ச்சையான கருத்தைக் கூறி, பின் நான் அப்படி கூறவே இல்லை என்றார். தற்போது S3 படப்பிடிப்பில் இருக்கும் இவர் ஒரு பேட்டியில் ஆண்கள் குறித்து கூறிய கருத்திற்கு பலராலும் பாராட்டு கிடைத்து வருகின்றது. இதில் 'அழகான பெண்கள் இருந்தால் அவர்களை ஆண்கள் பார்ப்பதில் தவறே இல்லை. அதிலும், ஹீரோயின் என்றால் ரசித்து பார்க்கிறார்கள், அவர்கள் பார்வையில் ஒரு நேர்மை இருக்க வேண்டும், தவறான நோக்கத்தில் பார்த்தால் எனக்கு எரிச்சல் வரும்' என கூறியுள்ளார்.

## ரஜினியுடன் ஒப்பிடாதீர்கள்



காஞ்சனா 2 படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு ராகவா லாரன்ஸ் நடிக்கும் படம் மொட்ட சிவா கெட்ட சிவா. இப்படத்தின் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. இதைப் பார்த்த ரசிகர்கள் லாரன்ஸ் நடிப்பை ரஜினியுடன் ஒப்பிடத் தொடங்கினார்கள். இந்நிலையில் டுவிட்டரில் இதைக் குறிப்பிட்ட ராகவா லாரன்ஸ் என்னை ரஜினியுடன் ஒப்பிடாதீர்கள். அவர் முன்னல் நான் ஒன்றுமேயில்லை என ரசிகர்களிடம் கேட்டுக் கொண்டார்.

## திறமைக்குத்தான் முதலிடம்

சினிமாவில் வெற்றி படம் கொடுத்தால் எல்லோரும் திரும்பி பார்ப்பார்கள் என்றும், பட வாய்ப்புகள் குவியும் என்றும் சிலர் நம்புகிறார்கள். ஆனால் அது தவறு. ஒரு வெற்றி படம் கொடுத்தால் எவரும் தூக்கி வைத்து கொண்டாட மாட்டார்கள். அடுத்த வாய்ப்புக்காக போராடத்தான் வேண்டும். நிறைய நடிகர்கள் இதுபோல் ஒரு படத்தை வெற்றி படமாக கொடுத்துவிட்டு வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறார்கள் என நடிகை தமன்னா தெரிவித்தார். திறமை தான் முக்கியம். திறமை இருந்தால் மட்டும் தான் பட வாய்ப்புகள் வரும். நான் சினிமாவுக்கு வந்த புதிதில் படங்கள் சரியாக ஓடவில்லை. அதன்பிறகு ஒரே ஒரு படம் வெற்றி பெற்றது. அந்த படத்தை வைத்து எனக்கு வாய்ப்பு கள் வரவில்லை. 'ஹேப்பி டேஸ்' என்ற தெலுங்கு படம் நன்றாக ஓடியது. அதன்பிறகு வந்த படங்கள் தோல்வி யடைந்தன. ஆனாலும், நான் ஒரு நடிகையாக இப்போதும் நிலைத்து இருப்பதற்கு காரணம் எனது திறமை தான். படங்கள் தோல்வியடைந்தாலும் எனக்கு திறமை இருக்கிறது என்பதை இயக்குனர் கள் அடையாளம் கண்டு கொண்டு வாய்ப்பு கள் தொடர்ந்து தருகி றார்கள். இதனால் தான் தோல்வி கொடுத்தாலும், எனக்கு படங்கள் வருகின்றன. எனவே வெற்றி தோல்வியை பற்றி நடிகர்கள் கவலைப்படக் கூடாது. திறமை இருந்தால் சினிமாவில் நிரந்தரமாக நிலைத்து இருக்கலாம்." என்கிறார்.





## தேசிய விருதுகள் அறிவிப்பு

இந்திய சினிமாவை கௌரவப்படுத்தும் விதமாக வருடந் தோறும் இந்திய அரசு தேசிய விருதுகளை கொடுத்து வருகின்றது. அந்த வகையில் 63 ஆவது தேசிய விருது வென்றவர்கள் பட்டியல் வெளிவந்துள்ளது. விருது வென்றவர்களின் விபரம் :

சிறந்த நடிகர் - அமிதாப் பச்சன் (PIKU)
சிறந்த நடிகை - கங்கனா ரன்வத் (தானு வெட்ஸ் மானு ரிட்டர்ன்ஸ்)
சிறந்த இயக்குனர் - சஞ்சய் லீலா பஞ்சாலி (பஜிரோ மஸ்தானி)
சிறந்த படம் - பாகுபலி
திரைப்பட துறைக்கு உகந்த மாநிலம் - குஜராத்
சிறந்த தமிழ் படம் - விசாரணை
சிறந்த தெலுங்கு படம் - காஞ்சி
சிறந்த மலையாள படம் - பதேமேரி
சிறந்த கன்னட படம் - திதி
சிறந்த ஹிந்தி படம் - தம் லகா கே ஹைசா
சிறந்த நடன அமைப்பாளர் - ரெமோ டி சோசா (பஜிராவ் மஸ்தானி)
சிறந்த பின்னணி இசை - இளையராஜா (தாரை தப்பட்டை)
சிறந்த எடிட்டிர் - மறைந்த கிஷோர் (விசாரணை)
சிறந்த வசனம் மற்றும் திரைக்கதை - பிகு, தானு வெட்ஸ் மனு
சிறந்த ஒளிப்பதிவு - பஜிராவ் மஸ்தானி
சிறந்த இசை - எம். ஜெயச்சந்திரன் (என்னு நிண்டே மொயிதீன்)
சிறந்த துணை நடிகர் - சமுத்திரக்கனி (விசாரணை)
Special Mention சிறந்த நடிகை - ரித்திகா சிங் (இறுதிச்சுற்று)
Special Mention சிறந்த நடிகர் - ஜெயசூர்யா (Su Su Sudhi Valmeekam)
பிரபலமான படம் - பஜ்ரங்கி பைஜான்
சிறந்த VFX - பாகுபலி

து மிகவும் கஷ்டத்தில்
த்திகேயன், ராதிகா,
ரை அவரின்
நிலையில் கிஷோரின்
து என்ன செய்வது. என்
ம். தனுஷெல்லாம் ஒரு
ணீருடன் கூறியுள்ளார்.

## 3 மறந்த
## ஷ்



# மலையக மக்களின் வாழ்வாதாரம்

# அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

*(சென்ற வாரத் தொடர்ச்சி....)*

04. பிரஜாவுரிமை, சமயம், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், மொழியுரிமை, தனியாள் மற்றும் குழு உரிமைகள், அரசியல் கொள்கை மீதான குறிக்கப்பட்ட தத்துவங்கள்

அரசியல் யாப்பில் வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வாழ்வாதாரத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக இந்நாட்டில் 200 வருடகாலமாக அதாவது நான்கு தலைமுறைகளாக வாழ்ந்து வரும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும் இவ்வுரிமைகளில் ஆண், பெண் சம உரிமை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்த வேண்டும் இதில்:

ஒவ்வொரு நபருக்கும் ஒரு வீடு கிடைக்க சட்டத்தில் இடம் வேண்டும்.

நியாயமான நீதிமன்ற தீர்ப்பு அல்லது மாற்று வசிப்பிடமின்றி எந்தவொரு நபரினது வீட்டு உரிமையை அல்லது வசிப்பிடத்தை இல்லாதொழிக்க கூடாது.

வீட்டுத்திட்டம் தேசிய திட்டத்துடன் ஒத்ததாக காணப்பட வேண்டும். இதில் மலையகத்தில் கிராம அபிவிருத்தி திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

தொடர்ச்சியாக நாட்டில் 10 வருடங்கள் வசித்தவர்களுக்கு வீடு,காணி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பில் உள்ள உறுப்புரை 27 ஐ மீண்டும் சேர்த்துக் கொள்வதுடன் உறுப்புரை 29 ஐ நீக்கவேண்டும்.

அரசியல் யாப்பில் குழுக்களாக செயற்படும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களின் போது அரச மற்றும் தனியார் துறையினருக்கு எதிராக வழக்கு தொடரும் சந்தர்ப்பம் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பில் சாதாரண நீதிமன்றில் வழக்கு தொடரும் சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

முதியோருக்கான சமூக பாதுகாப்பு மற்றும் கொடுப்பனவு வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பதிவு பிரஜைகள் அல்லது வம்சாவளி பிரஜைகள் என்ற பதம் நீக்கப்பட்டு அனைவரும் சமத்துவத்திற்கான பிரஜைகள் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சமய சார்பற்ற அரசியலமைப்பாக (உதாரணமாக இந்திய அரசியல் சாசனம்)



காணப்படுவதுடன், அனைத்து மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தொழில் வாய்ப்புகளின் போது இன விகிதாசார முறையில் தெரிவு செய்தல்.

சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக பிரகடனப்படுத்துவதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் சேர்க்கப்படுவதுடன் சிங்களமும், தமிழும் ஆவணப்படுத்தப்படும் மொழியாகவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முறைசாரா தொழிலாளர்கள் உதாரணம் வீட்டுவேலை தொழிலாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சிறு கைத்தொழில் புரிவோர் தொழிலாளர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இவர்கள் தொழிற் சங்கத்தை உருவாக்கி கொள்ளவும் அதில் பங்களிப்பு செய்யவும் உரித்துடையவர்கள் ஆவதுடன் தொழிற் சட்டத்திலும் உள்வாங்கப்படுபவர்களாகக் காணப்படவேண்டும்.

நகர சபை பிரதேச சபைகளுக்கு வரிப்பணம் செலுத்தும் உரிமையும் அதற்கான கணக்கு விபரங்களை கேட்கும் உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தொழிற்சட்டங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தப்படாத தொழில் தருநர்களுக்கு எதிராகவும் அதனை நடைமுறைப்படுத்தத் தவறும் அரச தனியார் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் சுதந்திரம் மற்றும் சர்வதேச தொழில் பட்டயம் அரச சாசனத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

மலையகத்தில் பெண் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வேலை நேர பிரச்சினை, சம்பளத்தினை தான் பெற்றுக்கொள்ள முடியாத பிரச்சினை, கட்டாய கருத்தடை போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்துதல் உட்பட தொழிலாளர்களுக்கான சம்பள முறைமை உருவாக்கப்படல் வேண்டும்.

பொரும்பான்மையாக மக்கள் காணப்படும் உயர் உத்தியோகஸ்தர்கள் நியமனங்களின் போது அதே சமூகத்தை சார்ந்த உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவதுடன் அல்லது அதற்கு ஒத்த பிரதி உத்தியோகஸ்தர்கள் நியமிப்பது முக்கியமானது அல்லது இருமொழி பயிற்சிகொண்டவர்கள் நியமிக்கப்படல் அத்தியாவசியமானது. பெண்களின் வேலைத்தளங்களில் பெண் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மலையக பாடசாலை கல்வியில் தேசிய திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன், மாணவர்களின் உடல் நல விடயங்களிலும், போக்குவரத்து, வளப்பகிர்வு போன்ற விடயங்களிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

மலையக இளைஞர்களுக்கான தேசிய விளையாட்டு திட்டத்தை அமுல்படுத்துவதுடன், அவர்களுக்கான தொழிற் பயிற்சி மற்றும் தொழில்திறன் அபிவிருத்திகளில் முக்கிய கவனம் செலுத்துதல்.

சமூக சீரழிவை ஏற்படுத்தும் மதுபான சாலைகளின் எண்ணிக்கையை குறைப்பதுடன் இது சம்பந்தமான முறையான சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.

மலையக பிரதேசத்தின் இயற்கை வளங்களான காடுகள், நீர் ஊற்றுக்கள், அருவிகள், ஆறுகள் பாதுகாக்கப்படுவதுடன், வன விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய கவனமும் அதிகமாக மலையக பிரதேசங்களில் பாவனைக்கு உட்படுத்தப்படும் இரசாயனங்களும் நிறுத்தப்பட வேண்டும்.

ஆண்-பெண் பால் சமநிலை பேணப்பட வேண்டும்.

படித்த இளைஞர்களுக்கு முறையான தொழில் வாய்ப்பை அரசு வழங்குவதுடன், அவர்கள் தொழிலை பெற்றுக்கொள்ளும் இடைப்பட்ட காலத்திற்கு அரசாங் நிதி மூலம் உதவித்தொகையை செலுத்தும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

சிறுவர்கள் சம்பந்தமான விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு அமைவாக பெருந்தோட்ட சிறுவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், பராமரிப்பு போன்ற வற்றிலும் கவனம் செலுத்துதல் முக்கியமானது.

**07. அதிகாரப் பகிர்வு**

எல்லை நிர்ணயத்தின் போது கிராமங்கள், தோட்டங்கள் துண்டாக்கப்படாமை கவனிக்கப்படுவதுடன் இன விகிதாசாரத்திற்கு ஏற்ற பங்கீடு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

தற்போதுள்ள சனத்தொகைக் கேற்பவும், புவியியல் நிலைப்பாட்டிற்கு அமைவாகவும் நுவரெலியா, மஸ்கெலியா தொகுதிகளை இரண்டாகப் பிரித்து தற்போதுள்ள 25 மாவட்டங்களுக்கு மேலதிகமாக 26 மாவட்டங்களாக உருவாக்குதல்.

இன விகிதாசாரத்திற்கு ஏற்ப மக்கள் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் இதற்காக தேர்தல் தொகுதி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையை உருவாக்கப்பட வேண்டும்.

சனத்தொகை பரம்பலுக்கு அமைவாகவும் புவியியல் அமைவிற்கு ஏற்பாகவும் நுவரெலியா மாவட்டத்தில் 10-12 பிரதேச செயலகங்களும், பிரதேச சபைகளும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

புவியியல் மற்றும் சனத்தொகை பரம்பலுக்கு அமைவாக கிராம சேவகர்கள் நியமிக்கப்பட வேண்டும் இதில் 350 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் என்ற திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**08. நீதித்துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பு**

நீதித்துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. சுயாதீன மாகச் செயற்படும் உரிமை நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டும்.

**09. அரசியல் யாப்பு நீதிமன்றம்**

குறிப்பிட்ட உரிமைகள் மற்றும் சட்டங்களை மீறும் பட்சத்தில் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்லும் உரிமை மக்களுக்கு காணப்பட வேண்டும். இதற்கான அரசியல் யாப்பு நீதிமன்றம் அமைக்கப்படுதல் அவசியமானது.

**10. அதிகார பங்கீடு பரவலாக்கம் மற்றும் உள்ளூராட்சி**

மலையக சமூகம் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மலையகம் அரச பொது நிர்வாக கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுவதுடன் அனைத்து ஆவணங்களில் இருந்தும் "பெருந்தோட்டம்" என குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதம் நீக்கப்பட வேண்டும்.

வளங்களைப் பங்கீடு செய்யும் போது பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமமாக பகிர்தல் முக்கியமானது.

தேசிய பொருளாதாரத்திற்கு கைகொடுத்துவரும் பெருந்தோட்ட தொழிற்துறை பாதுகாக்கப்படுவதுடன் அழிந்துவரும் இத்துறையை சீர்செய்து புதிய பரிணாமத்துடன் இளம் சமுதாயத்தினரை உள்வாங்கப்படும் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசியல் அதிகார பகிர்வு மற்றும் பங்கீடு இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டத்தில் தென் ஆபிரிக்காவின் அரசியல் யாப்பை முன்மாதிரியாக கொண்டு இயங்குதல்.

**10.மத்திய அதிகாரப் பங்கீடு**

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் மூலம் குறிப்பிட்ட அதிகார பகிர்வுதன்மை காணப்படவில்லை. எனவே மாநில அரசு என்ற நிலைப்பாட்டை கொண்ட திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**செ.இ. பெருமாள்**

**12. அரசியல் யாப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்கள்**

மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தனியான மனித உரிமை ஆணைக்குழு நியமிப்பதுடன் இதற்கு மேலதிமாக கல்வி மற்றும் சுகாதார ஆணைக்குழு உட்பட 19 ஆவது அரசியலமைப்பிற்காக உருவாக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 23 இல் ...)

# நெற்றியில் பொட்டு வைப்பதால் உண்டாகும் நன்மைகள் என்ன?



குழந்தையாக இருக்கும் போது நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்ள உங்கள் தந்தை வலியுறுத்தி இருப்பார். அதுவும் பாரம்பரிய குடும்பத்தில் இருந்து வந்திருந்தால் அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் ஏன் முக்கியம்? இதோ, அதற்கான காரணம் :

நம் நெற்றியில், இரண்டு புருவங்களுக்கு மத்தியில் தான் நம் உடலில் உள்ள முக்கிய நரம்புகள் சந்திக்கின்றன. இது போக இந்த புள்ளி ஆறாம் மூலமாக பார்க்க உதவும் என்றும் நம்பப்படுகிறது. ஆனால் இதனால் கிடைக்கும் அனைத்து ஆன்மீக பயன்களைத் தவிர இதில் பல உடல்நல பயன்களும் அடங்கியுள்ளன.

அக்குப்பிரஷர் நெறிமுறைகள் படி, உடலில் உள்ள இந்த புள்ளி மூலம் தலைவலிக்கு உடனடி தீர்வு கிடைக்குமாம். காரணம் இந்த புள்ளியின் மூலம் நரம்புகள் மற்றும் இரத்தக் குழாய்களின் குவிதல் உடனடியாக அமைதியும். தலைவலியை நீக்க இயற் சைனஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள வீக்கம் வற்றி, நாசி அடைப்பு மற்றும் சைனஸ் போன்ற பிரச்சினைகள் நீங்கும்.

இந்த புள்ளியில் மசாஜ் செய்தால் முகத்தில் வாதம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு பெரிய நிவாரணியாக விளங்கும். இந்த புள்ளியில் மசாஜ் செய்வதால் இரண்டு புருவங்களுக்கு மத்தியில் மூக்குக் கூம்பகத்தசை ஊக்குவிக்கப்படும்.

நெற்றிப் பொட்டுகள் சம்பந்தப்பட்ட கிளை நரம்புகளில் உள்ள

இந்த சிகிச்சையில் மருத்துவ எண்ணெய் தொடர்ச்சியாக நெற்றிப்பொட்டில் ஊற்றப்படும். இதனை 40–60 நிமிடங்கள் வரை ஊற்ற வேண்டும். முகநரம்புகளை இது மிகவும் ஆழமாக ஊக்குவிக்கும். இதனால் முக வாதத்திற்கும் தீர்வு கிடைக்கும்.

புருவங்களுக்கு நடுவே உள்ள லேசான கோடுகள் பல பேருக்கு வருத்தத்தை அளிக்கும். இந்த கோடுகளை நீக்க வேண்டுமானால், உங்கள் புருவங்களுக்கு மத்தியில்

அதனால் என்ன வந்து விடப் போகிறது எனப் பல பெண்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

ஆனால் இதனை ஏன் செய்ய வேண்டும் என்பதற்கு விஞ்ஞான பூர்வமான சான்றையும் காரணங்களையும் பல பெண்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

பொட்டுகள் பொதுவாக நெற்றியில் இரண்டு புருவங்களுக்கு மத்தியில் வைக்கப்படும். சிலர் அதனை சற்று மேல் உயர்த்தி வைக்க விரும்புவார்கள். ஆனால் அதற்கான தாக்கம் மாறப் போவதில்லை. சரி வைக்கும் இடம் நிலையாக கருதப்படும் முக்கியமான சக்கரமாகும். 'அஜ்னா சக்கரம்' என அழைக்கப்படும் இந்த சக்கரம் தான் விழிப்புணர்வு புள்ளியை குறிப்பிடும். மேலும் இது மூன்றாவது கண்ணின் நிலையை குறிக்கும்.

இந்த புள்ளி ஊக்குவிக்கப்படும் போது, ஒருவருக்கு பல வழிகளில் அது உதவிடும். மனதை அமைதியாக்குதல், பதற்றத்தை குறைத்தல் போன்றவைகள் அதில் சில. மேலும் ஒருவருக்கு இரண்டு கண்களால் பார்க்க முடியாத சில விஷயங்களை இந்த புள்ளியின்

கையான சிகிச்சைகளும் உள்ளது.

பொட்டு வைக்கும் போது நெற்றிப்புள்ளியை அழுத்தும் போது, மூக்கு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிக்கு செல்லும் முக்கிளை நரம்பின் (முகத்திற்கு செல்லும் நரம்பியல்கள்) ஒரு குறிப்பிட்ட கிளை (முதுகெலும்பு நரம்பு, நெற்றிப் பொட்டுகள் சம்பந்தப்பட்ட மற்றும் அக்குள் நரம்பு) ஊக்குவிக்கப்படும்.

இந்த புள்ளியை ஊக்குவிக்கும் போது, இந்த நரம்புகள் ஊக்குவிக்கப்பட்டு, மூக்கின் துவாரம், மூக்கின் சளி பாதை மற்றும் சைனஸ் போன்ற இடங்களில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் மூக்கடைப்பு நீங்கி,

க்ரானியல் மசில் பைபர் (CNVII) இந்த தசைகளை ஊக்குவிக்கும். முகத்தின் வாதத்திற்கு CNVII முக்கிய பங்கு வகிக்கிறது. காரணம் முகத்தின் அனைத்து தசை அசைவுக்கும் இதுவே பொறுப்பாகும்.

இந்த புள்ளியில் மசாஜ் செய்யப்படுவது ஆயுர்வேதத்தில் உள்ள பஞ்சகர்மா கிளையில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. இந்த சிகிச்சைக்கு 'ஷிரோதாரா' என்பதே பெயராகும்.

உள்ள புள்ளியை தினமும் ஒரு முறை மசாஜ் செய்யுங்கள்.

இந்த இடத்தில்தான் மூக்குக் கூம்பகத்தசை உள்ளது. இந்த இடத்தை மசாஜ் செய்வதால் தசைகள் திடமாவதுடன் இரத்த ஓட்டத்தை அதிகரித்து, அந்த பகுதியில் உள்ள சரும பகுதிகளை நரம்புகள் ஊக்குவிக்கும். இதனால் அவ்வகை கோடுகள் மறையத் தொடங்கும்.

# கர்ப்பிணிகளே கவனியுங்கள்!



குழந்தை பிறந்த அரை மணி நேரத்திற்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். சீம்பாலில் குழந்தைகளுக்கு தேவையான எதிர்ப்பு சத்துகள் உள்ளன. இதன் மூலம் பச்சிளம் குழந்தையை நிமோனியா, மூளைக்காய்ச்சல் போன்ற உயிர்க்கொல்லி நோய்களில் இருந்து காப்பாற்ற முடியும். குழந்தை பிறந்த 6 மாதங்கள் தாய்ப்பால் மட்டும் கொடுக்க வேண்டும். புட்டிப்பால் மற்றும் பால் பவுடர்களை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

இதன் மூலம் வயிற்றுப்போக்கு மற்றும் நுரையீரல் சளி போன்ற கொடிய நோய்களில் இருந்து குழந்தைகளை காப்பாற்ற முடியும். முதல் ஆறு மாதங்கள் கிரேப் வாட்டர் மற்றும் டொனிக்குகள் கொடுக்கக்கூடாது. தாய்ப்பால் எளிதில் ஜீரணிக்கும். குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் அதில் போதுமான அளவு உள்ளது.

மகப்பேறு காலத்தில் கர்ப்பிணி பெண்கள் அதிக புரதச் சத்துள்ள முட்டை, பால், பாதாம், பிஸ்தா போன்றவற்றுடன் கடல் மீன்கள் உட்கொண்டால் குழந்தை வளர்ச்சி சிறப்பானதாக அமையும். இரத்த சோகையை தவிர்க்க கீரை, பேரிச்சம்பழம், அப்பிள் பழம் போன்றவற்றுடன், இரும்புச்சத்து மாத்திரைகளை உட்கொள்வது சிறந்தது. கர்ப்பிணித் தாயின் உடல்நலன் நன்றாக இருக்கும் பட்சத்தில் வயிற்றில் வளரும் சிசுவின் வளர்ச்சியும் சிறப்பானதாக அமையும்.

# ஆலங்காய் புட்டு சாப்பிடுவோமா?



**தேவையான பொருட்கள் :**

உழுத்தம் பருப்பு – கால் கி.கி, பயறு சிறிதளவு,பயற்றம்பருப்பு தயிர் – சிறிதளவு, பச்சை மிளகாய் – சிறிதளவு, இஞ்சி – சிறிதளவு, செத்தல் மிளகாய் – சிறிதளவு, கறிவேப்பிலை – சிறிதளவு கடுகு – 1 மே. கரண்டி, சூரியகாந்தி எண்ணெய் – தாளிக்க, பச்சை கலரிங் – சிறிது

**செய்முறை**

பயறை லேசாக சூடாக்கிய பின் தோல் நீக்கி எடுக்கவும். உழுத்தம் பருப்பை நன்கு ஊறவைத்து அரைக்கவும். ஊறவைத்த பயற்றம் பருப்பை வடித்தெடுத்து அரைத்த உழுந்துடன் சேர்த்து தயிர் விட்டு நன்கு பிசையவும். உப்பு அளவுக்கு சேர்க்கவும். பச்சை மிளகாயைத் தூளாக வெட்டி, இஞ்சியை தூளாக வெட்டி சேர்க்கவும். செத்தல் மிளகாயை சிறிதாக வெட்டி கடுகு, கறிவேப்பிலை தாளிக்கவும் எல்லாவற்றையும் நன்கு சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டவும்(பாக்கு அளவு உருண்டை) இதை ஆவியில் (steam) அவித்து எடுக்கவும். காலை உணவாகப் பாவிக்கலாம்.

செல்வி சி.துரைசிங்கம்

# சருமத்தை பொலிவாக்கும் பழப்புளி!



புளியில் விற்றமின்கள், நார்ச்சத்து, அமிலங்கள் மற்றும் ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகள் போன்றவை உள்ளன. இவை சருமத்திற்கு ஊட்டம் அளித்து, முதுமைத் தோற்றம் வருவதைத் தடுக்கும். புளி சருமம் மற்றும் தலைமுடியின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும். இதற்கு புளியில் உள்ள விற்றமின்கள், ஆன்டி–ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் கனிமச்சத்துக்கள் தான் காரணம். இப்போது புளியைக் கொண்டு எப்படி சருமம் மற்றும் தலைமுடியினைப் பராமரிப்பது என்று பார்க்கலாம்.

புளியை சுடுநீரில் ஊறவைத்து சாறு எடுத்து, அதில் சிறிது மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் இரண்டு முறை செய்து வந்தால், சருமத்தின் பொலிவு அதிகரித்திருப்பதை காணலாம்.

புளியில் அல்பா–ஹைட்ராக்ஸில் – அசிட் உள்ளது. இது சருமத்துளைகளில் தங்கியுள்ள அழுக்குகளையெல்லாம் நீக்கும். எனவே புளிச்சாற்றில் 1 டீஸ்பூன் தயிர் மற்றும் 1 டீஸ்பூன் உப்பு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்து, 5 நிமிடம் கழித்து கழுவினால், முகத்தில் உள்ள இறந்த செல்கள் முழுமையாக நீக்கி, முகம் பளிச்சென்று வெள்ளையாக மாறும்.

புளிச்சாற்றில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவினால், முகச்சருமத்தின் நிறம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.



உங்களுக்கு முடி அதிகம் உதிர்கிறதா? அப்படியெனில் முடியின் மயிர்கால்களை வலிமையாக்க புளிச்சாற்றினைக் கொண்டு ஸ்கால்ப்பை மசாஜ் செய்து, சுடுநீரில் நனைத்து பிழிந்த துணியை தலையில் 15 நிமிடம் கட்டி, பின் ஷம்பு போட்டு அலச வேண்டும்.

பலருக்கும் கழுத்தைச் சுற்றி கருமையான படலம் ஒன்று இருக்கும். இதனை நீக்க புளிச்சாற்றில் தேன் மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து, கருமையாக உள்ள இடத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் 3–4 முறை செய்து வந்தால், கருமையை விரைவில் போக்கலாம்.



## வாரமொரு குறள்

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி.*

பொருள் :
புலன்களை அடக்க முடியாமல் வழிதவறிச் சென்றிடும் மனிதனுக்குச் சான்றாக இந்திரன் விளங்கி, ஐம்புலன்களால் ஏற்படும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதால் வான்புகழ் கொண்டவர்களின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறான்.




அகல விரித்த சிறகோடு
அழகாய்ப் பறக்கும் பருந்தாரே
சுகமாய் வானில் வட்டமிடும்
செய்தி என்ன சொல்வீரா?

கோழிக் குஞ்சைக் கண்டீரா?
கீச்சிடும் ஒலியை ரசித்தீரா?
கோலச் சொண்டுள் உமிழ்நீரா?
கொத்திச் சுவைக்க நினைத்தீரா?

பாவம் சின்னக் குஞ்சுகளாம்
பறக்க முடியாப் பஞ்சுகளாம்
சேவல் காவல் செய்கிறதாம்
சின்னக் குஞ்சுகள் நடுங்கிறதாம்

தூக்கிடும் ஆசை கொள்ளாதீர்
துடிக்கும் குஞ்சுகள் கொல்லாதீர்
தாக்கியே உயிர்களை அழிப்பதெல்லாம்
தப்பாம் உமக்குத் தெரியாதோ?

முற்றம் நிறைந்த மரமுண்டு...
முற்றிப் பழுத்த கனிகளுண்டு...
உற்றுக் கொத்தி உண்ணலாம் வா!
உறவு கொண்டு மகிழலாம் வா!!

## மதிப்பு எப்போது வரும்?



ஒரு நாள் கணித ஆசிரியர் பூஜ்யம் முதல் ஒன்பது வரையிலான எண்களைக் கலந்துரையாடலுக்கு அழைத்தார்.

நிகழ்ச்சி ஆரம்பிக்கும் சமயம் பூஜ்யம் அங்கு இல்லை என்பது தெரியவந்தது.

பூஜ்யம் ஒளிந்து கொண்டது. இதைக் கண்ட மற்ற எண்கள் பூஜ்யம் ஒளிந்து கொண்டதைப் பற்றி ஆசிரியரிடம் புகார் தெரிவித்தன.

ஆசிரியர், "பூஜ்யமே, நீ மட்டும் கலந்துரையாடலுக்கு வராமல் ஏன் ஒளிந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

"ஐயா, நான் வெறும் பூஜ்யம் தானே. என்னைப் பற்றி யார் கவலைப்படுவார்கள்? எனக்குத்தான் எந்த மதிப்பும் இல்லையே..." என்று வருத்தமாக கூறியது.

இதைக் கேட்ட ஆசிரியர், "ஒன்று" என்ற எண்ணை முன்னே வரச் சொன்னார்.

குழுவினரைப் பார்த்து, "இதன் மதிப்பு என்ன?" என்றார்.

"ஒன்று!" என்றன மற்ற எண்கள்.

அடுத்து பூஜ்யத்தை அதன் அருகில் நிற்கச் சொன்னார்.

"இப்போது இதன் மதிப்பு?"

"பத்து!" என்று மற்ற எண்கள் உரக்கக் கத்தின.

அடுத்து பூஜ்யத்தைப் பார்த்து, "பூஜ்யமே, இப்போது தெரிந்து கொண்டாயா உன் மதிப்பு? "ஒன்று" என்கிற எண் உன் சேர்க்கையால் பன்மடங்கு அதிக மதிப்பு அடைந்ததைப் பார்த்தாயா?" என்றார். எல்லா எண்களும் மகிழ்ச்சியுடன் கை தட்டின.



"ஆமாம்... நான் சரியான இடத்தில் இருந்தால், நானும் பயனுடையவன்தான். நான் மற்றவருடன் சேர்ந்தால் நாங்கள் அனைவருமே அதிக மதிப்பு வாய்ந்தவர்களாகிறோம்" என்று பூஜ்யம் மகிழ்ச்சியுடன் சொன்னது.

உடனே கணித ஆசிரியர், "ஆமாம், இதுபோல்தாம் மாணவர் ஒவ்வொருவரிடமும், ஏதாவது ஒரு திறமை இருக்கும். அதைச் சரியான நேரத்தில், சரியான இடத்தில் பயன்படுத்தினால் நாமும் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்ள முடியும்" என்றார்.

## குட்டீஸ் பக்கம்



## வயதான காலத்தில் உழைப்பு அவசியமா?



அமெரிக்காவின் மிகப்பெரும் பணக்காரரான அவர் முதுமையிலும் கடும் உழைப்பை மேற்கொண்டிருந்தார்.

நாளுக்கு ஒரு நாடு என்று பயணம் செய்யும் அவர் ஒரு முறை விமானத்தில் பயணம் செய்த போது, பக்கத்து இருக்கையில் இருந்த இளைஞர் அவரை வியப்புடன் பார்த்தார். பயணத்தின் போது கூட பணி செய்து கொண்டே இருந்தார்.

உடனே அந்த இளைஞர் அவரிடம், "அய்யா, நீங்கள் அதிகமான சொத்து சேர்த்து வைத்திருக்கிறீர்கள். இனியும், இந்த வயதான காலத்தில் உழைக்க வேண்டுமா? என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், "தம்பி, இந்த விமானத்தை விமானி நல்ல உயரத்தில் பறக்க வைத்திருக்கிறார். சிரமப்பட்டு மேலே ஏறியதால் இப்போது சுலபமாக பறக்கிறது இல்லையா. அதுதான் விமானம் மேலே ஏறி விட்டது என்று விமானி என்ஜினை நிறுத்தி விட்டால், மிகப்பெரும் விபத்து ஏற்பட்டு விடாதா? அதைப் போலத் தான் வாழ்க்கையும் நாம் கடுமையாக உழைத்து மேலே வந்து விட்டு, நாம் தான் மேலே வந்து விட்டோமே என்று உழைப்பதை நிறுத்தி விட்டால் நம் வாழ்கையும் பெரிய விபத்துக்குள்ளாகிவிடும். உழைப்பு வருவாயை அதிகரிப்பதுடன், நமது உடல் நலத்தையும், மன மகிழ்ச்சியையும் அதிகரிக்கும்" என்றார்.

யார் அந்த மிகப்பெரும் பணக்காரர் என்று தானே கேட்கிறீர்கள், அவர்தான் அமெரிக்காவின் மிகப்பெரும் பணக்காரராக இருந்த ராக்பெல்லர்.

## பழமொழியை மாற்றிப் பயன்படுத்தலாமா?

நடைமுறையில் பல பழமொழிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சில பழமொழிகள், அவை எதற்காக சொல்லப்பட்டனவோ அதில் இருந்து மாறி வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சில பழமொழிகளும், அதற்குச் சரியான விளக்கமும் இங்கே தரப்பட்டுள்ளன.

### உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு

தமிழில் இப்படி ஒரு பழமொழி உண்டு. இது மிகவும் கருத்துள்ள பழமொழி.

இந்தப் பழமொழியில் வரும் தொண்டர் என்பது யார் என்று எண்ணுகிறீர்கள்? விபூதி பூசுகின்றவனை தொண்டன் என்று நினைக்காதீர்கள். உருத்திராட்சம் அணிந்து இருப்பவனும் தொண்டனாக மாட்டான். பஜனை செய்பவனையும் தொண்டனாக எண்ண முடியாது.

பின், தொண்டன் என்பவன் யார்?

தொண்டன் என்றால் வேலை செய்கின்றவன் என்று பொருள். உனக்கு மட்டும் களைப்பு என்பது சொந்தம் அல்ல. இளைப்பு என்பதும் உனக்கு மட்டுமல்ல. உன் வீட்டு வேலைக்காரனுக்கும் உண்டு. அவனுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். களைப்பு அவனுக்கும் இருக்கும். அவனைக் குடல் அறுக்க வேலை வாங்காதே. தொடர்ச்சியாக வேலை செய்யச் சொல்லாதே, அவனையும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ள சொல்.

– என்பதுதான் இந்தப் பழமொழியின் பொருள்.

### சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்

குழந்தை இல்லாதவர்கள் சஷ்டியில் முருகப் பெருமானை நினைத்து விரதம் இருந்தால், அவர்களது அகத்திலே (கருவிலே) இருக்கக்கூடிய பையிலே கரு உற்பத்தியாகும் என்ற பொருள்படக் கூறிய இந்த பழமொழியை இப்பொழுது சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்று சாப்பாட்டிற்குப் பயன்படுத்தி வருகிறார்கள்.

### கொன்றால் பாவம், தின்றால் போச்சு!

ஆடு, கோழி, பன்றி போன்ற வாயில்லா ஜீவன்களை கொன்ற பாவம் தின்றால் போய்விடும் என்றுதான் பலரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அப்படியில்லை.

வாயில்லா ஜீவன்களைக் கொல்வதே மிகப் பெரிய பாவம். கொல்லப்பட்ட அந்த இறைச்சியைத் தின்பதால் ஏற்கனவே அவர்கள் சேர்த்திருந்த புண்ணியமும் போய் விடும் என்கிற அர்த்தத்தில் சொல்லப்பட்டது. ஆனால் அசைவச் சாப்பாட்டுப் பிரியர்கள் இதை அப்படியே மாற்றி விட்டார்கள்.

### சிவ பூஜையில் கரடி நுழைந்தாற்போல்...

செய்யும் காரியத்திற்கு பிறர் திடீரென்று இடையூறு ஏற்படுத்தி விட்டால் இந்த பழமொழியை கூறும் வழக்கமுள்ளது. ஆனால், இந்தப் பழமொழிக்கு இது பொருள் அல்ல.

இதில் உள்ள கரடி என்பது மிருகத்தை குறிப்பது அல்ல. கரடி என்பது ஒருவித பறை. அதாவது, மிகுந்த ஓசை தரக்கூடிய இசைக் கருவி. சிவ பூஜையில் இந்த கருவியைக் கொண்டு ஓசை எழுப்பப்படும் என்பதால் அப்படி சொன்னார்கள். நாம் தான் பொருளை மாற்றி விட்டோம்.

பழமொழிகளை அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தபடி எல்லாம் மாற்றி விட்டார்களே என்கிறீர்களா? எதையும் தங்களுடைய தேவைக்கேற்ப மாற்றம் செய்து கொள்ளும் திறன் அதிகமாகத் தவறுக்கே பயன்படுத்தப்படுகிறது.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பிரபாகரனின் ...

பிரமைகளை ஏற்படுத்துகிறார்கள், எமது மக்களைத் தொடர்ந்து அடிமைத்தனத்திலேயே வைத்திருக்க முனைகிறார்கள். அவர்கள் தங்களது சுயநல அபிலாசைகளை அடையவே அரசியலில் நுழைந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்வதற்கான உண்மையான நோக்கம் எதனையும் அவர்கள் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. அத்தோடு எந்த விதமான உருப்படியான அரசியல் வேலைத்திட்டத்தையும் அவர்கள் முன்வைக்கவில்லை. இந்த விடுதலைப் போராட்ட வழியில் மாட்டிக்கொள்வார்கள் என்று அவர்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. புரட்சியின் ஜூவாலை தமிழகம் முழுவதும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இதை அணைக்க அவர்கள் தங்களால் ஆன மட்டும் முயன்று பார்க்கிறார்கள். இந்த அர்த்தத்தில் அவர்களைத் துரோகிகள் என வர்ணிக்கலாம்.

**கேள்வி :** *தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பப்பயப்படுகிறார்கள் என்பதற்குக் காரணம் சிங்களவர்கள் அல்ல. புலிகள் தான் என்கிறார்களே. இது உண்மையா?*

**பதில் :** அவர்கள் பயப்படுவது புலிகளுக்கல்ல. சுதந்திரத் தமிழீழம் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு வாக்களித்த மக்களின் கோபாவேசத்துக்குத் தான் அவர்கள் பயப்படுகிறார்கள்.

**கேள்வி :** *இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் உருப்படியான தீர்வு எதையும் தருமா?*

**பதில் :** இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் எம் மக்களுக்கும் ஆக்கபூர்வமான நம்பிக்கையைத் தந்திருக்கின்றன. ஆனால் சிங்கள இனவெறி அரசு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்த உதவியைப் பயன்படுத்திக் கொள்ளும் என நான் நினைக்கவில்லை.

**கேள்வி :** *இந்த மாதிரி நிலைமையில் தமிழர்களுக்கு உதவ இந்தியா செய்யக் கூடிய மிகச் சரியான காரியம் எதுவாக இருக்க வேண்டும்?*

**பதில் :** எம் மக்களின் நியாயமான நேரிய கோரிக்கைகளை இந்திய அரசு அங்கீகரித்து, சுயநிர்ணயத்திற்கான எங்கள் உரிமையினை ஏற்க வேண்டும்.

**கேள்வி :** *இந்தியாவின் இராணுவம் இதில் தலையிட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

**பதில் :** எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு. நாமே போராடி எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். எனினும் எங்களுக்கு இந்தியாவின் ஆதரவும் அனுதாபமும் அவசியமாகின்றது.

**கேள்வி :** *ஜனாதிபதி ஜெயவர்த்தன பற்றிய உங்களின் தனிப்பட்ட மதிப்பீடு என்ன?*

**பதில் :** ஜெயவர்த்தன ஓர் உண்மையான பௌத்தராக இருப்பாராயின் நான் ஆயுதம் ஏந்தியிருக்க நேர்ந்திராது.

**கேள்வி :** *இந்தப் பேச்சு வார்த்தைகளை ஜெயவர்த்தன நடத்துவதன் நோக்கம் என்னவென்று நினைக்கிறீர்கள்? காலம் கடத்தப் பார்க்கிறாரா? அப்படியானால் எதற்கு?*

**பதில் :** இந்தச் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஜெயவர்த்தன நடத்துவதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலில் இந்தியர்களின் கோபத்தைத் தணிப்பது. இரண்டாவது இனக்கலவரங்கள் இலங்கையின் பெயருக்கு ஏற்படுத்திய பெரும் களங்கத்தை நீக்குவது. மூன்றாவதாக நிதியுதவி தரும் மேற்கத்தேய ஸ்தாபனங்களிலிருந்து உதவி பெறுவது. காலஅவகாசம் பெற்று சிங்கள இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்துவது.

**கேள்வி :** *தன்னுடைய அமைச்சரவையில் இருக்கும் தீவிரவாதிகளின் பிடிக்குள் ஜனாதிபதி ஜெயவர்த்தன சிக்கிக் கொண்டிருக்கிறாரா? அல்லது தன்னிச்சையாகவே இயங்குகிறாரா? அல்லது பௌத்த குருமார்களால் நெருக்கப்படுகிறாரா?*

**பதில் :** ஜெயவர்த்தன சுயமாகத்தான் இயங்குகிறார். அவருக்கு சர்வ அதிகாரங்களுமுண்டு. அமைச்சரவையின் தீவிரவாதிகளும் பௌத்த குருமார்களும் அவருக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

**கேள்வி :** *இலங்கையில் பௌத்த குருமார்கள் என்ன பங்கு வகிக்கிறார்கள்?*

**பதில் :** சிறிலங்காவின் அரசியல் போக்குகளை நிர்ணயிப்பதில் பௌத்த குருமார்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு. சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக்கு எதிரான இனவெறியைத் தூண்டி விட்டதில் அவர்கள் மிக முக்கிய பங்கு வகித்திருக்கிறார்கள்.

**கேள்வி :** *சிறீலங்காவை தனிச் சிங்கள பௌத்த நாடாக மாற்றும் முயற்சியில் பௌத்த குருமார்கள் கணிசமான வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?*

**பதில் :** சிறிலங்கா ஏற்கனவே ஒரு தனிச் சிங்கள பௌத்த நாடு தான். இதில் பௌத்த பிக்குகளுக்கு பெரும் பங்குண்டு.

**கேள்வி :** *இது பௌத்த குருமார்களின் இனவெறியின் விளைவா? அல்லது கிறிஸ்தவ குருமார்கள் தமிழர்களுடன் ஒன்றுபட்டதன் விளைவா?*

**பதில் :** இந்த இனவெறி அரசை ஸ்திரப்படுத்துவதில் பௌத்த குருமார்களுக்கு முக்கியமான பங்குண்டு. தமிழ் கிறிஸ்தவ பாதிரிமார்கள் தமிழர் பிரச்சினைக்கு அனுதாபம் காட்டுகின்றனர். ஆனால் சிங்கள கிறிஸ்தவ பாதிரிமார்கள் சிங்களப் பேரினவாத வெறுப்புணர்வை வெளிப்படுத்தித் தமிழர்களின் கோரிக்கைகளை எதிர்க்கின்றனர்.



**கேள்வி :** *உலக விடுதலை இயக்கங்களுடன் உங்களுக்குத் தொடர்புகள் உண்டா? எந்த அமைப்புக்கள் உங்களுக்குப் பயிற்சியும், ஆயுத உபகரணங்களும் தந்து உதவுகின்றன.*

**பதில் :** உலகில் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் எங்களுக்குத் தொடர்புகள் உண்டு. உங்களின் இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை.

**கேள்வி :** *உங்களின் இந்தப் போராட்டத்திற்கு எந்த நாடு மிகவும் அனுசரணையாக அமைகிறது?*

**பதில் :** இதுபற்றி ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை.

**கேள்வி :** *உங்கள் சித்தாந்தக் கோட்பாடு என்ன?*

**பதில் :** புரட்சிகர சோசலிசம்.

**கேள்வி :** *எதிர்காலத்தில் தமிழர்கள் மீது தாக்குதல்களை எதிர்பார்க்கிறீர்களா? எந்தக் காரணத்தை முன்னிட்டு?*

**பதில் :** ஆம். நான் எதிர்பார்க்கிறேன். திருகோணமலையிலும் வவுனியாவிலும் பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கொல்லுவதற்கான ஒரு நாசகாரத் திட்டத்தை இனவெறி பிடித்த பாசிச சக்திகள் உருவாக்கி வருகின்றன. தங்களுடைய உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த தேசிய இராணுவத்தின் உதவியுடன் சுதந்திரமான தமிழீழ நாடு நிறுவப்பட்டால் ஒழிய ஒரு போதும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை.

**கேள்வி :** *கெரில்லாக்களுக்கு எதிரான போர் முறைகளில் சிங்கள இராணுவத்திற்கு இஸ்ரேலியர்கள் பயிற்சி தருகின்றனர் என்பது உண்மையா?*

**பதில் :** இதுவரை இலங்கையில் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் இருப்பதைப்பற்றி நம்பத்தகுந்த செய்திகள் எதுவும் எங்களுக்கு கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட செய்திகள் உண்மையாக இருந்தாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். சிறீலங்கா அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் கூலிகளுக்குமான ஒரு தளமாக விரைவாக மாறிக்கொண்டு வருகிறது. பயிற்சி தருபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் நிபுணத்துவம் எத்தகையதாக இருந்தாலும் விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்துவிட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்குண்டு.

**கேள்வி :** *அமெரிக்காவிலிருந்து சிறீலங்காவிற்குப் பெருமளவில் ஆயுதங்களும் உபகரணங்களும் வந்து குவிவது பற்றி உங்கள் கருத்து என்ன?*

**பதில் :** இந்த ஆயுதக்குவிப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியது. சிறீலங்கா இராணுவத்திற்கு உதவி செய்து தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவது மட்டும் அமெரிக்காவின் நோக்கமல்ல என்பது உங்களுக்கு தெரிந்ததே. திருகோணமலையில் ஒரு கடற்படைத்தளத்தை அமைத்துக் கொள்வது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கபட நோக்கம். இது இந்து சமுத்திரப் பகுதியை யுத்தப் பிராந்தியமாக மாற்றுவதுடன் இப் பிரதேசத்தில் யுத்த நெருக்கடியை உண்டு பண்ணும்.

**கேள்வி :** *எப்படியோ ஒரு காலம் தமிழீழம் கைகூடிவிட்டால் அது எவ்வகையான நாடாக அமையுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?*

**பதில் :** தமிழீழம் ஒரு சோசலிச அரசாக அமையப்பெறும். சோசலிசம் என்பதன் மூலம் சமத்துவமான சமூக அமைப்பை நான் கருதுகிறேன். இதில் மனித சுதந்திரத்திற்கும், தனிநபர் உரிமைகளுக்கும் உத்தரவாதமுண்டு. எல்லாவித ஒடுக்குமுறையும் சுரண்டலும் ஒழிக்கப்பட்ட மக்களின் உண்மையான ஜனநாயகமாக அது திகழும். தமிழ் மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தைப் பேணி வளர்த்து தமது கலாசாரத்தை மேம்பாடு செய்யும் வகையில் அவர்களுக்கு அதிகபட்ச வாய்ப்புகள் கிடைக்கின்ற ஒரு சுதந்திரச் சமூகமாகத் தமிழீழம் அமையும். இந்தச் சுதந்திரத் தமிழீழம் நடுநிலை நாடாக இருப்பதுடன் அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும். அத்தோடு இந்தியாவோடு நேச உறவு கொண்டு அதன் பிராந்தியக் கொள்கைகளை குறிப்பாக இந்துமகா சமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாக்கும் வெளிநாட்டுக் கொள்கையைக் கௌரவிக்கும்.

**கேள்வி :** *உங்கள் கணிப்பில் தமிழீழத்தை எப்போது அடைவீர்கள்?*

பதில் : விடுதலைப் போராட்டத்திற்கு கால வரைமுறையோ அல்லது ஒரு பூர்வாங்கத் திட்டமோ இருக்க முடியாது. தமிழீழத்திலும் உலக அரங்கிலும் உருவாகும் நிலைமைகளைப் பொறுத்து இது அமையும்.


**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

*தொடர்புகளுக்கு :*

தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தொலைபேசி : 021 7539300
தொலைநகல் : 021 7539300
இணையம் : thinacheithi@gmail.com

# குழந்தைகளுக்கு மேலதிக உணவூட்டல்



## பொறுப்பு மிக்க செயற்பாடாகும்

குழந்தைகளுக்கான மேலதிக உணவுகளைக் (உப உணவுகளை) கொடுக்க ஆரம்பித்தல் தொடக்கம் அவர்கள் வளரும்போது தொடர்ந்து உணவு வேளைகளில் உணவூட்டல் வரை பலரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். அதற்கு பிரதான காரணம், தவறான முறைகளில் மேலதிக உணவூட்டலை (*complementary feeding*) மேற்கொள்ளல் ஆகும். ஒரு சாதாரண தாயிடம் 7–8 மாதக் குழந்தைக்கு என்ன சாப்பாடு கொடுக்கிறீர்கள் எனக் கேட்டால் வரும் பதில் பிஸ்கட்களும் அல்லது வர்த்தக ரீதியிலான பக்கட்டில் அடைத்த தானியமா கலவைகளும் தான். இந்த உணவுகள் பின்னர் குழந்தையை சாதாரண குடும்ப உணவுகளுக்குப் பழக்கப்படுத்துவதற்குத் தடையாக அமைந்து விடும். பெற்றோராகிய எமக்கும் குழந்தைக்கு தகுந்த உணவுகளை சரியான முறையில் வழங்குவதற்குப் பொறுப்புகள் உண்டு. முன்னைய வாரங்களில் கூறப்பட்ட விடயங்களுக்கு மேலாக இந்த வாரத்திலும் பல விடயங்களை கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளிலிருந்து அறியலாம்.

மேலதிக உணவூட்டலை குழந்தை ஆர்வத்துடன் உட்கொள்ளுவதற்குச் செய்யக் கூடியவை எவை?

8–9 மாதங்கள் வரை தாய் அல்லது பராமரிப்பவர் குழந்தைக்கு உணவூட்ட வேண்டும். அதன் பின்னர் 9 மாதமளவில் குழந்தை தன் கையினால் பிடித்து உண்ணக்கூடிய உணவுகளை (finger foods) அறிமுகப்படுத்தலாம். உதாரணம் அவித்த கரட் துண்டு உருளைக்கிழங்குப் பொரியல் என்பன). ஒரு வயதின் பின்னர் குழந்தைகள் தாமாகவே உணவை அள்ளிச் சாப்பிட உற்சாகப்படுத்த வேண்டும். தேவைப்படும் போது பெரியவர்கள் அவர்களுக்கு உதவி செய்யலாம். இரண்டு வயதின் பின்னர் குடும்ப உணவுகளை குழந்தை தானாகவே உதவியின்றி உட்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் உட்கொள்வதைப் பழகுவதற்காக அமைதியுடனும், ஆறுதலாகவும் உணவூட்டல் வேண்டும். குழந்தைகளுக்கு பசியுள்ளபோதே அதை அவதானித்து உணவூட்டல் வேண்டும். எந்த வேளைகளிலும் வற்புறுத்தி உணவூட்டக் கூடாது.

குழந்தைகளின் கைகள் சவர்க்காரம் கொண்டு, நன்றாக கழுவப்பட்டிருப்பின் அவர்கள் உணவைத் தொட்டு கையால் எடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு உணவில் விருப்பம் உண்டாகும்.

உணவூட்டல் வேளைகளை குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் அவர்களின் உடல் உள விருத்தியை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் பயன்படுத்த வேண்டும். உணவூட்டலின் போது கதைகள், பாட்டுகள் சொல்வதன் மூலம் குழந்தைகளின் மொழியாற்றல் அதிகரிக்கும். குழந்தைகளுடன் நேருக்கு நேர் பார்த்து அன்பாகவும் விருப்பத்துடனும் கதைக்க வேண்டும்.

குழந்தைகள் உணவை விரும்பாவிட்டால் வேறு விதமான உற்சாகமூட்டும் முறைகளையும், வேறுவிதமான உணவை வேறு விதமான சுவையுடன் அல்லது வேறுவிதமான தயாரிப்பு முறைப் படியும் கட்டமைப்புகளிலும் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

உணவூட்டும் போது தனியான அமைதியான ஒரு இடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். உணவூட்டும் போது இடையூறுகள் ஏற்படக் கூடாது. படிப்படியாக மற்றக்குழந்தைகளும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் உணவு உண்ணும் வேளைகளில் உணவூட்ட வேண்டும். அதனால் குழந்தைகளுக்கு மற்றவர் போல் ஆர்வத்துடன் உட்கொள்ளச் சந்தர்ப்பம் உண்டாகும்.

பாதுகாப்பான முறையில் உணவைத் தயாரிப்பதும் பேணுவதும் எப்படி?

எந்த வேளையிலும் சுகாதாரமான முறையில் உணவைத் தயாரித்து வழங்குவதற்காக பின் வருவற்றைச் செய்ய வேண்டும்.

உணவு தயாரிக்க முன்னரும் உணவை குழந்தைக்கு வழங்க முன்னரும், கைகளை நன்றாக சவர்க்காரம் கொண்டு கழுவ வேண்டும். மிக முக்கியமாக குழந்தைகளின் கைகளைக் கழுவ வேண்டும்.

எப்போதும் உணவைத் தயாரித்தவுடனயே பரிமாறுவது நல்லது. சமைத்த உணவுகளை நன்றாக மூடிவைக்க வேண்டும். உணவைத் தயாரிப்பதற்கும் பரிமாறுவதற்கும் தூய்மையான உபகரணங்களையே பயன்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு உணவூட்டப் பயன்படுத்தும் பாத்திரங்களை வேறு தேவைகளுக்கு உபயோகிக்கக் கூடாது.

நீராகாரங்களை வழங்குவதற்கு சூப்பிப் போத்தல்களைப் பயன்படுத்தக் கூடாது.

குழந்தைகள் நோய் வாய்ப்பட்டிருக்கும் காலங்களில் வழமையாக வழங்கப்படும் உணவுகளைக் கொடுக்க முடியுமா?

அனேகமான சந்தர்ப்பங்களில் குழந்தை ஒன்றுக்கு சளி, காய்ச்சல், வயிற்றோட்டம் ஏற்படுகையில் பெற்றோர் குழந்தைக்கு வழங்கும் வழமையான உணவுகளை நிறுத்தி விடுகிறார்கள். சில மூட நம்பிக்கைகளால் முட்டை, பால், பழங்கள் என்பவற்றைக் கொடுக்காமல் விட்டு விடுகிறார்கள். இது தவறு. நோய்வாய்பட்டிருக்கும் காலங்களிலும் வழமையான ஆகாரங்களை வழங்கினால் தான், குழந்தைக்குத் தேவையான போசணையைப் பெறமுடியும், அல்லாவிடில் குழந்தையின் நிறை குறைந்து, நோய் மாறிய பின்னர் குழந்தை இழந்த சக்தியை மீளப்பெற, மேலதிகமாக போசாக்கான உணவுகளை வழங்க வேண்டும். நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு பசியின்மை காணப்படும். என்பதால் அதிகம் அருந்தாது. அதனால் சிறிதளவு உணவாக அதிக சக்தியுள்ள (மாஜரின், பட்டர், சீஸ், முட்டை) உணவுகளை அடிக்கடி வழங்க வேண்டும்.

மருத்துவர் E. ஸ்ரீசரவணபவன்
குழந்தைநல வைத்தியர்.
விரிவுரையாளர்
யாழ். போதனா வைத்தியசாலை

---

# நீரிழிவும் மெற்போமினும்



நீரிழிவு வகை II நோயாளர்களுக்கு பல இனவகைகையச் சேர்ந்த புதுப்புது மருந்து வகைகள் மிகச்சிறந்த நவீன ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. எனினும் இவை எல்லாவற்றுக்கும் மேல் சிகரம் வைத்தாற்போல் 60 – 70 வருடங்களுக்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்ட மெற்போமின் மருந்து சிறந்ததாகவே தற்போதும் கருதப் படுகின்றது. இது பலதரப்பட்ட விற்பனைப் பெயர்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

இந்த வகை மருந்துகளில் பக்கவிளைவுகள், பின் விளைவுகள் குறைவானதுடன் குறைந்த விலையில் பெறக்கூடியதாகவும் இருக்கின்றன. அத்துடன் இந்த மருந்தானது இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே நீரிழிவு நோயாளர் வகை II க்கு மிக அதிகளவு பயன்படுத்தப் படுவதை அறியக் கூடியதாக இருக்கிறது. எனவே இந்த மருந்தைப் பற்றிய அறிவு சாதாரண மக்களுக்கும் இருப்பது நோய்களைக் கட்டுப் படுத்துவதற்கும் விழிப்புணர்வுக்கும் உறுதுணையாக இருக்கும்.

உணவு சமிபாடு அடைந்தவுடன் குடலில் இருக்கும் குளுக்கோஸை உறிஞ்சும் உறிஞ்சிகள் அதிக குளுக்கோஸை உறிஞ்சா வண்ணம் இருக்க மெற்போமின் மருந்து வகைகள் உதவுகின்றன.

மேற்படி மருந்தானது இன்சுலின் எதிப்புச் சக்தியை குறைத்து இன்சுலின் உதவியுடன் குளுக்கோஸை கலங்களுக்கு மிக இலகுவில் செலுத்தி வைக்கும் செயற்பாட்டை நடத்தி வருகின்றது. இதனால் உடலில் இருக்கும் தசைகள், தசைநார்கள் மற்றும் எல்லா வகையான உறுப்புகளின் கலங்களுக்கு இன்சுலின் உதவியுடன் திறமையான குளுக்கோஸை உட்புகுத்துவதால் இந்த மெற்போமின் மருந்து வகைகள் உடல் உறுப்புக்களின் செயற்றிறனை அதிகரிக்கின்றன.

மெற்போமின் மருந்து வகைகள் இன்சுலின் சுரக்கும் தன்மையைக் கூட்டக்கூடியவை அல்ல. எனினும் எம்மில் சாதாரணமாகச் சுரக்கும் இன்சுலினை திறம்படப் பயன்படுத்த உதவுகின்றன.

மெற்போமின் பாவிக்கும் நோயாளர்களுக்கு அதிக பசி ஏற்படாது. இவர்களின் குருதியில் வெல்ல மட்டம் அதிரித்தாலும் இவர்களின் எடையில் மாற்றம் இருக்காது. அத்துடன் இவர்களுக்கு குருதிக் குளுக்கோஸ் மட்டம் குறைந்த நிலை (*Hypoglycemia*) ஏற்படும் வாய்ப்புக்களும் குறைவு.

இந்த வகை மருந்துகளுடன் வேறு இனத்தைச் சேர்ந்த மருந்துகளையும் கூட்டாக உபயோகிக்க முடியும். உதாரணம் இன்சுலின் மற்றும் இன்சுலின் தூண்டி வகையான மருந்துகள் இதனால் குருதியில் குளுக்கோஸ் மட்ட அளவை சரியான அளவில் பேணமுடியும்.

மெற்போமின் வகை (*Biguanides*) மருந்துகள், எமது கல்லீரலில் குளுக்கோஸ் உற் பத்தியைக் குறைப்பதுடன், சதையத்தால் சுரக்கப்படும் இன்சுலின் ஆற்றலை அதிகரிக்கச் செய்ய வல்லவை. அதாவது கலங்கள் உறுப்புக்களில் குளுக்கோஸின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றன.

மது அருந்தியவர்கள், கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பிரச்சினை உள்ளவர்கள் இந்த மருந்தைப் பாவிப்பதை தவிர்க்க வேண்டும். இது பற்றிய விவரங்களை மருத்துவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மெற்போமின் பாவிக்கும் நோயாளிகள், வருடத்திற்கு ஒருமுறையாவது ஈரல் சம்பந்தமான பரிசோதனைகள், ECG சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனைகள் செய்வது அவசியம். மெற்போமின் எடுக்க ஆரம்பிக்கும் போது சிலருக்கு வயிற்றுப்போக்கு, வயிற்றுளைவு, வயிற்றுக் குமட்டல் மற்றும் அதிகளவு வாயு போதல் போன்ற சமிபாட்டுத் தொகுதி சம்பந்தமான சிக்கல்கள் தோன்றலாம். மெற்போமினைப் பாவிப்பதைச் சிறியளவில் ஆரம்பித்து படிப்படியாக அதிகரிப்பதன் மூலம் மேற் கூறிய பக்க விளைவுகளைக் குறைக்கலாம்.

ச. சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை

தொடர்ந்தும் இவ்வாறு செய்யும் போது, வயிற்றுப் பிரச்சி

(தொடர்ச்சி 23 இல்....)

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

இவன் இவ்வாறு கூறும் பொழுது முதலில் சத்தத்தை உயர்த்தியும் பின்பு தாழ்த்தியும் கூறிக்கொண்டு அணியத்தில் இயந்திரப் படகிற்கு எறிவதற்குக் கயிற்றைத் தயாராக வைத்துக் கொண்டிருந்த கிழவரையும் பார்த்தான். கிழவரும் இவனை முறைத்துப் பார்த்தார். அவனும் விட்டபாடில்லை.

“காங்கேசன்துறை, மாதகல், கீரிமலை, ஊராத்துறைப் பக்கம் நான் இப்படியான குட்டிகளைக் காணவில்லை.”

தொண்டன் ஒருவன்

“இது குட்டியில்லை இது இவ்வளவு தான். இதுக்கு மேல வளராது” என்று கூறவும் அவன் மேலும் விநோதமாக அந்தப் பூனை போல் இருந்த சடைநாயைப் பார்த்தான்.

கிழவர் மேலும் கோபமடைந்து,

“உன்னை என்னடா சொன்னனான்?” என்று அதட்டினார். அவனும் “சரி சரி” என்று கூறிக்கொண்டு அமைதியானான்.

இதே வத்தைதான் இரண்டாவதாகவும் வந்திருந்தது. அந்த நேரத்தில் கப்பலில் இருந்து இறங்குபவர்களுக்கு இவன் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு கூறியவற்றிற்கு முதலில் வாங்கிக்கட்டியிருந்தான். ஒவ்வொருவராக வரவர இவன் ஒரு பக்கத்தில் நின்று கொண்டு,

“வாருங்க வாருங்க, நீங்கள் போன போக்கும் வாறவரத்தும், ஆச்சி, உனக்கேன் இந்த வேலை? ஊரோட கிடக்கிறதுக்கு..., கவனம் பெட்டிய மடியில் வைச்சுக் கொள்ளும், சம்பாத்தியம் எல்லாம் இதுக்கதானே. நீங்கள் அந்தக் கோணர் சீற்றுக்கு ஏறிப்பாயுற பாச்சல், அங்க அவர் வெறும் மேலோட, அவங்கள் எல்லாரும் போயிட்டாங்களே, பரவாயில்லை. வந்ததே பெரும் காரியம், உங்களுக்கு எவ்வளவு சொன்னாலும் கேட்கப் போறியளே...” இவ்வாறு அவனும் ஒவ்வொருவராகக் கூறிக்கொண்டே போனான். நிறுத்தினபாடில்லை. தொண்டர்களில் பலர் இவனது நகைச்சுவையை ரசித்தனர். மற்றவர்களாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. கிழவர் சிலநேரம் இவனைப் பார்த்துவிட்டு மேலும் பொறுக்க முடியாமல் போகவே.

“டேய் மூடடா வாய, போய் நில்லடா அங்க” என்று அவனை அதட்டி ஒரு மூலைக்கு அனுப்பியிருந்தார்.

தொண்டர்கள் பலர் இந்த வத்தையில் ஏறியிருந்ததால் அவன் உற்சாகமடைந்து மீண்டும் கதைக்கத் தொடங்கியிருந்தான்.

கிழவர் கயிற்றை எறிந்தார். இயந்திரப் படகில் நின்றவன் பிடித்துக் கொண்டான். கப்பலில் தள்ளி வத்தையை நகர்த்தி விட்டனர். வத்தை புறப்பட்டது. தொண்டர்கள் மேலிருந்து இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்களிடம் இருந்தும் விடைபெற்றுக் கொண்டனர்.

தேவன், சரவணன், குமார், வெள்ளைச்சாமி, வேட்டியுடன் இருந்த அந்த இளைஞன் ஆகியோர் மேலே நின்று கொண்டிருந்தனர். எல்லோரும் கரை சேர்ந்து விட்டிருந்தனர். இளைஞர்கள் இறங்குவதற்குத் தயாரானார்கள். சமையல் அறையில் மீதமாக இருந்த பொருட்களை அகதிகள் முகாமிற்கு எடுத்துச் சென்று ஒப்படைப்பதாகத் தீர்மானித்தனர். கப்டனுக்குத் தெரியப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. சரவணன், குமார், தேவன் ஆகியோர் கப்டனிடம் சென்று கதைத்துவிட்டு இவற்றை எடுத்துச் செல்வதாகக் கூறினார். அவரும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லையாயினும் அங்கிருந்த பீங்கான்களை எடுத்துச் செல்வதற்கு மறுத்துவிட்டார். சமூகசேவை இலாகாவினால் அவை கொண்டு வரப்பட்டவை என்றும் அவற்றை மீண்டும் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறினார்.

இளைஞர்கள் மூவரும் சமையல் அறைக்குச் சென்று கீழ் அறைக்கு இறங்கி, கிடந்த பொருட்களை மேலே கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர். அங்கு மூலையில் கிடுகுச் சிப்பம் ஒன்றும் கிடந்தது. அதை என்னவென்று ஆராய்ந்த இளைஞர்கள்அது ஒரு கருவாட்டுச்சிப்பம் என்பதை அப்போது தான் தெரிந்து கொண்டனர். அதையும் சேர்த்து வெகு சிரமப்பட்டுப் படிகளால் உருட்டி மேலே தளத்திற்குக் கொண்டு வந்தனர். தேவன் கீழிருந்து உருட்ட சரவணன் மேலிருந்து அதைப் பிடித்துக் கொண்டான்.

வெள்ளைச்சாமியும் வேட்டியுடன் இருந்த அந்த இளைஞனும் முன்பகுதியில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர். பாராளுமன்ற அரசியலைப்பற்றி வெள்ளைச்சாமி கேட்டிருந்தான். இளைஞன் பதில் கூறிக்கொண்டிருந்தான்.

“இவர்கள் ஆடம்பர அரசியலுக்குப் பழக்கப்பட்டுப் போனவர்கள் பிற்போக்குச் சக்திகளின் மாலைகளுக்கும் வரவேற்புகளுக்கும் ஆலாத்திகளுக்கும் ஆலவட்டங்களுக்கும் இலகுவில் மண்டியிட்டு விடுவார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வது இவர்களுக்கு கடினமாக இருக்கும். இவர்கள் எல்லோரும் ஒரு காலகட்டத்தில் ஏற்பட்ட இவ்வளவு தீமைகளுக்கும் காரணமாய் இருக்கக் கூடிய ஒரு வறட்டுத்தனம் மிகுந்த அரசியல் போக்கின் அடிவருடிகளாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இங்கிருக்கிறது. ஐந்து வருடங்களுக்கொருமுறை ஓட்டுப் பெற்று பாராளுமன்றம் செல்லவேண்டியிருப்பதால் இவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாமே அதைச் சுற்றியதாகவே அமைந்திருக்கிறது. இதை ஜனநாயகமெனவும் மக்கள் ஆட்சியென்றும் குடியாட்சியென்றும் போதித்து வந்திருக்கிறார்கள். இதன் விளைவுதான் என்ன?

சிங்கள மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் இந்தக் காடைத்தனத்திற்கும் அது இவ்வாறு இலங்கை அரசியலையே விழுங்கி விடுவதற்கும் வழிவகுத்தது இந்த அரசியல் நடைமுறைதான். மக்களின் சுபீட்சமான பொருளாதார வாழ்வை அமைத்து அவர்களை முன்னிழுத்துச் செல்வதற்குப் பதிலாக குறுகிய வழிகளில் பதவியை அடைய முற்படுபவர்களால் அவர்கள் பகடைக்காய்களாக மாற்றப்படுவதற்கு வழி வகுத்திருக்கிறது.இந்த அரசியல் ஆங்கிலேயருடைய பாரம்பரியம்தான் அவர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் வேறு வழிகளில் ஏற்படுத்திக்கொண்ட ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கவும். அவற்றை மேலும் தேடிச்செல்லவும் இது நல்ல வசதியாக இருக்கிறது இங்கு நிலைமை வேறு.

வெகுகாலமாக இங்கு அன்னியன் இருந்திருக்கிறான். ஆதிக்க வெறிபிடித்துச் சுரண்டும் நோக்கத்தோடு இங்கிருந்தவர்கள் மக்களின் நல்வாழ்வில் அக்கறை செலுத்தவில்லை. தாங்களே தங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை இங்கிருக்கிறது. இதனால் தான் இந்தச் சாதிமுறை, சுயநலத்தைச் சுற்றிய சமுதாயக் கோட்பாடுகள் இங்கு இவ்வளவு தூரம் வேரூன்றிக் கிடக்கிறது. இந்த அரசியல் முறை ஆங்கிலேயர் தங்கள் பாரம்பரியத்தில் இதை ஏற்படுத்தி விட்டுச் சென்ற நாட்களில் இருந்து இது தொடர்ந்து அவர்கள் காலத்தில் இருந்த சமுதாய முறைகளையும்



ஏற்றத்தாழ்வுகளையும் சுரண்டலையும் அரசின் பொறுப்பற்ற தன்மையையும் தொடர வைத்திருக்கிறது.

நவீன யுகத்திற்கு எங்களை உயர்த்துவதற்கு முற்றிலும் சக்தியற்றுத் தார்மீகம் என்ற போர்வையிலும் ஜனநாயகம் என்ற போர்வையிலும் எங்கும் ஒரே சுடலை நாடகமாக இருக்கிறது. தேநீர்க்கடை திறப்பும், கங்காணி வேலைக்கு விண்ணப்பப்படிவ விநியோகமுமே இந்த அரசியல் வாதிகளின் பெரும் சாதனையாக விளங்குகின்றன.

இந்த அரசியல் போக்கில் நன்கு ஊறிப் போனவர்கள் புதிய சமுதாயத்தின் கோட்பாடுகளுக்குத் தங்களை உயர்த்திக் கொள்ள முடியாதவர்களாகி இந்த பாழ்பட்ட கட்சி அரசியலின் மகிமையைப் பல ஏகாதிபத்திய நாடுகளை மேற்கோள் காட்டிப் போதிக்க முற்படுவார்கள். அதுதான் சுதந்திரம் என்று கூறுவார்கள். இதே ஆட்சிமுறை தொடர்ந்தால் என்ன பயன்? இங்குள்ள வறுமையும் ஏற்றத்தாழ்வுகளும் மூடநம்பிக்கைகளும் மோதல்களும் தொடரும். ஆங்கிலேயர் பிரித்தாண்டதுபோய் சிங்களவர் பிரித்தாண்டது போய் நம்மவரே எங்களைப் பிரித்தாளும் நிலை ஏற்படும். இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?

பணம் படைத்தவர்களால் தான் இந்த அரசியலை நடத்த முடிந்தது. முதலாளிகள், போடிமார்கள், தரகர்களே இங்கு முன்னிற்கவேண்டிய நிலை. இவர்களிடமிருந்து நீ என்னத்தை எதிர்பார்க்கலாம்? இனத்தின் விடுதலையைப் பொறுப்பேற்று நடத்தத் தயங்குகிறார்கள். நாங்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுகின்றோம் என்று கூச்சல் போடுகிறார்கள். ஒரு சிலர் அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு லஞ்சம் விளையும் களங்களைத் தேடிப் போகிறார்கள். இந்நிலையில் உன் இனத்தின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டுள்ள உன்னால் என்ன செய்ய முடியும்?

இவர்களுடைய தலைமையை நம்பியிருந்த சிலர் இவர்களுடைய போக்கால் சஞ்சலமடைந்து தகாத வேலைகளில் இறங்குகிறார்கள். முற்றிலும் வேண்டப்படாத தொன்று. நாங்கள் என்ன செய்யலாம்? இவர்களுடைய வரையறைகளை அறிந்து கொண்டு இவர்களுக்கு ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டியிருக்கிறது. நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் மறந்து போகக்கூடாது. பாராளுமன்றத்தை அண்ணாரப் பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை.

தமிழனுடைய சமதர்ம சமுதாயத்தை அமைத்து அந்த மகத்தான விஞ்ஞானம் நிறைந்த சமூக உறவுகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்த முனையும்போது இவ்வாறு நாம் நடந்துகொள்ள வேண்டியிருப்பது நமது கடமையாகிறது.

நாங்கள் போகும் பாதைக்கு வழி காட்டுவதற்கு இவர்களால் முடியாது. மக்களின் ஏழ்மையிலும் அறிவீனத்திலும் வேர்விட்டுத் தழைத்து நிற்கும் இந்த அரசியல் வரட்டுத் தனத்தின் சூத்திரங்களிலேயே இவர்கள் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்கள். நாங்கள் முற்றிலும் வேறான புதிய சூழ்நிலைகளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். அங்கு உழைப்பவனுக்கே முதலிடம். அவனே இங்கும் முன்னிற்க வேண்டும்” என்று கூறி முடித்தான் அந்த இளைஞன்.

அடுத்ததாகச் சிங்கள இளைஞர்கள் பற்றி வெள்ளைச்சாமி கேள்வி எழுப்பினான். வேட்டியுடன் இருந்த இளைஞன் சற்று நேரம் சிந்தித்துவிட்டுப் பதில் கூறத் தொடங்கினான்.

“எங்களுடைய இனத்தின் விடுதலையோடு வேறு எந்த இனத்தின் விடுதலையும் சேர்த்துப் போராடத் தயார். ஆனால் இங்குள்ள சூழ்நிலைகளில் இரு இனங்களின் விடுதலையும் வெவ்வேறான பாதைகளில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

உலகில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநிறுத்தும் நோக்கோடு பலமான சக்திகள் செயற்படும் இந் நாட்களில் சிங்கள மக்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த ஆதிக்க வெறிப்போக்கு முடிவுக்கு வரவேண்டியது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இந்நிலையில் இவ்வாறான நிலையை ஏற்படுத்தித் தங்களைப் பாதுகாத்துக் கொண்ட அந்தத் தீய சக்திகள் என்ன செய்வார்கள்? தங்களைப் போன்ற அதே தீய சக்திகளுடன் அகில உலக ரீதியில் கூட்டுச் சேர்த்துக் கொண்டு சிங்கள மக்கள் தாங்கள் பெற்றுள்ளதாக நினைத்துக் கொண்டிருக்கும் இந்தச் சுதந்திரத்தை என்னவென்று அறிந்து கொள்ளும் முன்பே அதை அடைவு வைத்துவிட்டுத் தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். இதை முன்னின்று எதிர்த்துப் போராட வேண்டியவர்கள் சிங்கள மக்களே ஒழிய நாங்களல்ல. தமிழ் மக்களை அழித்துவிடும் அந்த வெறிப்போக்கிலும் மயக்கத்திலும் இருக்கும் சிங்கள மக்களால் இந் நிலைகளை எதிர்த்துப் போராடித் தங்கள் சுதந்திரத்தை நிலைநிறுத்துவது கடினமான செயலாகவே இருக்கும். எனினும் இதைச் செய்ய வேண்டியவர்கள் அவர்களே.

(தொடரும் .....)




துள்ளாங்களாம். எனக்கு பெரிய கவலை மனுஷி, பிள்ளைகளைப் பற்றித்தான்'' என்றார் வயிரவநாதன்.

"தம்பி நீ சொன்னது சரி உந்த பெட்டை உவன்றை இராச களையிலை களவாய் போறான்? என்று என்னைக் கேட்டார்கள். "அவனுக்கு ஆக்களிட்டை, பொலிசிலை அடிவாங்கி சுறணை அற்றுப்போச்சு. அவன் உடுப்பு உடுப்பது வடிவுக்கு மானம் என்பது சதத்திற்கும் கிடையாது, பிரச்சினை என்று போனீங்கள் வலிங்கம்'' என்று சொன்னார் நடராசா.

"உங்களுக்கு ஒரு சம்பவம் சொல்ல மறந்து போச்சு. இப்ப மூன்று மாதம் இருக்கும் இவர் பெரியாம்பியின்ர தோட்டத்திலை பாவக்காய், வெண்டிக்காய் களவெடுத்து பிடிபட்டவர். பெரியாம்பி,

# போக்கணம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன்

"தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன என்பது பழமொழி அது எங்கன்ரை இராசாவிலும் பெரியவனுக்கு மிகப் பொருத்தமானது'' என்றார் ஆசிரியர் நடராசா.

"சே சே இப்படியும் ஒருவனை நான் இங்கேதான் காணுறேன். அவற்றை கிழிஞ்ச களிசானும் அவரும்'' என்றார் வயிரவநாதன் தோளில் மண்வெட்டியை வைத்தபடி. வயற்கரையில் உள்ள கண்ணகையம்மன் கோவிலுக்கு ஈசானதிக்கில் உள்ள மருதமர நிழலில் நிற்க அவருடன் ஆசிரியர் நடராசாவும் வைத்தியப்புவும் கழித்த பழைய நீட்டுத் தூணொன்றில் இருந்து கொண்டு கதைத்தார்கள். நேரம் மாலை ஐந்தரைமணி ஆகிக்கொண்டிருந்தது.

"இஞ்ச வயிரவநாதன் அது கிழிந்தது இல்லை அப்பா! அதுதான் இப்ப பாஷன். ஒரு விதத்திலை தைத்த கொடுக்கு என்று சொல்லென்'' என்றார் நடராசா சிரித்துக் கொண்டு. "இல்லை வாத்தியார் அவற்றை தலையை பார்திருப்பியள் அது என்ன முழுப் பயித்தியம் மாதிரி இல்லையோ? வயது நாற்பதற்கு குறையாது. உனக்கு தான் வெட்கம் ரோசம் இல்லையெண்டால் அந்த உத்தியோகம் பார்க்கிற மனுஷி, படிக்கிற பிள்ளைகளை வைத்துக் கொண்டு இப்படி நடக்கிறதே? என்ர பெறாமேன் நந்தன் சொன்னான் தங்கன்ரை வகுப்பு பொடியள் அவனுக்கு சைக்கோ, விந்தனை வேடன் என்று பட்டம் வைத்

மயங்கித்தான் உவனோடை ஓடி வந்தவள். தாய் தகப்பனை கண்ணீர் வடிக்க வைத்தவள். என்ரை சரஸ்சின்ர எட்டிய சொந்தம் அவள். நாமேன் சும்மா போய் களங்கப்படுவான். இப்ப உனக்கு விளங்கி இருக்கும் நாச்சியாருக்கு ஏன் இந்த நிலையென்று'' என்றார் வயித்தியப்பு.

"பெட்டை வெடிமருந்து பெட்டியை விரும்பி எடுத்த புலவன் மாதிரி தப்புக் கணக்கு தான் போட்டு விட்டுது'' என்றார் நடராசா ஆசிரியர். "காதல் கண்ணில்லாதது. என்றாலும் சிலர் தாபம், மோகம் வர உலகை மறக்கினை. அதாலதான் ஐந்தறிவு சுவானங்கள் மாதிரி இதை பீச்சிலை. பூங்காக்களிளை அவதானிக்கலாம். பீச்சிலை குடைக்குள் இருந்த ஒரு சோடியைக் காட்டி கொழும்பு பேரன் தாயைக் கேட்டானாம் 'அம்மா அவை ஏன்குடையாலை மறைத்துக் கொண்டு இருக்கினை' எண்டு. உதாலை எத்தனை சிக்கல்கள்'' என்றார் வயித்தியப்பு.

"அந்த பக்கத்தில் உள்ள ஆளில்லாத வீடெல்லாம் இவற்ர வேட்டைத் தளமென்று தான் சனம் கதைக்கிது''என்றார் வைரவநாதன். அண்டைக்கு கொழும்பானும் மனுஷியும் வந்து வீட்டைப் பார்த்து விட்டு என்னட்டை வந்தவை. அப்ப உவற்ர திருவிளையாடல் பற்றி சொன்னவை. தங்கன்ர மா, பலா, தென்னை யெல்லாம் இவர்தான் மதில்பாய்ந்து பிரயோசனம் எடுக்கிறதாம். என்ன எண்ணத்திலை மற்ற வீட்டுக்குள்

இனி வந்து இருக்கலாம், இல்லையென்றால் உப்பிடித்தான் நடக்கும். வீட்டை இடித்து விற்றாலும் விற்பானவன் என்றேன் நான்'' என்றார் நடராசா.

"ஆவணிக்கு வந்து விடுவோம் அது அவசர வாழ்க்கை. இந்த நிம்மதியை மறக்க முடியாது. கள்ளரின் கொடுமைக்காக பிள்ளைகள் விடப்பயப்படுகினை, இனி நாங்கள்போய் நிலவரத்தை சொன்னால் விடுவினை'' என்றார் கொழும்பான் விசுவலிங்கம்.

"பழைய மாதிரி எதையும் எதிர் பார்க்க கூடாது. எல்லாம் வேறு ஊரவர்கள் தான் அதிகம். நல்லவர்களும் உண்டு. போக்கணம் கெட்டவன் மாதிரி ஆட்களுமுண்டு, பிறந்த ஊரில் தலை நிமிர்ந்து வாழலாம் வாருங்கள்'' என்றார் நடராசா.

"நான் G.S சை நேற்று போய் சந்தித்தேன் முறைப்பாடு எழுதிதரச் சொல்லி எழுதி கொடுத்தனான். அவர் அந்த மனிதனைப் பற்றி ஏழு முறைப்பாடு வந்திருக்கு வெகுவிரைவில் பிடிபடுவார், களவைவிட பெண்களை தொந்தரவு செய்த முறைப்பாடும் இருக்காம், சுற்றி இவர் ஆட்கள் இல்லாத வீடுகளில் களவெடுக்கிற மாங்காய்களை பாடசாலைகளுக்கு முன்னால் மாங்காயை வெட்டி மிளகாய்த தூள் உப்பு போட்டு விக்கிறவைக்கு விநியோகம் செய்கிறாராம். சில வேளை பிள்ளைகளிடம் கொடுத்து விடுவதாகவும் சிலர் சொல்வதாகவும் கிராம சேவகர் சொன்னவர். நாங்கள் சிறு பிள்ளைகளாய் இருக்கிற காலங்களில் இரவிலை மற்றவர்களின் காணிகளில் மாடு மேய்க்கிற கிழவன் ஒன்று இருந்தது உமக்கு ஞாபகமோ?''. "ஓம் அந்த ஆல மரத்தடி மனிதன் தானே?'' என்றேன் நான். எப்படிப்பட்ட ஆட்களெள்ளாம் இந்த உலகில் வாழ்கிறார்கள் என்றார் விசு

தம்பியார், நான் மூன்று பேரும் காவல் கொட்டிலுக்கை இருந்தோம், இரவு ஒரு மணி நான் முழிச்சிருக்கிற முறை இருக்கிறன் பாவற் கொடிகன்னம் ஒரு உருவம் நிக்கிற மாதிரி தெரிய நான் பொடியளை எழுப்பி மெதுவாய் சுற்றி பிடித்து போட்டோம். பெரியாம்பியும் தம்பியும் பத்து அடிக்கு மேலை அடித்து போட்டாங்கள். பாக்க சகிக்காமல் மறித்து, பிடிங்கின மரக் கறியையும் குடுத்து, இனி இந்தப்பக்கம் பிடித்தால் சமாதிதான் என்று சொல்ல கும்பிட்டு போட்டு போனவன். எனக்கும் சரியா கோபம் தான் அந்த பிள்ளைகளின் எதிர் காலம் எனக்கு கண்முன்னால் வந்தது. எவளவு புத்தி சொல்லியும், இப்பவும் களவு தானே செய்துகொண்டு திரிகிறான்'' என்றார் வைரவநாதன்.

## பிறை

"உது அவனுக்கு சுகமாய் இருக்கு போல. கடைசி கூலி வேலைக்காவது போகலாமே. இவன் முந்தி பிரசாரப் பிரிவில் இருந்து உதைவாங்கிக் கொண்டு வெளியிலை வந்த நாள்தொடங்கி உந்த மாதிரி தான் திரிகின்றான்' என்றார் வைத்தியப்பு.

"அற நனைந்தவனுக்கு குளிரென்ன கூதலென்ன என்கிற மாதிரி உவனுக்கு சுறணையற்று எதோ தூக்கின காவடியை ஆடிக்கொண்டு இருக்கிறான். கடவுள் தான் வீட்டை பாதுகாப்பர். வயது போக அடங்குமோ அல்லது சாகும்வரை தொடருமோ தெரியாது'' என்று நடராசா சொல்லி முடிக்கவில்லை, அவன் மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் தொப்பியும் அணிந்து கொண்டு உரக்க உரையாடிக் கொண்டு வீதியால் போனான். அவன் இராசாவிலும் பெரியவன்.

மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கீதா ஸ்கூட்டியின் வேகத்தைக் கூட்டினாள். தவசி நகர் திருப்பத்தில் வேகமாக திருப்பவும் சிறு கல் முன் சக்கரத்தை பதம் பார்த்தது. தடாலென்று கீழே வண்டியோடு சாய்ந்தாள்.

எதிர்வீட்டிலிருந்த கமலாம்பாள் ஓடி வந்து அவளைத் தூக்க முயன்றாள். வயது மூப்பில் தளர்ந்த உடலால் இதெல்லாம் சாத்தியமா? நல்லவேளை தெருவில் போன யாரோ வண்டியையும் அவளையும் தூக்கி விட்டனர். கைத்தாங்கலாய் கமலாம்பாள் உள்ளே அழைத்துச் சென்றாள். முகத்தை துடைத்துவிட்டு தண்ணீர் தந்து ஆசுவாசப்படுத்தினாள் சீதா சற்று தெளிவானாள். நல்லவேளை தோளில் தொங்கிய ஹான்பாக் மேசைமீது வைக்கப்



# எங்கே நடந்தது தவறு?

பட்டிருந்தது. எடுத்து செல்லை உசுப்பி அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு விசயத்தைச் சொல்லி ஒருமணி நேரம் அனுமதி கேட்டாள்.

பேசி முடித்ததும் கமலாம்பாள் தேநீரை நீட்டினாள் நிமிர்ந்து வாங்கிய போது சுவரில் தெரிந்த போட்டோ அவளை அதிர வைத்தது.

"இது யாரும்மா?'' கீதா கேட்டாள்.

"இது என் பையன் விஷ்ணு. அம்பாள் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தான் என்ன பொல்லாத காலமோ கம்பனியில கட்டச்சொல்லிக் கொடுத்த இரண்டு இலட்சம் ரூபாவை வங்கியில கட்டினானாம். ஆனா கம்பனிக் கணக்கில வரவு வரவில்லையென வேலையிலிருந்து நீக்கிட்டிங்களாம். ஒரு வாரமாச்சு பாவம் பைத்தியமா அலையுறான்.''

"விஷ்ணுவை எனக்கு நல்லாத்தெரியும் அப்படிப்பட்ட ஆள் இல்லை. எங்கேயோ தவறு நடந்திருக்கு. அவர் பணம் கட்டினது எங்க வங்கியிலதான்... இவ்வளவு சீரியஸாகும்னு நினைக்கலை நீங்க கவலைப்படாதீங்க. உடனே இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறேன்.''

"எப்படியோ தாயி அந்தக் கடவுள்தான் உன்னை அனுப்பிவைச்சிருக்கார். நிச்சயம் ஒரு வழி பிறக்கும்.''

கீதா கிளம்பினாள்.

வங்கி மும்முரத்திலிருந்தது. கீதா தனது இருக்கையில் அமர்ந்தவுடன் அம்பாள் நிறுவனத்தற்கு அழைப்பை ஏற்படுத்தினாள். கம்பனி முதலாளிதான் பேசினார்.

பணம் காணாமற்போன திகதியும் தொகையும் கணக்கு எண்ணையும் கேட்டு குறித்துக் கொணடாள்.

அடுத்து அதே தொகை, அதே திகதியில் வேறு யாருக்காவது வரவு வைக்கப் பட்டிருக்கிறதா என்பதை கணனியின் உதவியுடன் பார்த்தாள்.

(தொடர்ச்சி 23 இல்)

# இந்து தர்மத்தில் பத்து

## இந்து தர்மத்தில் ஏழு

"ஏழு ஜென்மம் எடுத்தாலும் உன்பாதம் தொழுதிருப்பேன்" என்று இறைவனிடம் அடியவர்கள் வேண்டித் துதிப்பார்கள். ஏழு பிறப்பெடுத்தாலும் உங்களுக்கு நான் மனைவியாக வரவேண்டும் என்று சில பெண்கள் கணவரிடம் சொல்வதுண்டு. இதன்மூலம் ஏழு பிறப்பு இருப்பதாக பொருள்படும் அல்லவா. இதனையே இந்து மதத்தில் ஏழு பிறப்பென்று குறிப்பிடுகிறார்கள். அப்பிறவிகளை தேவர், மனிதர், நீர் வாழ்வன, விலங்குகள், ஊர்வன, பறப்பன, தாவரம் எனக் கூறுவர். இதனையே மாணிக்கவாசகப்பெருமான் "புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி" என்று சிவபுராணத்தில் பாடிக் கொண்டு போகிறார். இப் பிறவிகள் எல்லாவற்றிலும் மனிதப் பிறவியே மேலானதாகும்.

சமய நூல்களில் எல்லாம் ஏழ்கடலைத் தாண்டி ஏழுலகிற்கு அப்பால் என்ற சொற்றொடர்கள் வருகின்றன. அந்த ஏழுவகைக் கடல்களாக உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், மதுக்கடல், நெய்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், என்று சொல்லப்பட்டுள்ளன. இதே பாற்கடலைக் கடைந்து தேவர்கள் அமிர்தம் எடுக்கவில்லையா? இனி உலகங்கள் பற்றிப் பார்க்கையில் ஏழு உலகங்கள் இரு வகைப்படும் என சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. அவை ஏழு மேலுலகங்களென்றும் ஏழு கீழுலகங்களென்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

எத்தனையோ முனிவர்கள் இந்து தர்மத்திலே வாழ்ந்ததாக சொல்லப்பட்ட போதிலும் குறிப்பாக ஏழு முனிவர்களை இனம்காட்டியுள்ளனர். அவர்கள் முறையே கடல் குடித்த அகத்தியன், புலத்தியன், அங்கிரகௌதமன், வசிற்றன், காசிபன், மார்க்கண்டன் என்போரே ஆவர்.

இதே வேளை நாம் வணங்கும் ஏழு பெண் தெய்வங்களும் அருள் பாலிக்கிறார்கள். குறிப்பாக அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வாரகி, மாகேந்திரி, மாகாளி எனப்படுவோரே. இந்த ஏழு பெண் தெய்வங்களும் உமையின் அவதாரங்களேயாம். இத்தெய்வங்களுக்கு தனித்தனி கோவில்கள் வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

சப்தஸ்வரங்கள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ஸ ரி க ம ப த நி என்ற ஏழு எழுத்துக்களே சப்தஸ்வரங்கள். சங்கீதத்திற்கு அடிநாதமே சப்தஸ்வரங்கள். இறைவனைக் கவர்ந்த ராகமாகிய சங்கராபரணம் ஏழு எழுத்துக்களாலான ராகம் ஏழு தீர்த்தங்கள். இவை கடலிலும் நதிகளிலும் உள்ளன. புனித நதிகளாக குறிப்பாக தெய்வத்தன்மை பொருந்திய நதிகளாக சொல்லப்படுபவை கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, காவேரி, குமாரி, கோதாவரி ஆகியனவே. எத்தனையோ சமயக்கதைகளில் எல்லாம் இந்த நதிகளின் புனிதம் பற்றி பேசப்படுகிறது. கோவில்களிலே கும்பாபிசேகம்



நடைபெறும் பொழுது ஏழு நதிகளின் நீர்களையும் மந்திரங்களால் வரவழைத்து நீர் கலசங்களிலே ஏற்றி அபிஷேகம் செய்வதைக் காணலாம்.

இனி முகில்கள் பற்றிப் பார்ப்போம். முகில்கள் ஏழு வகையானதாக இருக்கின்றன. அவைகள் ஒவ்வொரு ஊழி காலத்திலும் வருபவையே. அந்த முகில்களை ஆவர்த்தம், பொற்காலம், சங்காலம், அனுவனம், நீர்த்தாரி, சொற்காரி, சினவருடம் என்று அழைப்பர்.

இன்மை, மறுமை என்று முன்பு பார்த்தோம் அல்லவா. மறுமையிலே சொர்க்கம், நரகம் என இரு வாழ்வு வரும். இந்த நரகத்திலே ஏழு வகை நரகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நரக வாழ்வு எம் வினைப்பயனுக்கு ஏற்றதாய் கூடசலாம், இரௌரம், கும்பிபாகம், பூதி, அள்ளல், செந்து, மகாபூதி என வரும்.

சூரிய ஒளியிலே ஏழு நிறங்கள் தெரிகின்றன. இந்த ஏழு நிறங்களையும் குதிரைகளாகக் கொண்டு ஒரு சில்லு பூட்டி தேரில் சூரியன் வருவதாகச் சூரியன் கோயில்களிலே கற்பிக்கப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் பெண்களின் ஏழு பருவங்கள் பற்றி சொல்லப்படுகின்றன. அரிவை, தெரிவை, பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, பேரிளம், பெண் எனச் சொல்லப்பட்ட போதிலும் தெய்வங்களுக்கு சில விதி விலக்குகள் உண்டு என்பர். ஒருவருடைய சாதகக் குறிப்பில் செவ்வாய் ஏழாம் இடத்தில் இருந்தால் திருமணம் நடப்பதில் தாமதங்கள் ஏற்படும். எண் சோதிடப்படியும் எண் ஏழாதிக்ககாரர்கள் கலைகளில் சிறந்தவர்களாக இருப்பார்கள். எக்காரியமும் தாமதமாகவே நடைபெறும். ஆனால் ஆங்கிலேயர் ஏழை லக்கி செவன் என்பர். எண் சோதிடகாரர்கள் ஏழை கேதுவிற்கு ஒப்பிடுகிறார்கள். "ஏழு மலையானை எண்ணித் துதிப்போர்க்கு யாதும் குறையிலையே" என்பதற்கு அமைய நாமும் துதிப்போமாக.

**கவிஞர் துரையர்**



# புலிக் காதலனைக் காட்டிக் கொடுத்த காதலி



சென்ற வாரம் (சாவகச்சேரி) மறவன்புலவிலுள்ள வீடு ஒன்றில் தற்கொலை அங்கி உட்பட வெடி பொருட்கள் பல மீட்கப்படுவதற்குக் காரணமாக இருந்தது, முன்னாள் விடுதலைப்புலியைச் சேர்ந்தவரின் காதலி சமுத்திராவே.

சாவகச்சேரி மறவன்புலவில் தற்கொலை அங்கியும், 12 கிலோ கிராம் D.N.D வெடிபொருட்கள் அடங்கிய மூன்று பொதிகளும், நூறு – 3மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள், 4 கிளைமோர் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறான வெடிபொருட்கள், மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியது, அந்தப் பொருட்களை வைத்திருந்த புலிச் சந்தேக நபரான ரமேஸ் என்று அழைக்கப்படும் 32 வயதுடைய எட்வேட் யூலியனின் காதலியான சமுத்திராவே ஆகும்.

இந்தச் சமுத்திரா ஏற்கனவே திருமணமானவர். எட்வேட் யூலியன் இவரது மூன்றாவது காதலனாவார்

எட்வேட் யூலியன் அவரது பதின்மூன்றாவது வயதில், மன்னார் முருங்கனில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருக்கையில், தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டார்.

இவர், விடுதலைப் புலிகளுக்கும், அரசபடையினருக்கும் இடையே நடைபெற்ற புதுமாத்தளன் யுத்தத்தில் இறந்துவிட்டதாக இவரது உறவினர்களால் கருதப்பட்டார்.

2013 ஆம் ஆண்டு இவருடைய தாயார் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மரணமடைந்தார். மரணச்சடங்கில் கலந்து கொண்டு, உயிருடன் இருப்பதாக முதன் முதலில் தன்னை வெளிக் காட்டினார்.

அதையடுத்து, இவர் சுழிபுரத்தில் தனது முதல் மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இந்தத் திருமணத்தை அடுத்து அவருக்கு ஒரு பிள்ளையும் பிறந்தது.

அங்கு வாழ்கையில் அவர் தனது மனைவியை விட்டுவிட்டு சிவதர்சன் என்ற லொறி சாரதியின் உதவியுடன் மீசாலையில் வீடு ஒன்று எடுத்து வாழ்ந்து வந்தார்.

யுத்தம் முடிவடைந்த பிற்பாடு இராணுவத்தில் தமிழர்களைச் சேர்க்க முயற்சித்தபோது, சிவதர்சனின் சகோதரர் ஒருவரும் இராணுவத்தில் சேர்ந்து கொண்டார்.

இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்தம் மே மாதம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வந்த பிற்பாடு 14500 விடுதலைப் புலிகள் இராணுவத்திடம் சரணடைந்தார்கள்.

அவ்வாறு சரணடைந்தவர்களைப் புனர்வாழ்வு வழங்கி, அதன் பின்னர் இராணுவத்தினர் விடுதலை செய்தார்கள்.

ஆனால் எட்வேட் யூலியன் இந்தத் திட்டத்தில் சேர்ந்து புனர்வாழ்வு பெறவில்லை எனத் தெரிய வருகின்றது. அவர் தன்னை இனங்காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து வந்தார்.

அவ்வாறு அவர் மீசாலையில் வாழ்ந்து கொண்டிருக்கையில், எட்வேட் யூலியனிற்கும் அவரது காதலி சமுத்திராவிற்கும் இடையில் அடிக்கடி பிரச்சினைகள் தோன்றின.

இருவரும் சண்டைகள் பிடித்தார்கள். அவரைத் தான் இருக்கும் அறைக்குள் வரக்கூடாது என எட்வேட் யூலியன் உத்தரவிட்டு ஏசி, அடித்துத், துரத்தியுள்ளார்.

காதலனான எட்வேட் யூலியன் தன்னைத் துன்புறுத்தியதைத் தாங்க முடியாத காதலி சமுத்திரா காதலன் எட்வேட் யூலியன் கஞ்சா, மற்றும் போதைப் பொருட்கள் என்பவற்றைக் கடத்தி விற்பனை செய்வதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பொலிஸார் எட்வேட் யூலியனை மடக்கிப் பிடிக்கத் திட்டமிட்டார்கள்.

இந்நிலையில் சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் குறித்த வீட்டிற்கு எட்வேட் யூலியன் வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, பொலிஸார் அவர் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள்.

ஆனால் இரவு 9 மணியாகியும் எட்வேட் யூலியன் வீட்டிற்கு வரவில்லை. அதையடுத்து அதிரடியாகப் பொலிஸார் அவரின் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

வீட்டில் அவரது முதல் மனைவியின் பிள்ளையும், அவரது காதலி சமுத்திராவும் மற்றும் எட்வேட் யூலியனின் தந்தையுமே வீட்டில் இருந்தார்கள். பொலிஸார் வீட்டில் தேடுதல் நடாத்தினார்கள்.

அப்போது படுக்கையறைத் தட்டு ஒன்றில் இருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

பொலிஸார் அவரது காதலியான சமுத்திராவை விசாரணை செய்த போது, எட்வேட் யூலியன் அக்கராயன் பகுதிக்கு அடிக்கடி சென்று வருவதாகத் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்து அக்கராயனில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எட்வேட் யூலியன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட எட்வேட் யூலியனைக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் மேற் கொண்டனர்.

அவர் சாவகச் சேரிப் பகுதிக்கு மாலை அழைத்து வரப்பட்டு பின்னர் கொழும்பிற்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி சிங்களப் பத்திரிகை தாள் ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் இருந்தது.

இவ் வெடிபொருட்கள் பழையன அல்ல என வடக்குப் பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்த வெடிபொருட்களை யார் கொண்டு வந்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. எட்வேட் யூலியன் கொண்டு வந்தால், ஏன் கொண்டு வந்தார்? எங்கிருந்து கொண்டு வந்தார்? எதற்காகக் கொண்டு வந்தார்? எப்படிக் கொண்டு வந்தார்? என்ற கேள்விகளுக்கு விடை தெரிய வேண்டியது மிக மிக அவசியமாகும்.



## 100 பிள்ளைகள் எனக்கு வேண்டும்

## பாகிஸ்தான் மருத்துவர்



பாகிஸ்தானில் வசிக்கும் 43 வயது ஜான் முகமது ஒரு மருத்துவர். சொர்க்கத்தில் தனக்கு ஓர் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக 100 குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இருக்கிறார். "எனக்கு 100 குழந்தைகள் பிறக்க வேண்டும். இஸ்லாம் மதத்தில் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது என் இலட்சியம்.

இந்தக் குழந்தைகளின் உதவியால் எனக்கு சொர்க்கத்தில் நிச்சயம் ஓர் இடம் கிடைக்கும். இதுவரை 14 ஆண் குழந்தைகளும் 21 பெண் குழந்தைகளும் பிறந்திருக்கிறார்கள். 2 குழந்தைகள் பிறந்து சில வாரங்களே ஆகியிருக்கின்றன. என் இலட்சியத்துக்காக நான் நான்காவது திருமணம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன். குழந்தைகளோடு சேர்த்து மொத்தம் 39 பேரும் 12 அறைகள் கொண்ட ஒரு வீட்டில் வசிக்கிறோம். எனக்கு மாதம் 1 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. அதனால் குழந்தைகள் கேட்பதை உடனே வாங்கிக் கொடுத்து விட முடிகிறது.

ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் இடையே நான் வித்தியாசம் எல்லாம் பார்ப்பதில்லை. எல்லா குழந்தைகளையும் நல்ல பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கிறேன். என்னால் 35 குழந்தைகளின் பெயர்களையும் சொல்ல முடியும். ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்கள் என்பது வரை அறிந்து வைத்திருக்கிறேன். நான் க்ளினிக்கில் இருந்து திரும்பும்போது 15 குழந்தைகளாவது ஓடி வந்து என்னைக் கட்டிக்கொள்வார்கள். அந்த சந்தோஷம் வேறு எதிலும் கிடைக்காது. ஓய்வு நேரங்களில் குழந்தைகளோடு விளையாடுவேன். இந்த வாழ்க்கை வாழ நான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இறைவனுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்'' என்கிறார் ஜான் முகமது.

## எமது ஆராதனைகள்

| | |
|---|---|
| ஞாயிறு ஆராதனை காலை | 8.00 மணி மகாறம்பைக்குளம் |
| ஞாயிறு ஆராதனை மாலை | 3.00 மணி தவசிகுளம் |
| புதன் பைபிள் படிப்பு மாலை | 4.00 மணி தவசிகுளம் |
| வியாழன் பைபிள் படிப்பு மாலை | 5.00 மணி பெரியார்குளம் |

வாருங்கள் தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :
Bethel Missionary Church,
Santhasolai Road, Maharambaikulam,
Vavuniya.
Paster : L. ARULTHAS
Tel: 077 4378619
E-mail : bethellanka@gmail.com


(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## எங்கே நடந்தது...

அடுத்த சில நிமிடங்களில் அது உண்மையைக் கக்கி விட்டது. அம்பாள் நிறுவனம் என்ற கம்பனிக்கு அதே தொகை அதே திகதியில் வரவு வைக்கப் பட்டிருந்தது. அந்தக் கம்பனியை அழைத்துக் கேட்டதில் அவர்கள் அந்த திகதியில் வேறு தொகை தான் கட்டப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். விஷயம் இதுதான் அம்பாள் நிறுவன கணக்கு எண் 1300023 ஆனால் அம்பாள் இஞ்சினியரிங்ஸ் கணக்கு எண் 1300032. பிங்கரிங் மிஸ்டேக். சம் மந்தப்பட்ட அதிகாரியை அழைத்து மாற்றல் உத்தரவு போடச் சொல்லி பணித்தாள்.

பணம் அம்பாள் நிறுவனத்தின் கணக்கில் வரவு வைக்கப் பட்டது.

மீண்டும் அம்பாள் நிறுவனத்தின் முதலாளியை அழைத் தாள்.

"சேர் உங்கள் கணக்கில பணம் வரவு வச்சாச்சு. பாவம் சேர் விஷ்ணு நல்ல மனுசன் இதில அவரோட தப்பு எதுவு மில்லை.மிகவும் கஸ்ரப் பட்ட குடும்பம் அவர் அம்மா வைப் பார்த்தேன். முகத்தில மூக்குத்தி தவிர வேற எதுவுமில்ல இவங்களா திருடியிருப்பாங்க."

"மன்னியுங்கள் இவ்வளவு தூரம் நீங்களே சொல்லும் போது நான் மறுப்பேனா இதோ இப்பவே இடைநிறுத்த உத்தரவை நிறுத் துகிறேன்" என்றார் அவர்.

அடுத்த அரைமணிக்குப் பின் விஷ்ணு நன்றி சொல்ல கீதாவின் அறைக்கு வெளியே காத்திருந் தான்.

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மலையக மக்களின் ...

**13. பொதுச் சேவை**

இடர் முகாமைத்துவம் தொடர் பான விசேட ஏற்பாடுகள் ஏற் படுத்தப்பட வேண்டும்.

கட்டாய விலை கட்டுப்பாடு மற்றும் பரிசோதனை முறைகளை அறிமுகப்படுத்தல்.

**14. தேர்தல் சீர்திருத்தங்கள்**

01. தேர்தல் முறையில் மக் களினால் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதி மக்கள் சேவையில் திருப்தியின்றி செயற்படும் போது அவரை மீண் டும் திருப்பி அழைக்கும் சந்தர்ப் பம் உருவாக்கப்பட வேண்டும்.

மக்கள் பிரதிநிதியாக செயற்பட விரும்பும் நபர் குறிப்பிட்ட கல்வி தகைமையை பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆண்/பெண் உறுப்பினர்க ளின் எண்ணிக்கையை 2/3 இற்கு அதிகரிக்க முடியாதவா றும் வலது குறைந்தோருக்கும் பிரதிநிதித் துவப்படுத்தக்கூடிய வகையில் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

விசேட தேவையுடையவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்து தொழில் புரியும் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது வாக்குப் பதிவை தேர்தல்களின்போது வழங்குவதற் கான பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்.

**18. பொதுமக்கள் பாதுகாப்பு**

பொது மக்கள் பாதுகாப்பு திட்டமொன்றை விசேடமாக அரசு முன்மொழிய வேண்டும்.

**19. நிதி**

அரசாங்க நிதி நிறுவனங்கள் முறையாக இயங்குவதையும் அதை கண்காணிப்பதையும் அரசு உறுதிப்படுத்துவதுடன் மக்க ளுக்காக அரசாங்கத்தால் பராமரிக் கப்படும் நிதிகள் உதாரணமாக EPF, ETF முறையான செயற் திட்டத்தில் இயங்குவதுடன் தேவை யற்ற விதத்தில் இந்நிதியை கை யாளுதல் நீக்கப்பட வேண்டும். அத்துடன் இந்நிதியின் மூலம் வழங்கப்படும் கடன் தொகைக்கு தொழிலாளர்களிடமிருந்து குறை ந்த வட்டியை பெற்றுக்கொள்ளு தல் முக்கியமானதாகும்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நீரிழிவும் ...

னைகள் தொடர்ந்தும் இருந் தால் மெற்போமினை மெதுவாக வெளிவிடும் *Slow Release* (SR) போன்ற மருந்துகளை பாவித் துக் கொள்ளலாம்.

மிகமிகச் சிலருக்கு மெற் போமின் மருந்துகளின் செயற் பாடுகள் உடலில் முடிவடைந்த பின்பு கழிவு மெற்போமின் உடலில் இருந்து அகற்றப்படவேண்டும். அதாவது (Lactic Acid) லக்ரிக் அசிட் எனும் இரசாயனப் பதார்த் தம் உடலில் அதிகரிப்பதால் லக் ரிக் அசிடோசிஸ் எனும் நிலை ஏற்படலாம். எனினும் இது மிக மிக அரிதான ஒரு பக்கவிளைவா கும்.

உடல் பருமன் உள்ளவர்களும் நீரிழிவு நோய் வருவதைத் தடுக் கவும் தள்ளிப்போடவும் எடையை குறைக்கவும் மெற்போமின் பயன் படுத்தப்படுகின்றது. பொலிசிஸ்ரிக் ஓவரி(Polycystic Ovarian syndrome) எனப்படும் மாதவிடாய் பிரச்சினை யுள்ள, உடல் பருமனான பெண்க ளுக்கும் இந்த மருந்து பயன்படுத் தப்படுகின்றது. இது அவர்களில் முட்டை வெளியாதலை (Ovulation) தூண்டுவதோடு உடற்பருமனைக் குறைக்கவும் உதவுகின்றது.

மெற்போமின் மருந்தானது சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற தவறான அபிப்பிராயம் மக் களிடையே உள்ளது. உண்மை யில் இது சிறுநீரகம் பாதிப்படை யாமல் தடுக்கும் ஒரு மருந்தா கும். உலகளாவிய ரீதியில் அங்கீ கரிக்கப்பட்ட முதற்தர (1st line) நீரிழிவு மருந்து மெற்போமின் ஆகும். நீரிழிவு நோயாளரொரு வரின் சிறுநீரகத் தொழிற்பாடு குறிப்பிட்ட ஓர் அளவைவிட பழு தடையும் போது வைத்தியர்கள் நோயாளியின் மெற்போமின் அளவை குறைக்கவோ அல்லது நிறுத் தவோ வேண்டி ஏற்படுகின்றது.

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழினியின் ...

இவ்வாறு, பல விடயங்களை தனது அனுபவக் கூற்றாக தமி ழினி அந்த நூலில் பதிவு செய் துள்ளார்.

இவற்றை எல்லாம் தமிழினி எழுதவில்லை திட்டமிட்டு, அவ ரது குறிப்புக்களுடன் இடைச் செருகலாக, விடுதலைப்புலிகளை யும், தலைவரையும் கொச்சைப் படுத்தும் வகையில் அவை புகுத்தப்பட்டுள்ளன என்பதுதான் இப்போது சிலரால் முன்வைக்கப் படும் குற்றச்சாட்டு.

Tamilini-death இறுதிப் போர் வரை பயணித்தவர்கள் பலருக்கு தமிழினியின் அனுபவக் குறிப்புக்க ளுடன் முரண்பாடுகள் இருக் காது என்றே கூறவேண்டும். இறு திக் கட்டத்தில் கூட விடுதலைப் புலிகள் ஏதேனும் ஒரு தந்திரோ பாயத்தை பயன்படுத்தி தப்பலாம் என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள் பலரிடமும் இருந்தது உண்மை. போரில் தோல்வியுற்றாலும் கணி சமான போராளிகளும் பிரபாகரனும் அழிவடைவார்கள் என்பதை எவ ரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அனைத்தும் நடந்து முடிந்து விட்டது.

இறுதிப் போரில் என்ன நடந் தது..? பிரபாகரன் இறுதி நேரத் தில் என்ன மனநிலையில் இருந் தார்..? புலிகளின் இந்த படுதோல் விக்கு என்ன காரணம்..? என்பது தொடர்பிலான பல கேள்விகளுக்கு இன்னமும் விடை தெரியவில்லை இறுதிவரை இருந்து, இப்போது உயிருடனிருக்கும் போராளிகளே சில கேள்விகளுக்காவது விளக் கமளிக்க வேண்டும். தமிழினி இந்த நூலில் பதிவு செய்துள் ளவை சரியா, பிழையா என்பது குறித்தும் அவர்கள் கருத்துக் கூறுவதே சரியானது.

விடுதலைப்புலிகளை எதிர்ப்ப வர்கள் அல்லது, விடுதலைப்புலி களால் பாதிக்கப்பட்டவர்கள் ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலி களைக் கொச்சைப்படுத்துவதும், பிரபாகரனின் மரணத்தை கேலிக் குரியதாக சித்தரிப்பதையும் காண் கின்றோம். இன்னொரு பக்கத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை எவ்வித தவறும் செய்யாத தூய் மையான அமைப்பு என சிலர் கூறுகின்றார்கள். அதனையும் விட, பிரபாகரன் இன்னும் உயி ருடனிருப்பதாக சித்திரிப்பவர்க ளும் இருக்கின்றார்கள். இவற் றிற்கு மத்தியில் நடுநிலையான பார்வையும் பதிவுகளுமே அவசிய மானவை.

தமிழினி தனது பதிவுகளில் சிலவற்றை கூறியிருக்கின்றார். மேலும் இவ்வாறான பதிவுகள் வர வேண்டும். வரலாற்றில் உண்மை களை மூடிமறைக்க வேண்டிய அவசியமில்லை.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நீதித்துறையை ...

ஆனால் இவர்கள் தமது அர சியல் நலன்களுக்காக மட்டுமே இதனை எதிர்த்தனரே ஒழிய, இவர் கள் சிறிமாவை ஆதரிக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில், ஒக்ரோபர் 16 அன்று திட்டமிட்ட படி சிறிமா மீதான விவாதம் இடம்பெறும் எனவும், இதில் எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியாது எனவும் சட்டம் தன் கடமையைச் செய்யும் எனவும் ஐ.தே.க அறிவித்தது. இந்நிலை யில் ஒக்ரோபர் 12 அன்று கொழும் பின் புறநகர்ப் பகுதியான தெகி வளையில் பாரிய மக்கள் ஒன்று கூடலை ஜே.ஆர். நடத்தினார். இக்கூட்டத்தில், சிறிமாவிற்கு இடம்பெற்றது போலவே ஐ.தே.க அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுவா னது ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத் தால் இவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜே.ஆர் தெரிவித்தார்.

அமைச்சரவை விவாதம் இடம் பெறுவதை முன்னிட்டு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை, அவசரகாலச் சட்டமும் பிரகடனப் படுத்தப்படவில்லை. ஆனால் பாது காப்புக் கடமையில் ஈடுபடுவதற் கான அழைப்பு காவற்துறையினர் மற்றும் இராணுவத்தினர் மீது விடுக்கப்பட்டது. இவர்கள் தமது தலைமையகங்களைப் பாதுகாக் குமாறும் அறிவுறுத்தப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடா ளுமன்றுக்கு வரும் போது கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஜே.ஆரால் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்மூலம் இவர் தனது அமைச்சரவை அதி காரத்தைப் பாதுகாத்தார்.

இதையொத்த தந்திரோபா யங்கள்:

கடந்தகால வரலாற்றில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தை ஆரா ய்ந்து இதிலிருந்து எதிர்காலத் திற்கான பாடங்களைக் கற்றுக் கொள்ளும்போது, ஜே.ஆர். போலவே மைத்திரி-ரணில் அரசாங்கமும் ஒரேவிதமான தந்திரோபாயத்தையே பயன்படுத்துகின்றது. இத்தந்தி ரோபாயமானது மைத்திரி-ரணில் அரசாங்கம், மகிந்த தொடர்பான அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்கு உதவும்.

யோசித கைதுசெய்யப்பட்ட போது, மகிந்தவின் இளைய மக னான ரோகித தற்போதைய நல் லாட்சி அரசாங்கத்திற்கு தனது முகநூலின் ஊடாக எச்சரிக்கை ஒன்றை வழங்கியிருந்தார். அதா வது 'அன்பிற்குரிய நல்லாட்சி அரசாங்கமே, நீங்கள் தற்போது சிங்கத்தின் வாலின் மீது நிற்கி றீர்கள். தற்போது இந்தச் சிங்கம் உங்களைத் துண்டு துண்டாக்கி விடும் என நீங்கள் நினைக்க வில்லையா?' என்பதே ரோகித வின் முகநூல் எச்சரிக்கையாகும்.

இது ராஜபக்சாக்களின் தற் போதைய பொதுவான போக்கைச் சுட்டிநிற்கிறது. ஆகவே ராஜபக் சாக்களிடமிருந்து எழும் இவ் வாறான அச்சுறுத்தல்களுக்கு எதி ராக சட்டங்களை அமுல்படுத்து வதற்கு மைத்திரி-ரணில் அர சாங்கமானது காவற்துறை மற் றும் நீதிச் சேவையை மேலும் பலப்படுத்த வேண்டிய கடப் பாட்டைக் கொண்டுள்ளது.

'எல்லா இடங்களிலும் விடுக் கப்படும் அச்சுறுத்தல்களானது நீதிக்கான அச்சுறுத்தலாகும்' என மார்டின் லூதர் கிங் குறிப்பிட்டுள்ளார்

தினச்செய்தி
வாரமலர்

# நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றவும்!

## யாழ். மாவட்ட அதிபருக்குப் பகிரங்க வேண்டுகோள்!

"வேலுண்டு வினையில்லை மனமே"

நல்லூர் கந்தன் ஒருவருக்குச் சொந்தமாக எவ்வளவு காலம் தான் இருப்பது? வரைமுறை இல்லையா? என்ற கேள்வியுடன் நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நம்பிக்கைச் சட்ட விதிகளின்படி, கோவில் ஒன்றைப் பொதுக் கோவிலாக மாற்றியமைக்கும் அதிகாரம் அந்த கோவில் அமைந்திருக்கும் மாவட்டத்தின் அதிபருக்கு உண்டு.



எனவே நம்பிக்கைச் சட்டத்தின் கீழ், நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை சென்ற இருபத்து எட்டாம் திகதி (28.மார்ச்) யாழ் மாவட்ட அதிபர் நா.வேதநாயகத்திடம் அவரது காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுப்பதாக யாழ் மாவட்ட அதிபர் வேதநாயகம் "தினச்செய்தி" க்கு உறுதியளித்தார்.

இதையடுத்து மாவட்ட அதிபர், நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு விடப்பட்ட கோரிக்கைக்கு உரிய நடவடிக்கைகளை விரைவில் முடுக்கி விடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வளவு காலம் தான் தனியொருவரின் கட்டுப்பாட்டின் கீழ் கட்டுப்பட்டு இருப்பது? அலங்காரக் கந்தனை இந்தக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்போம். எங்களைப் போல் நல்லூர் கந்தனும் சுதந்திரக் காற்று சுவாசிக்க வழிவகை செய்வோம்.

கந்தா! கதிர்வேலா! கடம்பா! நீ எங்கள் குலதெய்வம்! நீ வாழ நாங்கள் வழிசெய்வோம்! உன் அருள் என்றும் எங்களுக்கு வேண்டும்!.

நல்லூர் கந்தசுவாமி கோவிலைப் பொதுக் கோவிலாக மாற்றுமாறு யாழ் மாவட்ட அதிபருக்கு அனுப்பி வைத்த வேண்டுகோளை இங்கே பிரசுரிக்கின்றோம்.

ஐயா,

நல்லூர் கந்தசுவாமி கோவில்

நல்லூர் கந்தசுவாமி கோவில் இந்து விவகார கலாச்சாரத் திணைக்களத்தில் HA/05/JA/224 என்ற இலக்கத்தில் ஓர் இந்து ஆலயமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கோவில் சம்பந்தமாக எந்த விபரமும் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை, இந்து விவகார கலாசாரத் திணைக்களத்திற்கோ இன்றேல் வேறு அரச திணைக்களங்களுக்கோ வழங்கப்படவில்லை.

1749 ஆம் ஆண்டு கிருஸ்ண ஐயர், சுப்ப ஐயருடன் இணைந்து ரகுநாத மாப்பாண முதலியார் இந்தக் கோவிலை - கிடைத்த தகவலின் படி பொதுமக்களிடம் சேர்த்த பணத்தைக் கொண்டு நிர்மாணித்தார்கள்.

அதையடுத்து கிருஸ்ண ஐயர், சுப்ப ஐயர் இந்தக் கோவிலின் முதல் குருக்களாகவும், ரகுநாத மாப்பாண முதலியார் இந்தக் கோவிலின் நிர்வாகியாகவும் மக்களால் நியமிக்கப்பட்டனர்.

இந்தக் கோவில் "குருக்கள் வளவில்" கட்டப்பட்டது. இந்தக் குருக்கள் வளவு முஸ்லீம்களுக்குச் சொந்தமான இடமாகும். அங்கு சர்வமதத் துறவியான சிக்கந்தர் என்ற முஸ்லீம் யோகிக்கு ஒரு சமாதி அமைந்திருந்தது. முஸ்லீம்கள் அதனை வழிபட்டனர். அதனருகில் முஸ்லீம் மசூதி ஒன்று அமைந்திருந்தது. அந்தக் குருக்கள் வளவில் முஸ்லீம்களும் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதியில் தான் நல்லூர் கோவில் அமைக்கப்பட்டது. இந்தக் கோவில் நிலம் யாருக்குமே சொந்தமல்ல. இவ்வாறு இந்தக் கோவில் நிலத்தை யாரும் உரிமை கொண்டாடினால் அது சட்டப்படி தவறு என்பது எங்கள் கருத்து.

1749 ஆம் ஆண்டு ரகுநாத மாப்பாண முதலியார் நிர்வாகியாக மக்களால் நியமிக்கப்பட்டார்.

அதையடுத்து அவரது பரம்பரையினர் தொடர்ந்து இந்தக் கோவிலை நிர்வகித்து வருகின்றனர்.

இந்தக் கோவிலை இன்றுள்ள குமார தாஸ் மாப்பாண முதலியார் 1964 ஆம் ஆண்டு தொடக்கம் நிர்வகித்து வருகின்றார். வரை யார் நிர்வாகியாக நியமித்தார்கள் என்பது யாருக்குமே தெரியாது. அவர் இந்தக் கோவிலின் உரிமையாளர் போல நடந்து கொள்வது கவலையான விடயம்.

எனவே இந்த கோவில் நம்பிக்கைச் சட்ட விதிகளுக்கு அமைய, உங்களிற்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுக் கோவிலாக அறிவித்து, ஒரு பொது நிர்வாக சபையை தெரிவு செய்து இந்தக் கோவிலை அந்த நிர்வாக சபையிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் இதுவரை காலமும் பொதுமக்கள் வழங்கி வந்த நிதிக்கான கணக்கு வழக்குகள் தற்சமயம் கோவிலை நிர்வகித்து வரும் நிர்வாகியான குமாரதாஸ் மாப்பாண முதலியாரால் அறிவிக்கப்படவில்லை.

எனவே இந்தக் கோவில் நிர்வாகத்தை நிர்வகிக்க ஏற்றுக் கொண்ட காலம் தொடக்கம் இன்று வரைக்கான வருடாந்தக் கணக்குகளை நிர்வாகி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இத்துடன் கே. ரி. இராஜசிங்கம்.

பிரதம ஆசிரியரும் அவருடன் சேர்ந்து ஆயிரக் கணக்கான "தினச்செய்தி" வாசகர்களும்.

"தினச்செய்தி" வாசகர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் இந்தக் கடிதத்தைப் பிரதி எடுத்து, உங்கள் பெயர்களில் மாவட்ட அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு கந்தனின் திருநாமத்தை ஓதிக் கொண்டே இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

தர்மம் வெல்லட்டும்!

சத்தியம் நிலைக்கட்டும்!

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஏப். 04, 2016 அன்று வெளியிடப்பட்டது.